Registered as a News Paper

பக்கம் - 26

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்-15 | வெள்ளி-32 | 08-14 ஒக்டோபர் 2004

## தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்



# திருமுக அறிமுகம்

கலையுணர்வும், தமிழ் உணர்வும் அந்தக் கவியுள்ளத்தின் ஆத்மாவாகவே இருந்தது. இயற்கையையும், அழகையும் அவற்றின் சகல வடிவங்களிலும் ஆராதித்த உள்ளம் அவருக்குரியது. முரட்டுத்தனமான தோற்றத்திற்கு முற்றிலும் முரணான மென்மையான மனம் அந்தக் கவிஞனின் தனித்துவச் சொத்தாகும். பிரேம தியானம், சௌந்தர்ய பூஜை என்ற அழகொளிரும் பெயர்களை தனது கவிதைத் தொகுதிகளுக்கு சூட்டியதை வைத்தே அவரது ரம்மியமான கவிதா நெஞ்சத்தின் துடிப்பை உணரமுடியும். இத்தனைக்கும் உரிய அந்தக் கலைஞன் சிலோன் விஜயேந்திரன் அண்மையில் தமிழகத்தில் தீவிபத்தொன்றில் சிக்கி அமரராகி விட்ட சேதி மனதை உலுக்கவே செய்தது.

எவரையும் தோழர்கள் என விழிக்கும் விஜயேந்திரன் தோழமைக்கு மதிப்புக்கொடுக்கும் ஒரு மனிதனாக கடைசிவரை வாழ்ந்தார் என்றே கூறவேண்டும்.

தணியாத கலைத்தாகம் கொண்டு அவர் சாதிக்கத்துடித்தவை ஏராளம்; சாதித்ததோ சொற்பம். ஆனாலும் அவை அற்பமென தள்ள முடியாத அழுத்தமான உணர்வை ஏற்படுத்தக்கூடியவை.

கல்லடி வேலன் என்ற பெயரை அறியாதோர் ஈழத்தமிழின வரலாற்றை அறியாதோரே. அந்த அற்புதமான ஆசு கவியின் பேரன் தான விஜயேந்திரன். ஆனாலும் தாத்தாவின் விலாசத்தில் பெயர் தேட விரும்பாத அவர் விஜயேந்திரன் என்ற தனித்துவ அடையாளத்தையே பதிக்க விரும்பினார்.

பரம்பரை கவித்துவம் அவருள்ளும் அவரின் இளவயதிலேயே கொப் புளிக்கத் தொடங்கியது இயற்கையே.

கல்லூரி நாட்களிலேயே நண்பர் ஒருவருடன் இணைந்து "வைகறை" என்ற சஞ்சிகையை வெளியிட்டார். விஜயேந்திரன் கவிதைகள், பிரேமதியானம், சௌந்தர்ய பூஜை போன்ற தொகுப்புகள் அவருள்ளான தமிழுணர்வை அடையாளப்படுத்தின. தாத்தாவின் பெயரைத்துலங்க வைக்கும் வகையில் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களின் வாழ்வை நூலாக்கினார்.

Mono Acting என்ற தனிநபர் நடிப்பில் அவர் திறமைமிக்கவராக விளங்கினார். பலமேடைகளில் இந்த கலை வெளிப்பாடு அரங்கேறிய அவரைச்சுற்றி ஒரு இலக்கிய குழாம், ரசிகர் கூட்டம், கலைஞர்



கலைஞன் சிலோன் விஜயேந்திரன்

அணி எப்போதுமே இருக்கவே செய்தது.

அவர் அற்புதமான கவிஞன் மட்டுமல்ல அருமையான ரசிகனும் கூட இனிய இசை என்றால் கேட்குமிடத்தில் நின்று அதனோடு ஒன்றிலயித்துப்போய்விடுவார்.

மரபை மட்டுமல்ல புதுமையையும் வரவேற்கும் இயல்பு அவருக்கானது. இந்தியா சென்று தமிழ் திரையுலகில் தன்னை அடையாளப்படுத்தவிரும்பிய போதிலும் அவர் எதிர்பார்த்த வாய்ப்புகளை அந்தக் கலையை வியாபாரமாக்கும் தமிழகச்சினிமா உலகம் வழங்கவில்லை.

ஆனாலும் சுமார் நூறுபடங்களில் நடித்தார். வாழ்க்கையை ஓட்ட வேண்டுமே... அதற்காகத்தான். ஆயினால் அவரது கலை மனம் ஓயவில்லை. மறைந்த பெரும் கவிஞனை கம்பதாசனை தமிழுலகம் மறந்துவிடுமோ என அஞ்சிய அவர் அவரை, அவர் வாழ்வை, அவரது கவிதைகளை நூலுருவாக்கும் அரும்பணியைச் செய்தார்.

அறுபது ஆண்டுகால திரைப்படப் பாடல்களை வரிசைப்படுத்தி தொகுத்து ஒழுங்குபடுத்தி நூலாக்கி ஒரு வரலாற்று பணியைச்செய்தார்.

தமிழ்த் திரைப்படம் ஒன்றை இயக்கும் அவரின் முயற்சி அரைகுறையில் நின்று போயிற்று.

கவியோகி சுத்தானந்த பாரதியால் ஈர்க்கப்பட்டவரான விஜயேந்திரன் ஈழத்து கவிதைக்கனிகள், ஈழத்து கவிதை விமர்சனம் ஆகிய நூல்களையும் எழுதி வெளியிட்டார் 'தமிழ்நிலா' என்ற சஞ்சிகையின் சிறப்பாசிரியராகவும் பணிபுரிந்தார். அவரின் தனிப்பட்ட வாழ்க்கை ஏமாற்றங்களையும் இழப்புகளையும் சோகங்களையும் உள்ளடக்கியது மட்டுமல்ல; கடும் விமர்சனங்களுக்கும் உள்ளானதும் உண்மைதான்.

ஆனாலும் அவரிடம் காணப்பட்ட சிறப்பம்சமான மனிதனை, கலைஞனை நேசிக்கும் மதிக்கும்பண்பு ஒப்பற்றது.

தமிழீழ தேசம் விடுதலை பெற்ற நாடாகவேண்டும் என்பது அவரது மற்றொரு தாகமாகவே இருந்தது.

மலையாளப்படமொன்றில் மிகச்சிறப்பாக நடித்தமைக்காக கேரள அரசின் விருதைப்பெற்ற போது அவர் கூறியது. "வாய்ப்பளித்து வரவேற்க தமிழகம் தவறியது. மலையாளம் மதிப்பளித்து கௌரவம் வழங்கியது". என்பதேயாகும். தமிழ் இலக்கியங்கள் குறித்தும் தமிழ் கவிஞர்கள் குறித்தும் தமிழ் திரைப்பட வரலாறு குறித்தும் பல ஆய்வுகளை செய்து வைத்திருந்த விஜயேந்திரனால்அவற்றை நூலுருவில் கொண்டு வர இயலாது போனது துரதிஷ்டமேயாகும்.

அந்த நூல்களை எவரும் தேடி எடுத்து வெளியிடுவார்களேயானால் விஜயேந்திரனின் புதிய பல பரிமாணங்களை அடையாளங்காணமுடியும்.

அட்சயன்

# காரசாரம்

## யார் என்ன சொன்னாலும் அப்படியே கேட்டு நடப்பதா...?

"வாங்கோ- முகமாலையெல்லாம் வாங்கோ....." "ஏறுங்கோ ஏறுங்கோ இப்பவெளிக்கிடப்போகுது."

"அம்மா வாங்கோ.... அய்யா....எங்கய்யா போறியள் சீற்தரலாம் ஏறுங்கோ....."

இப்படி பஸ்ஸுக்கு ஆள் பிடிக்கிறவைய நீங்கள் யாழ்ப்பாணத்தில பாக்கலாம். 'இப்பிடி ஆள்பிடிச்சு' பஸ்ஸினுள் ஏறி; பஸ் புறப்பட்டபின் அவர்களே ராசா, இது மக்களாட்சித் தத்துவம், வாக்குகளைப் பெறும்வரையில் கையெடுத்துக் கும்பிடும் அரசியல்வாதிகள் வாக்குகளைப் பெற்றபின் மக்களுடன்நடந்துகொள்ளும் முறையும் இதுதான். "அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி"

"பின்னுக்குப் போங்கோ பின்னுக்குப் போங்கோ" எனத் தள்ளுவதும், இறங்குமிடத்தில் சுணங்கிவிட்டால்" என்ன செய்யிறியள் இறங்குங்கோவனப்பா நேரத்துக்கு!" என்று சினப்பதிலும் மட்டுமல்ல பயணக்கூலியில் பங்கு வைப்பதிலும்மோசமாக நடந்து கொள்கின்றனர்.

"எவ்வளவு முகமாலைக்கு"

"இருவத்தைஞ்சு ரூபா"

நூறு ரூபா கொடுத்தால் மீதி எழுபதுதான் வரும். ஐம்பது ரூபா கொடுத்தாலும் அப்படித்தான். இருபது ரூபா மிச்சம் வரும் வெகு சுளுவாக இருபத்தைந்து ரூபாவை யாரும் தந்தால் மெதுவாக அந்த ஐந்து ரூபாவை காற்சட்டைப் பையுள் இறக்குவார் நடத்துநர். இது சாரதியான வாகன உரிமையாளனுக்கே தெரியாமல் நடக்கும் கொள்ளை. ஒரு நாளில் இரண்டு மூன்று தடவை பயணிக்கும் அந்த ஊர்தியில் முப்பது பேருக்கு பதினைந்து பேரிடமாவது ஐந்து ரூபா அடித்தால், மொத்தம் நாற்பத்தைந்து பேரிடம் இருநூற்றிஇருபத்தைந்து ரூபா.

தனக்குத் தரவேண்டிய ஐந்து ரூபாவை திருப்பித்தரவேண்டும் என்று பிடிவாதமாக யாரும் கேட்பதில்லை. மனதுக்குள் பொருமியவாறே பேசாமல் விட்டு விடுகின்றனர். யாராவது பிச்சைக்காரர்கள் கையேந்தி வந்தால், ஒரு ரூபாய் போடுவதற்குக் கூச்சப்படும் அருவருக்கும், தலையைத் திருப்பிக் கொள்ளும், கனவான்களோ சீமாட்டிகளோ. இந்த கௌரவப் பிச்சைக்காரர்களுக்கு முகம சுழிக்காமலே வாரிவழங்கி விடுகிறார்கள். இன்னமும் அநீதிக்கெதிராகக் குரல் கொடுக்கும் ஆவேசம் மக்களுக்கு வரவில்லை என்பதுடன் நேர்மையாகத்தாம் செய்யவேண்டிய கடமைகளைக் கூடப்புறக்கணிக்கப் பழகிவிட்டனர். சாதாரணமாக ஒரு நாட்டின்மீது அந்நாட்டுப் பிரசைகள் அக்கறையில்லாமல் இருப்பது பாரதூரமான குற்றமாகும். எடுத்ததற்கெல்லாம் குற்றம் சொல்லும் எவரும் தம்மைப்பற்றிய ஆய்வைத் தினசரி செய்தால் நாளொன்றுக்கு அவர்கள் எத்தனை தவறு செய்தார்கள் என்பது புலப்படும் இப்படித்தான்.

பஸ்ஸினுள் தனது மிச்சக் காசைத் தரும்படி விடாப்பிடியாக வாதாடிய பெண்ணை- நடத்துநர் குறிப்பிட்டு "இதேதோ மெண்டல் கேசுபோல... அஞ்சு ரூபாய்க்கு இவள கத்துக்கத்துது."என்றான்.அதையே ஆமோதித்து தலையாட்டியது பஸ்ஸினுள் இருந்த கூட்டம். யாராவது ஒருவர் கூட, இது நியாயம் தானே என்று கூறவில்லை. மனதுக்குள் எண்ணிக்கொண்டார்களோ தெரியாது.

இதுபோன்ற மந்தை நிலையில் நாம் இருப்பதால்தான் தமிழனை சந்துபொந்துகளெல்லாம் சிங்கள ராணுவம் பார்த்துச் சிரிக்கும் நிலை வந்திருக்கிறது. நிறைய வீடுகளுக்கு வாயிற்காவலர்களாக இராணுவமும் பொலிசும் நிற்கிறது. எங்கட மண்ணில் வாழும்மக்கள் வேலிச் சண்டை பாதைச்சண்டை, கோழிச் சண்டையென்று எது வந்தாலும் கொட்டன் எடுத்துக்கொண்டு கொல்லுப்படுவதும் பிறகு கோட்டுக்குப் போவதும் அன்றாடப் பதிவுகள். ஆனால், இப்போது அதே நிலங்களை அந்நியன் ஆக்கிரமித்து நிற்கும்போது- நாங்கள் அதைக் கைவிட்டுவிட்டு அந்நிய நாட்டுக்கே புறப்பட்டு விட்டோம்.

உரிமைகளைக் கேட்டுப் பெறவேண்டும். அப்படிக் கிடைக்கவில்லையென்றால் போராடிப் பெறவேண்டும். யாழ்ப்பாணத்தில் ஏராளமான கடைகளில் சிட்டை நடைமுறையில் இல்லை.

அவர்கள் சொன்ன விலையில்தான் பொருட்களை வாங்க வேண்டியுள்ளது. இவர்கள் எப்படி தங்கள் கணக்கு வழக்குகளைப் பேணுவார்கள். பின்னணியிலே கணக்குகளைத் தயாரிப்பதற்கென்றே சில ஊழியர்களை வைத்திருக்கிறார்கள். இதே வகையில் இவர்களின் வர்த்தக நடவடிக்கைகளில் எந்த மக்களும் சந்தேகமெழுப்பியதே கிடையாது. இதேபோல முச்சக்கரவண்டிகளும் எந்தக் கட்டுப்பாடுமின்றி நினைத்தபடி கூலி கேட்கின்றனர். ஒரே தூரத்து பயணத்துக்கு பல விதத்தில் பயணக்கூலி அமைகிறது. வாழ்க்கை முறைகளில் மட்டுமல்ல எல்லாவிதத்திலும் மக்கள் யார் என்ன சொன்னாலும் கேட்டுநடப்பதையே பழக்கமாக்கி விட்டார்கள் போல ஒரு தோற்றம். "அ.... எங்களுக்கேன் வம்பு- ஏதோ சொல்லோணும் போல இருந்துது சொன்னன்..." இதை இதோட விடுங்கோ-

மாயா

# ஏனிந்தப் பாராமுகம்...?

இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதிகள் மின்சாரத்தை இழந்து சுமார் இருபது வருடங்களாகிவிட்டன. இந்த இருபது வருடங்களில் ஒரு புதிய தலைமுறை உருவாகிவிட்டதுடன்- எவரும் தமது ஊருக்கு திரும்பி வரும்போது அவரை இனங்காண விரல் விட்டு எண்ணக் கூடிய மிகச் சிலரே இருக்கின்றனர். காரணம்- குடிவரவு குடியகல்வு, பிறப்பு, இறப்பு. இது உலக நடப்பில் சாதாரண நிகழ்ச்சிதான்.

சொந்த ஊருக்குத் திரும்பிவந்தால் அநேகமான அறிமுகமற்ற முகங்கள் மட்டுமல்ல. அவர்களே எங்களைப்பார்த்து, உங்கட சொந்த ஊர் எது? எப்ப இஞ்ச குடிவந்தநீங்கள் எனக் கேட்கும் அவலம் நிகழ்கிறது.

இது இப்படியிருக்க இருபது வருடங்களின் பின் போர் நடந்த பூமியான கிளிநொச்சி பாரிய மாற்றத்தைக் கண்டுவிட்டது. விடுதலைப்புலிகளின் தலைமை அலுவலகங்கள், சர்வதேசத் தொடர்புகள், சர்வதேச உபரிக் கூட்டங்கள், பத்திரிகையாளர் வரவு, விளையாட்டு, கல்வி, முறைசாராக் கற்கைகள், பாரிய உணவு விடுதிகள், தங்ககங்கள் எனச் சக்கைப்போடு போடுகிறது.

மக்கள் கிளிநொச்சியில் குவிய, நிலங்கள் பிரிந்து இடங்கொடுக்க, யாழ்ப்பாணம் போலவே ஒரு ஏக்கர் நிலத்துக்குள் இரண்டு ஒழுங்கைகளும் முளைத்துவிட்டன. கிளிநொச்சி நகர மத்தியிலேயே, புதிய வீடுகள், புதிய தெருக்கள் பெருமளவு வந்து விட்டன.

கிளிநொச்சிக்கு மின்சாரம் வழங்க இலங்கை மின்சார சபை வந்துள்ளது. இங்கு மின் வழங்கும் வேலைகளும் நடைபெறுகின்றன. ஆனால் இந்த மின் வழங்கும் வேலைகள் எத்தனையாம் ஆண்டின் திட்டமிடல் என்றால் அதுதான் வேடிக்கை. அது ஆயிரத்து தொளாயிரத்து எழுபதுகளில் போட்ட திட்டம். அப்ப.... ஆராருக்கு, எந்தெந்த தெருவுக்கு மின்சாரம் இருந்ததோ அவையளுக்கு மட்டுந்தான் இப்ப மின்சாரமாம். இது எப்பிடியிருக்கு.?

பழைய குடியிருப்பாளர்கள் பலர் பரதேசம் போய்விட்டனர். பலர் பிறதேசம் போய்விட்டனர். புதிய குடியிருப்பாளர்கள் பலர் தமது தொழிலுக்கும் அன்றாட நடவடிக்கைகளுக்கும் மின்சாரம் தேவைப்பட்டவர்களாக உள்ளனர். முன்னெல்லாம் மின்சாரசபை மின்சாரம் கோரினால், ஒரு தெருவில் எத்தனை பயனாளிகள் உள்ளனர் என்பதைக் கருத்தில்கொண்டுதான் மின்சாரம் வழங்கும். இப்போது மின்சாரத்தை பழைய வளவொன்றைப் பகிர்ந்துள்ள புதியவர்கள் கேட்டால் பலலட்சம் ரூபாவைக் கேட்கிறது மின்சார சபை. பயனாளிகள் தமது செலவில் வீதிக்கு மின்சாரம் கொண்டுவரும் நிலையில் இல்லை. கிளிநொச்சி நகரின் நடுமத்தியில் இருண்டு போன வீடுகள் இருக்க நகர் தாண்டி நெடுந்தூரம் பயணம் செய்கிறது மின்சாரம். மின்சாரசபைக்குப் போனால் மேலிடத்து உத்தரவு புதிய வீதிகளுக்கு மின்சாரம் தர முடியாது என்பதுதான் புதிய வீதியில் குடியிருப்பது வேற்றுக்கிரக வாசிகளா? நகரக் குடியிருப்பாளர்களுக்கும் தெருவுக்கும் ஒழுங்கைகட்கும் மின்சாரம் வழங்குவது அத்தியாவசிய மில்லையென யார் சொன்னது. இது பற்றிய கவனத்தை மாநகர ஆணையாளர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றோர் ஏன் கொள்ளவில்லை? கிளிநொச்சியின் பழைய சந்தை, பழைய பஸ்தரிப்பு நிலையம், பழைய ரயில் நிலையம் போன்றவற்றுக்கு தெருக்கள் மாறவில்லையா? அவற்றுக்கு மின் வழங்கவில்லையா? மக்களிடம் மட்டும் ஏனிந்தப் பாராமுகம்

# புலிகளின் ஐரோப்பிய விஜயம்: மேற்குநாடுகளின் முன்னால் உள்ள தெரிவு

நிலாந்தன்

கடந்த கிழமை புலிகளின் பிரதானிகள் இரண்டாவது தடவையாக ஐரோப்பாவுக்கு போயிருக்கிறார்கள்.

தமிழ்வீரமும் அதனரல் கிடைத்த பேரம் பேசும் பலமும் புலம்பெயர்ந்த தமிழரின் மேதாவிலாசமும் சந்திக்கின்ற மற்றொரு சந்திப்பாக இது அமைகின்றது. இது போன்று முன்பு நிகழ்ந்த ஒரு சந்திப்பின் குழந்தையே இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிய வரைவாகும். அந்த வரைவு அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு பின்னணியில் புலிகளின் இந்த விஜயம் நிகழ்ந்துள்ளது.

முன்னைய விஜயத்துக்கும் இந்த இரண்டாவது விஜயத்துக்கும் இடையில் கூர்மையான வேறுபாடுகள் உண்டு. முதலாவது விஜயத்தின் போது சமாதானத்தைக்குறித்த நம்பிக்கைகள் ஒப்பீட்டளவில் உயர்வாக இருந்தன. மற்றது, கருணாவின் விவகாரம் என்ற ஒன்று அப்பொழுது இருக்கவில்லை. மூன்றாவது, எண்ணெய் விலை உயர்வு என்ற விவகாரமும் இருக்கவில்லை.

ஆனால் இம்முறை சமாதானத்தைக் குறித்த நம்பிக்கைகள் சோரத்தொடங்கிவிட்ட ஒரு பின்னணியில், அதிலும் குறிப்பாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபைகுறித்துப் பேசுவதற்கு அரசாங்கம் தயாராய் இல்லாத ஒரு பின்னணியில், புலிகளின் உயர்மட்டக்குழு ஐரோப்பாவுக்கு சென்றிருக்கிறது. மேலும், கருணாவின் விவகாரமும் அதை அரசாங்கம் கையாண்டவிதமும் அதன் விளைவாகத்தொடங்கிய ஒரு மென்தீவிர யுத்தம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரை பரவி வரும் ஒரு சூழலில் இந்த விஜயம் நிகழ்கிறது.

எனவே இந்த விஜயத்தின் விளைவு என்னவாய் இருக்கும்?

அநேகமாக விளைவு இரண்டுவிதமாக அமையக்கூடும். முதலாவது, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிய வரைவில் அரசாங்கத்திற்கு பிரச்சினையாக இருக்கும் விவகாரங்களில் புலிகள் ஏதும் சுதாகரிப்புக்களை செய்ய முன்வரலாம் என்பது. இரண்டாவது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவில் நெகிழ்ந்துகொடுக்காத அதே சமயம் தாம் இப்படி ஒரு வரைவை கொடுத்தபின்பும் அரசாங்கம்தான் அதைக் குறித்துப் பேசத்தயார் இல்லை என்ற செய்தியை ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துரைத்து அவற்றை நம்பச்செய்து அதன் மூலம் அந்த நாடுகளுக்கூடாக அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பது.

அதாவது ஒன்றில் புலிகள் விட்டுக் கொடுக்கவேண்டும் அல்லது சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கு பணிந்து அரசாங்கம் விட்டுக்கொடுக்கவேண்டும். இரண்டும் இல்லையென்றால் நிலைமைகளின் வளர்ச்சிப்போக்கில் ஒரு யுத்தம் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இது மேற்கு நாடுகளுக்கும் நன்கு தெரியும். எனவே தம்மை நோக்கி வந்திருக்கும் புலிகளை சமாதானப்படுத்தும் அதேசமயம், அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கவேண்டிய ஒரு தார்மீகக் கடமை அவற்றுக்கு உண்டு.

ஆனால் இங்குள்ள பயங்கரமான ஒரு யதார்த்தம் என்னவெனில்.... அரசியலில் தார்மீகக்கடப்பாடு என்று எதுவுமே நடைமுறையில் கிடையாது என்பதே.

சில மாதங்களுக்கு முன்புவரை நிதி உதவிகளையும் சமாதான நடவடிக்கைகளையும் பிரிக்கப்படவியலாதபடி இணைத்துக் கதைத்து வந்த மேற்கு நாடுகளும் ஜப்பானும் அண்மைக்காலங்களில் இதில் சிறிதளவு இறுக்கத்தை தளர்த்தியிருப்பதாக நம்பக்கூடிய விதமாக நடந்துகொள்கின்றன. மேலும் மேற்கு நாடுகளின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் அமெரிக்கா இதுவிசயத்தில் இலங்கை அரசாங்கத்தை அரவணைத்து வழிக்குக்கொண்டுவரும் ஒரு போக்கையே கையாள்வதுபோல் தெரிகிறது.

எனவே மேற்கு நாடுகள் தமது தார்மீகக் கடமையை சரிவரச்செய்து இலங்கை அரசாங்கத்தின்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்குமா? என்பது சந்தேகமே.

அப்படி அழுத்தங்களை பிரயோகித்தாலும் அதற்கு மசிந்து கொடுக்கும் நிலையில் அரசாங்கம் இருக்குமா என்பது அடுத்த பிரச்சினை. ஏனெனில் அரசாங்கத்தின் கூட்டாளிகளின் அரசியலை வைத்துப் பார்த்தால் அப்படித்தான் சிந்திக்க வேண்டியுள்ளது.



நிதி உதவிகளையும் சமாதானத்தையும் பிரிக்கப்படவியலாதபடி பிணைப்பதை ஆதரித்து வரும் விமர்சகர்கள் ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறார்கள். அதாவது ஏற்கனவே தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாது திணறிக்கொண்டிருந்த அரசாங்கம் உலக சந்தையில் எண்ணெய்விலை திடீரென்று உயர்ந்ததால் நாட்டில் ஏனைய பொருட்களின் விலைகள் உயர்ந்துவரும் ஒரு பின்னணியில் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மேலும் கடினமாகிவரக்கண்டு ஏதோ ஒரு வழியில் ஏதோ ஒரு கட்டத்தில் நிதி உதவிக்காகவாவது சமாதானம் செய்ய ஒத்துழைக்கும் என்று.



ஆனால் எந்தப் பிரச்சினைகளின் நிமித்தம் அரசாங்கம் உதவிவழங்கும் நாடுகளின் காலில் விழும் என்று இந்த விமர்சகர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதே பிரச்சினைகளைத் திசைதிருப்பவே அரசாங்கம் யுத்தத்தை தூண்டும் ஒரு அரசியலை செய்யமுடியும் என்பதை இங்கு சுட்டிக்காட்டமுடியும்.

எனவே மேற்கு நாடுகளின் அழுத்தங்கள் அரசாங்கத்தை மசியவைக்குமா என்பது சந்தேகமே. அதிலும் குறிப்பாக மரபு ரீதியிலான அரசுகளுக்கிடையிலான மரபுரீதியிலான ராஜிய உறவு முறைகளுக்கூடாகவே இத்தகைய அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம் என்ற ஒரு நிலை உள்ளவரை, அரசாங்கத்தின் மீது செயலுக்கு தூண்டவல்ல அழுத்தங்களைப் பிரயோகிக்கமுடியாது என்பதே இங்குள்ள ராஜிய யதார்த்தம்.

மாறாக அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் விதத்தில் கொழும்பில் உள்ள தமது தூதரகங்களை மூடுவதுடன் தமது நாடுகளில் உள்ள சிறிலங்காத் தூதரகங்களை மூடுவது போன்ற ராஜீய உறவை முறிக்கும் கடுமையான வழிமுறைகள் எதையாவது செய்தால் சிலசமயம் அரசாங்கம் அசையக்கூடும். (ஆனால் மேற்கு நாடுகள் அப்படி எதையும் செய்யாது என்பது வேறு விசயம்) ஆனால் அதையும் கூட அரசாங்கம் வேறு விதமாக கையாளும் வாய்ப்புக்களே அதிகம் உண்டு.

மேற்கிலிருந்து அழுத்தங்கள் நிர்ப்பந்தங்கள் வருமாயிருந்தால் அரசாங்கம் கிழக்கில் உள்ள தனது நண்பர்களை நோக்கி குறிப்பாக பிராந்திய நண்பர்களை நோக்கித் திரும்பும் என்பதே இங்குள்ள மற்றொரு ராஜிய யதார்த்தம் ஆகும். அதாவது நாட்டில் விடுதலைப்புலிகள் உள்ளவரை பிராந்திய மற்றும் பூகோளபேரரசுகளுக்கிடையில் இலங்கை அரசாங்கத்தை யார் வெற்றிகரமாகக்கையாள்வது என்ற போட்டியும் தொடர்ந்தும் இருக்கும். இது இலங்கை அரசாங்கத்தின் பேரம் பேசும் சக்தியை எப்பொழுதும் உச்சத்திலேயே வைத்திருக்கும்.

இந்திய மற்றும் அமெரிக்க படைத்துறை பிரதானிகளும் உயர்நிலை ராஜதந்திரிகளும் புலனாய்வுத்துறை அதிகாரிகளும் தற்சமயம் போட்டிபோட்டுக்கொண்டு ஆள்மாறி ஆள் இலங்கைக்கு வந்து போவதை மேற்சொன்ன விளக்கத்தின் பின்னணியில் வைத்தே புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழர்களின் சுதந்திரப்போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்று கொழும்பில் உள்ள அரசாங்கங்கள் நம்புவதற்குரிய ராஜிய அடிபபடை இதுதான். இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிய உரையாடல்களை நிராகரிப்பது மட்டுமல்ல எந்த ஒரு உரையாடலுக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஒரு அடிப்படையாகத்தானும் இருக்கமுடியாது என்ற நெகிழா நிலைப்பாட்டை அரசாங்கம் எடுக்கத்தேவையான துணிச்சலைக் கொடுப்பதும் இந்த உச்சமான பேரம் பேசும் சக்திதான்.

எனவே, இலங்கையை பொறுத்து பேரரசுகளுக்கிடையிலான இத்தகைய ஒரு ராஜியப் போட்டி இருக்கும்வரை இலங்கை அரசாங்கத்தின் மீது எந்த ஒரு நாடும் அழுத்தங்களை பிரயோகிப்பது கடினமாகவே இருக்கும். அதாவது சமாதானத்தை பாதுகாப்பது கடினமாகவே இருக்கும்.

ஆயின் மேற்கு நாடுகள் என்னசெய்யப் போகின்றன? தம்மை நோக்கி வந்திருக்கும் புலிகளுக்கு அவர்கள் தரப் போவது எதை?

அரசாங்கம் அவர்களுடைய அழுத்தங்களுக்கு மசிகிறதோ இல்லையோ தம்மை நோக்கி வந்திருக்கும் தமிழர்களை சமாதானத்தின் வழியில் மேலும் உற்சாக மூட்டும் விதத்தில் அவர்கள் ஒன்றைச் செய்யமுடியும். அது தான் தமிழர்களின் ராஜிய அந்தஸ்தை உயர்த்துவது. இது ஒன்றுதான் இப்பொழுது உள்ள நிலவரங்களின்படி சமாதானத்தைப் பாதுகாப்பதற்கிருக்கும் ஒரே ஒரு தெரிவாகும்.

இல்லையென்றால் வீணான சமாதானத்திற்காக யுத்தத்தை மேலும் ஒத்திவைப்பது என்பது யுத்தநிறுத்தத்திற்குள் தமது போர்ச்சக்தியை நீர்த்துப்போகச் செயவதிலேயே கொண்டுபோய்விடும் என்ற தமிழர்களின் அச்சத்தை யாராலும் அகற்றமுடியாது போய் விடும்.

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்...!
நேதாஜி எழுதும் புதிய அரசியல் தொடர்
தமிழ் தேசியமே தமிழர் இலட்சியத்தின் ஆதாரம்

# நறுக்கென...

## சந்திரிகாவின் உத்தரவை மதித்து நடக்காத நண்பர்கள்



சில சமயங்களில் சனாதிபதி தன்னுடைய ஆட்களுக்கு சம்பிரதாயபூர்வமாகவேனும் அர்த்தமுள்ள அறிவுறுத்தல்களை விடுக்கவே செய்கிறார்.

இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியில் அங்கம் வகிக்கும் தனது பங்காளிக் கட்சியில் உள்ளோர்களின் உளறுவாய்த்தனத்தால் நல்லாத்தான் அவர் நொந்துபோய்விட்டார் போலும்..

அதுவும் குறிப்பாக சமாதானமுயற்சிகள் தொடர்பாக அந்த உளறுவாயர்களும், வாய்ச்சவடால் பேர்வழிகளும் அர்த்தமற்றமுறையில் அலம்பிவருவதும், அறிக்கைகளை விடுப்பதும் அம்மணியாரின் அரசியல் மூலோபாயங்களுக்கே பெரும் நெருக்கடியை கொடுத்துவருவதை அவரால் சகித்துக்கொள்ள முடியாமல் போய்விட்ட நிலையில்.. கடைசியில் சொல்லவேண்டியதை வெளிப்படையாகவே கூறிவிட்டார்.

அதாவது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசின் பங்காளிக்கட்சிகள் எந்தக்கருத்துக்களையும் கூறக்கூடாது என அவர் பணித்துள்ளாராம். கிட்டத்தட்ட வாயைப்பொத்திக்கொண்டிருங்கள்' என்ற தொனியுடன் கூடிய உத்தரவுதான்.

குறிப்பாக அவரின் சாயம்போன சிவப்புத்தோழர்கள் ஜே.வி.பியினரை நோக்கித்தான் இந்த எச்சரிக்கைவிடப்பட்டுள்ளது எனலாம்... அந்த பெருவாய் பேச்சாளர்களான விமல்வீரவன்சவும், டில்வின்சில்வாவும் தான் சமாதான முயற்சிகள் தொடர்பாக அடிக்கடி அபத்தமான பேரினவாத வெறிகொண்ட கருத்துக்களை வெளியிட்டு சிங்கள இனத்தின் இரட்சகர்களாக தம்மை இனம் காட்ட முனைபவர்கள்.

சரி சனாதிபதியின் இந்த உத்தரவை ஜே.வி.பியோ, ஏனைய அவரது பங்காளிக் கட்சியினரோ மதித்து நடப்பார்களா என்பது சந்தேகமே..! அவர்களின் அரசியலே அந்த உளறல்களில்தான் தங்கியுள்ள நிலையில் வாயை மூடிக்கொள்வது எப்படிச் சாத்தியமாகுமாம்?

சில நாட்களின் முன்னர் சனாதிபதியின் சகோதரரும் அந்த கோமாளித்தனமான அரசியல் வாதியுமான அநுரா பண்டாரநாயக்க கூட இனிமேல் சமாதானமுயற்சிகள் தொடர்பாக சனாதிபதி மட்டுமே கருத்துக்கூறட்டும்.. ஏனையோர்கள் பேசாமலிருக்கவேண்டும் என அரசியல் பக்குவத்துடன் திடீரெனப் பேசியிருந்தார்...

ஆனால் உளறுவாயர்கள் ஓய்ந்ததேயில்லை.

இப்போது'அரியண்டம்' தாங்காமல் அம்மணியாரே எச்சரிக்கவேண்டியநிலை ஏற்பட்டுவிட்டது...

இது சமாதானம் மீதான அவரின் அக்கறையாலல்ல... தனது தந்திரோபாயங்களுக்கு நெருக்கடி ஏற்படக்கூடாது என்ற எச்சரிக்கையுணர்வுடன் விடுக்கப்பட்ட ஒன்றேயாகும்.

## பேயாட்சி நிலவும் நாட்டில் பிண வாழ்க்கை சகஜமே



இலங்கையில் சமாதானம் படும்பாடு பெரும்பாடாகத் தான் உள்ளது.

ஒரு புறம் சர்வதேச சமூகம் சமாதானத்தை வலியுறுத்திக் கொண்டே இருக்கையில், உள்நாட்டில் சமாதான எதிர்ப்பு பேரினவாத தீயசக்திகள் அமைதிமுயற்சிகளைக் கடுமையாக விமர்சித்தபடி அதனைக் குழப்பும் முயற்சிகளில் அதிதீவிரம் காட்டியும் வருகின்றனர்.

சனாதிபதியோ பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும் பாசாங்குத்தன அரசியல் நகர்வினை சமாதானத்தின்பேரால் மேற்கொண்டு வருகின்றார்.

எதிர்க்கட்சித்தலைவரோ தனக்கு மூக்குப்போனாலும் பரவாயில்லை எதிரிக்கு அதாவது சனாதிபதிக்கு சகுனப்பிழையாக இருக்கவேண்டும் என்ற உள்நோக்குடனேயே சமாதானம் தொடர்பான தனது செயற்பாடுகளை மேற்கொண்டு அரசியல் காய்களை நகர்த்திவருகின்றார்.

நாட்டுமக்களோ தங்களின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டியவர்களின் ஆதிக்கப்போட்டியால் அலமலந்து ஏங்கிப்போய் அலைபவர்களாக உள்ளனர். சரி விடயத்திற்கு வருவோம்.

நாட்டின் நிதி வளத்தின் பெரும் பகுதியையும், மனிதவளத்தின் பெரும் பகுதியையும் கடந்த கால்நூற்றாண்டு கால யுத்தத்திற்கு தொலைநோக்குச் சிந்தனையற்ற முறையில் பேரினவாதவெறியுடன் அர்ப்பணித்த அயோக்கியத்தனத்தை புரிந்த சிங்கள ஆட்சியாளர்கள் தத்தம் சுய அரசியல் அதிகாரபலத்தைப் பாதுகாப்பதற்காக எவ்வாறெல்லாம் இ. மண்ணில் இரத்த ஆற்றினைப் பெருக்கெடுக்க வைத்தார்கள் என்பதை விளக்கவேண்டியதில்லை.

போருக்கு அவர்கள் செலவழித்த நிதியையும், அதில் அவர்கள் காட்டிய அக்கறையையும் சமாதானம் தொடர்பாகக் காட்டியிருப்பார்களேயானால் இன்று இலங்கையின் நிலை எவ்வளவோ உயர்ந்திருக்கும்...

சரிவிடுங்கள், பேயாட்சி புரியும் நாட்டில் பிணவாழ்க்கை சகஜமே... இந்த தற்காலிக சமாதானத்திற்கு முந்தி நீண்ட யுத்தகாலப்பகுதிக்குள் தமிழினத்தை - அவர்களின் பல்லாயிரம் கோடிரூபாய்கள் பெறுமதியிலான சொத்துக்களை, பொருண்மிய வளத்தை நாசமாக்குவதில் முதன்மை வகித்தது விமானப்படைதான், அதேபோன்று போரால் பல ஆயிரம் கோடிரூபாய் அழிவுகளுக்குள்ளானதும் விமானப்படைதான்...! கட்டுநாயக்கா விமானப்படைத்தாக்குதலை நினைவு படுத்தினாலே போதும்...

ஆனால், இன்றைய வான்படை அதிகாரிகள் சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்காக விமானப் பறப்புகளை மேற்கொண்ட வகையில் விமானப்படைக்கு 15கோடிரூபாய் நட்டம் வந்துள்ளதாக புள்ளிவிபரங்ளுடன் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்...

போருக்கு பல கோடியை செலவழித்து நாட்டை உலகின் கோடிப்பக்கம் தள்ளிய புண்ணியவான்கள் சமாதானத்திற்கு சில கோடி செலவழித்ததற்காக புலம்புகிறார்கள்...

இந்த நாடு உருப்படுமா?

## பேரினவாத மண்டைக்குள் ஏறாத சிந்தனைகள்



சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமானால் ஜாதிகஹெல உறுமய என்ற பிக்குகள் கட்சி முன்வைக்கும் நிபந்தனைகளை விடுதலைப்புலிகள் ஏற்க வேண்டுமாம்! சனாதிபதிக்கு அவர்கள் கடிதம் அனுப்பியிருக்கிறார்களாம். கடந்த இரண்டாண்டுக்கும் மேலான சமாதான சூழல் நீடித்துவருவதற்கு ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்ந்துபேணப்படுவதற்கும் அவை எந்தவிதமான நிபந்தனைகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே பிரதானகாரணமாகும்.

இடைநிறுத்தப்பட்டு தேக்க நிலைக்குள்ளாகியிருக்கும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் நோர்வே நாட்டின் அனுசரணையுடனும், சர்வதேச சமூகத்தின் பேராதரவுடனும் வெளிநாடுகளில் முன்னர் நடைபெற்றகாலங்களில் அதற்கு எந்தவித நிபந்தனைகளும் அடிப்படையாக அமைந்ததுகிடையாது.

அதற்கு புரிந்துணர்வு மட்டுமே பிரதானதளமாக இருந்தது. இப்போது மீண்டும் விட்ட இடத்தில் இருந்தே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டியசூழலில் ஹெலஉறுமயக்காரர் நிபந்தனைகளை விதிக்க முன்வந்திருப்பது சமாதான முயற்சிகளை முற்றாகவே தடுத்து நிறுத்தும் உள்நோக்கத்தையே கொண்டதாகும்.

சரி அவர்களின் நிபந்தனைகள்தான் என்னவென்றுபார்ப்போம் இலங்கையின் இறைமையையும் சட்டமுறையையும் புலிகள் ஏற்றுக்கொள்ளவேண்டுமாம்!

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை இலங்கை சட்டமுறை அங்கீகரித்தால், தமிழ்மக்களின் பாரம்பரிய வாழ்நிலப்பிரதேசத்தின் தனித்துவ இறைமையை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளுமானால் புலிகளாலும் இந்த நிபந்தனையை பரிசீலிக்க முடியக்கூடும்.

அடுத்தது புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டுமாம்! ஆயுதப்படையினர் வடக்கு கிழக்கை விட்டு முற்றாக வெளியேறுவதுடன் அவர்களின் துணைப்படையாக இயங்கும் தேசவிரோத தமிழ்க்குழுக்களையும் அரசால் வாபஸ்பெறமுடிந்து, இனப்பிரச்சினைக்கு நியாயமான உறுதியான அரசியல் தீர்வை அரசு முன்வைத்தால் இதனை புலிகள் சாத்தியமாக்கக்கூடும்.

சர்வதேச - மனித உரிமைப் பிரகடனத்திற்கு புலிகள் மதிப்பளிக்கவேண்டுமாம்! புலிகள் மனித உரிமைகளுக்காக போராடுபவர்களே... மனித உரிமைகளை தமிழர்களுக்கு தரமறுப்பது இலங்கை அரசே.. எனவே அது அந்தப்பிரகடனத்திற்கு மதிப்பளித்தால் பிரச்சினையே ஏற்படாதே...

இந்த வகையில் ஹெலஉறுமயவினர் தமது நிபந்தனைகளை பரிசீலிப்பது நல்லது. தர்மராஜ்ஜியத்தை ஏற்படுத்த இந்த நிபந்தனைகளை சிங்கள அரசும் பௌத்த மதவாதமும் நிதானமாக பரிசீலிப்பதுதான் நல்லது...

இவையெல்லாம் பேரினவாத
மண்டைகளுள் ஏறுமா?

## ஹெல உறுமயவுக்கு புரியாத சந்திரிகாவின் தந்திரமா?



என்ன செய்கிறோம், எதற்காகச் செய்கிறோம் என்ற தெளிவான சிந்தனை எதுவுமின்றி 'அரசியல்' செய்வதில் ஹெலஉறுமயக்காரருக்கு நிகர் அவர்களே தான்...

அவர்களின் அரசியல் கொள்கை ஒன்றே ஒன்றுதான். அது சமாதானப் பேச்சுக்களை விடுதலைப்புலிகளுடன் மேற்கொள்ள எவரையும் அனுமதிக்கக்கூடாது என்பது மட்டுமேயாகும்.

அதனைச் செய்தால் தாங்கள் கனவு காணும் தர்மராஜ்ஜியத்தை இங்கு உருவாக்கி விடமுடியும் என நினைக்கிறார்கள்போலும்..!

இதனை விடவும் அவர்களுக்கு வேறு கொள்கைகள், கோட்பாடுகள் அரசியல் ரீதியில் இருப்பதாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதானால் தாங்கள் விதிக்கும் நிபந்தனைகளுக்கமையவே பேசவேண்டும் எனக் கூறும் ஹெலஉறுமயக்காரர் அந்த நிபந்தனைகளையும் பட்டியலிட்டுள்ளனர்.

அது ஒரு புறமிருக்கட்டும்.

அந்த நிபந்தனைகள் சந்திரிகாவுக்கே வேடிக்கையாக இருந்திருக்கும், தாங்கள் பல ஆண்டுகளாக கூறிவரும் நிபந்தனைகளை மீண்டும் தமக்கே சொல்வதாகவே அவர் உணர்ந்திருப்பார்.

தானே சமாதான முயற்சிகளுக்கு மனப்பூர்வமான ஆதரவை வழங்கத் தயாரில்லாத ஒருவர் என்பது சந்திரிகாவின் மனதறிந்த விடயமேயாகும்.

தான் சமாதானமுயற்சிகள் தொடர்பாக மேற்கொள்ளும் நகர்வுகள் வெறும் தந்திரோபாய ரீதியிலான காலம்கடத்தும் நடவடிக்கைகள் தான் என்பதை ஹெலஉறுமய புரிந்து கொள்ளவில்லை என அவர் நினைத்துச் சிரித்தே இருப்பார்....

சனாதிபதியின் தேசிய சமாதான ஆலோசனைச் சபைக்கான அழைப்பை ஹெலஉறுமயவும் பகிஸ்கரிப்பதாக அறிவித்துள்ளதைத்தான் கூறுகிறோம்.

உண்மையில் அந்தச்சபையை ஹெலஉறுமய எதிர்க்கவேண்டிய அவசியமேயில்லை. அது ஒரு சமாதான இழுத்தடிப்புச்சபையேயாகும். அதில் கலந்துகொண்டவர்கள் அரசில் அங்கம் வகிக்கும் சமாதான எதிர்ப்பாளர்கள் மட்டுமே... அதுவும் விடுதலைப்புலிகளுடன் பேசவே கூடாது என்ற வெறியுடன் செயற்படுபவர்கள் மட்டுமே...

ஹெல உறுமயக்காரர்களுக்கு இதுகூடவிளங்கவில்லை... பேசாமல் இதில் கலந்து கொண்டிருந்தால் சமாதான எதிர்ப்பாளர்களின் ஆலோசனைச் சபையாக இந்த சபை பலம் பெற்றிருக்கும்...

இந்த நவக்கிரகப் பிக்குகளுக்கு அதுகூடப்புரியவில்லை...

அல்லது ஜே.வி.பியினருக்கு பயந்து அதைப்பகிஷ்கரித்தார்களோ தெரியவில்லை....

இந்த ஆலோசனைச் சபையைவிட தமிழ் தீவிரவாதம் குறித்து ஆராய சர்வகட்சிகள் அடங்கிய ஒரு சபையை உருவாக்கவேண்டும் என்கிறது ஹெலஉறுமய. எந்தவகையிலும் சமாதானம் சபையேறுவதாக தெரியவில்லை.

செங்குட்டுவன்

# தமிழீழத்தில் வாழ்கின்ற பெண்கள் ஆளுமையும் திறமையும் கொண்டவர்கள்

## தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி

## தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையொட்டி தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி அவர்கள் எமக்கு வழங்கிய சிறப்புப்பேட்டி.

நேர்காணல்
ஜெயசீலன்.
அ.பிரகாஷ்.

தமிழீழத்தில் தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் என்று ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனுடைய அர்த்தம் என்னவென்றால்; தமிழீழ விடுதலைக்கான போரில் பங்குபற்றவென பெண்கள் வந்துள்ளனர். இந்த தமிழ்ச் சமூகம் காலாதி காலமாக பிற்போக்குத் தனமான சிந்தனையில் மூழ்கிய சமூகமாகவும் குறிப்பாக பெண்களென்றால், மென்மையானவர்கள், ஆளுமை குறைந்தவர்கள், தனித்து முடிவெடுக்க முடியாதவர்கள். ஒரு ஆணின் துணையில் தங்கி வாழ்பவர்கள் என்ற நோக்கில் பெண்களை பார்க்கும் சமூகமாக இருந்து வந்தது. இப்படிப்பட்ட சமூகத்தில் இருந்துதான் இந்த விடுதலைப் போராட்டம் ஆரம்பமானது. இந்தப் போராட்ட சூழல் பிற்போக்குத்தனமான சமூகத்தில் இருந்து ஒரு புரட்சியை, புதுமையை ஏற்படுத்தியது. அதாவது கட்டுப்பாடு எனும் அடக்குமுறையில் வளர்க்கப்பட்ட பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டார்கள்.

கடுமையான பயிற்சி, இரவில் காவலரண்களில் காவல் கடமைகள், களச் சமர்கள் என்பவற்றிலும் பங்கெடுத்து இன்று தமிழ்ப்பெண்கள் ஒரு புதிய புரட்சியை, புதுமையை ஏற்படுத்தியுள்ளார்கள். இவ்வாறான பெண்கள் யுத்தகளத்தில் எதிரியுடன் போராடி வீரச்சாவடைகிறார்கள்.

ஒரு தமிழ்ப்பெண் பிற்போக்குத்தனமான சமூகத்தில் இருந்து வந்து, தேசவிடுதலையில் தன்னை அர்ப்பணித்து, போராடி வீரச்சாவடைகின்றாள். இந்நிகழ்வு ஒட்டுமொத்தமான தமிழ்ப்பெண்களுக்கும் ஒரு எழுச்சியை, விழிப்புணர்வை, மாற்றத்தை ஏற்படுத்திய நிகழ்வு. இந்த நிகழ்வானது பிற்போக்குத் தனமான பெண்களால் முடியாது, இயலாது, எனும் அடிப்படைவாதத்தில் இருந்து விடுபட்டு பெண்களால் முடியும், இயலும். சுதந்திரமாக, தனித்துவமாக ஆளுமையுடன் திகள முடியும் எனும் செய்தியை ஒரு பெண் மாவீரர் செய்து காட்டியுள்ளார். ஆகையினால் அவர் வீரச்சாவடைந்த நாள் தமிழீழபெண்கள் எழுச்சிநாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக பெண்கள் எழுச்சிநாள் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு எழுச்சி நாளின் போதும் பெண்களின் ஆளுமைகள் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளன. அந்த வகையில் கடந்த 2002 ஆம் ஆண்டு அனைத்து மகளிர் படையணிகளினதும் அணிவகுப்புகளும், பல களச்செயற்பாடுகளும் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டன. அவ்வாறே இம்முறையும் ஒரு வித்தியாசமாக, கடலில், களங்களில் பெண்களின் தீரமிகு சாதனைகள் வெளிப்படுத்தும் வகையிலான கண்காட்சிகளையும், பெண்களின் ஆளுமைகளையும், செயற்பாடுகளையும் வெளிப்படுத்தும் கண்காட்சி நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. இந்த நிகழ்வு ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்திற்கும் ஒரு முன் மாதிரியாக இருக்கும். அதாவது தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் தமிழீழ பெண்களுக்கு



மாத்திரமல்ல எல்லா தமிழ்ச் சமூகத்திற்குமான நாள். சமூகத்தில் ஆண், பெண் இரண்டு பேருமே சமமானவர்கள். பெண்கள் எழுச்சி நாள் என்றால் பெண்களுக்குரியது என்பது தவறானது. ஒரு சமூகத்திற்குரிய நாள். பெண்கள் இன்று பல துறைகளில் வளர்ந்து, பங்காற்றி, வந்துள்ளனர். எனவே இந்த தமிழ் சமூகமே தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னெடுக்கின்றது. எனவே இதில் அனைவரினதும் பங்களிப்பு அவசியம் இது எம் தேசத்திற்குரிய ஒரு எழுச்சி நாள்.

ஆரம்ப காலத்தில் இருந்ததைவிட தற்போதைய காலத்தில் பெண்கள் மத்தியில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த மாற்றங்களுக்கு மூலகாரணமாக அமைவது இந்த விடுதலைப் போராட்டம், உதாரணமாக 1980ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த தமிழ்ப் பெண்களின் சிந்தனைகளுக்கும் 1980ஆம் ஆண்டுக்கு பின்னான பெண்களின் சிந்தனைக்கும் நிறையவித்தியாசம் உண்டு. இப்போது பெண்களின் மனதில் ஓர் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

நாங்கள் மாதாந்தம் பெண்கள் சங்கமம் நிகழ்வு ஒன்றை செய்து வருகின்றோம். அதில் வந்து அந்தந்த மாவட்டங்களின் பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெண்கள் கலந்து கொள்வார்கள். அவர்களிடமிருந்து நிறைய விடயங்களை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. பெண்களின் பங்களிப்பு, சமூகப்பிரச்சினைகள் எனப் பல விடயங்களை அறிந்து கொள்வதுடன் அவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் இன்றைய பெண்கள் எவ்வளவோ மாறுபட்ட சிந்தனையுடையவர்களாக மாற்றங்கண்டுள்ளார்கள் எனலாம்.

தமிழீழப் பெண்கள் எனும் போது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வாழும் பெண்களை எல்லா மாவட்டங்களிலும் சந்தித்துள்ளோம். இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள பெண்களுக்கு முதலில் பாதுகாப்பு பிரச்சினை உண்டு, இதைவிட இராணுவத்தால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை பல பெண்கள் வெளியில் சொல்ல முடியாதநிலையில் உளப் பாதிப்புக்களுக்கு ஆளாகின்றனர். அடுத்தது சமூக சீரழிவுக் கலாசாரம். பெரும்பாலும் இதனை தோற்றுவிப்பது, தென்னிந்திய சினிமாப் படங்களும், தொலைக்காட்சி நாடகங்களையும் குறிப்பிடலாம். இவையிரண்டும் தமிழ்ப்பெண்களை ஆட்கொள்ளும் ஒரு கொடியநோய். இது தமிழ்பெண்களை ஒருபோதைப் பழக்கம்போல் பற்றிக்கொண்டுள்ளது. அதிலிருந்து அவர்கள் விடுபடுவதற்கு வேறுதிசைகள் இல்லாத நிலைதான் காணப்படுகின்றன.

ஆனால் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் வசிக்கும் பெண்கள் சமூகப்பணி, உள்ளிட்டபல்வேறு பணிகளில் ஈடுபடுகின்றார்கள். அதைவிட இப்பகுதி பெண்கள் எப்போது வேண்டுமானாலும் எத்தனை மணியானாலும் சுதந்திரமாக நடமாட முடியும். இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிக்கும் பெண்களுக்கு இச்சுதந்திரம் இல்லையென்றே கூற வேண்டும். அதைவிட இவர்களின் நேரம், காலம், சிந்தனை, கலாசாரம் அனைத்தும் தென்னிந்திய சினிமா சாப்பிட்டுவிட்டதென்றால் அது மிகையல்ல.



இவ்வாறான நிலையிலும் இப்பகுதியில் பெண்களுக்கான கருத்தூட்டல்களை பெண்கள் அமைப்புகள் ஊடாக முன்னெடுத்து வருகின்றோம் படிப்படியாக இந்நிலையில் மாற்றங்கள் ஏற்படும். அடுத்தது? இராணுவக்கட்டுப்பாட்டு பகுதியில் அதிகரித்துள்ள போதைப் பொருள்பாவனை இதற்கு பல குடும்பங்களின் தலைவர்கள் அடிமையாகிப் போன நிலையில் குடும்பப் பொறுப்புக்களை பெண்களே முன்னெடுக்கவேண்டி ஏற்படுகின்றது. இதேபோல இராணுவ அராஜகத்தால் கணவனை இழந்த பெண்களும் தங்களின் பிள்ளைகளை காப்பாற்ற, குடும்பச் சுமையை போக்க தானே கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்களும் இராணுவக்கட்டுப்பாட்டு பகுதியில் உண்டு. இவ்வாறான சில குடும்பங்கள் இனங்காணப்பட்டு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம், பெண்களபுனர்வாழ்வு நிறுவனங்கள் ஊடாக உதவிகள் செய்கின்றபோதும் தொடர்ந்தும் இவர்களின் வாழ்வை மேம்படுத்தக்கூடிய தான பாரிய உதவிகளை செய்யமுடியாதுள்ளது. காரணம் நாம் ஒரு அரசாங்கம் அல்ல; ஒரு விடுதலை இயக்கம். எனவே இவ்வாறான பிரச்சினைகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் உண்டு.

அடுத்து சில இளைஞர் யுவதிகள் சினிமா மோகத்தில் எமது பண்பாடுகளில் இருந்து விடுபட்டு ஒரு கனவுலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு இராணுவத்தினரும் துணை நிற்கிறார்கள். இவ்வாறு இன்றைய பெண்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். இவை அனைத்திற்கும் ஒட்டுமொத்த தீர்வாக அமைவது எமது பிரதேசங்களை மீட்டெடுப்பதுதான்.

அடுத்து அகதிமுகாம் களிலும் எமது பெண்கள் பல இன்னல்களுக்கு நீண்டகாலமாக முகம் கொடுத்து வருகிறார்கள்.

நாம் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றபோது அங்கே பல முன்னணி எழுத்தாளர்கள், அரசியல் வாதிகள் என பலரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளோம். அந்த வகையில் பார்க்கும் போது அந்நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளாக காணப்படுவதால் அங்கே தனி மனித சுதந்திரம் உண்டு.

அங்குள்ள நாடுகளின் பண்பாடு, கலாசாரம் என்பன எம்மில் இருந்து வேறுபட்டவை. அங்குள்ள பெண்கள் தங்களின் பொருளாதாரத்தை தாங்களே உழைத்து நிவர்த்தி செய்கின்றார்கள். அந்நாடுகளில் வாழும் பெண்கள் எந்தவொருவேளையிலும் நேரத்தை அநியாயமாக செலவிட விரும்புவதில்லை. ஆனால் அந்நாடுகளில் 50 வீதமான திருமணங்கள் விவாகரத்தில் முடிகின்றன. இதனால் அந்நாடுகளில் சிறுவர்கள் உளபாதிப்பிற்கு உள்ளாகின்றார்கள்.

அந்நாடுகளில் வாழுகின்ற எமது பெண்கள் அங்கே எமது பண்பாட்டை கடைப்பிடிக்க முடியாமலும் மேலைத்தேய நாகரிகத்தில் திழைக்க முடியாதநிலையிலும் உள்ளனர். இவ்வாறு எமது பெண்கள் இங்கிருந்து திருமணம் முடித்து மேலைத்தேய நாடுகளுக்கு போகும் போது மாபெரும் கற்பனையுடன் ஒரு சொர்க் கத்திற்கு போகும் எண்ணத்துடன் செல்கின்றனர். அங்கே அவர்களின் எதிர்பார்ப்புகளும், கற்பனைகளும் நிர்மூலமாவதால் சிலர் தற்கொலையும் செய்துள்ளார்கள். சிலர் உளப்பாதிப்பிற்கும் ஆளாகியுள்ளனர். ஆனாலும் பல பெண்கள் பல்வேறு தொழில்துறைகளில் தம்மை ஈடுபத்தி முன்னேறி வருகின்றார்கள். ஆனால் அவர்கள்தமிழீழத்தில் உள்ள பெண்களைப் போன்று தனித்து முடிவெடுக்கும் ஆளுமையும், திறமையும் எதுவும் என்னால் முடியும் எனும் துணிவும் இல்லை என்றே கூறவேண்டும்.

இவ்வாறு புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் பெண்கள் உள நெருக்கடிகளில் வாழ்ந்தாலும், அவர்களின் தமிழ் உணர்வு போற்றப் படவேண்டிய ஒன்றாகும். எமது பெண்கள் தங்களின் உழைப்பின் ஒரு பகுதியை இங்குள்ள வறியவர்களுக்குக் கொடுத்து உதவுகிறார்கள். அது மாத்திரமன்றி பல்வேறு வழிகளிலும் ஒத்துளைப்பு நல்குகின்றார்கள். இவர்களின் தமிழ் உணர்வுக்கு தலைவணங்க வேண்டியுள்ளது.

தமிழீழ பெண்கள் தங்களுடைய வல்லமையை எமது தேசியத் தலைவரின் காலத்திலேயே உணர்த்துள்ளார்கள், எமது தேசியத் தலைவரைப் பொறுத்தவரை பெண் விடுதலையில் ஆழமான சிந்தனை கொண்டவர். அவருடைய சிந்தனை என்னவென்றால்; ஆண்பெண் எனும் பால் நிலைக்கு அப்பால் மனிதனிடம் இருக்கும் அந்த மனிதத்தை மதிக்கின்ற பண்பு ஆண்பெண் இருபாலாரிடையேயும் வளர்த்தெடுக்கப் படல் வேண்டும். பெண்கள் அனைவரிடமும் ஆளுமை உண்டு அவ்வாளுமை வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். அப்போதே சமூகத்தில் பெண் ஒடுக்குமுறை என்பது இல்லாது ஒழிக்கப்படும் என தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். அவ்வாறான ஒரு தலைவரின் காலத்திலேயே நாம் தேச விடுதலைக்கும் பெண் விடுதலைக்கும் பாடுபடவேண்டும். இச்சந்தர்ப்பத்தை நாம் தவறவிடுவோமானால் நாம் எந்தவொருகாலத்திலும் விடுதலை பெறமுடியாது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 08. 10. 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## இரண்டும் ஒன்றே...!

திருகோணமலை மாவட்டத்தில் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்துக்குள் ஆயுதங்களுடன் பிரவேசித்த இரண்டு ஊர்காவல் படையினரை புலிகள் கைது செய்து தமிழீழ நீதிமன்றில் ஆஜர் படுத்தியுள்ள நிலையில் இந்த விவகாரம் சூடுபிடித்துள்ளது.

புலிகளால் கைது செய்யப்பட்ட இரண்டு ஊர்காவல் படையினரையும் விடுவிக்ககோரி திருகோணமலையில் சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இந்த நிலையில், இவர்களை விடுவிப்பதற்காக அரச தரப்பு அமைச்சர்களால் கேட்கப்பட்ட இரண்டு வார கால அவகாசம் நேற்றுடன் முடிவடைந்து விட்டது.

ஆனால் கைது செய்யப்பட்ட ஊர்காவல் படையினரை விடுவிப்ப தற்கான முயற்சி அரச தரப்பால் ஆக்கபூர்வமாக மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை என்றே கூற வேண்டும்.

அரசு; புலிகளுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் அரச கட்டுப்பாட்டு பகுதிகளுக்குள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் அரசியல் வேலைத்திட்டங்களுக்காக சென்று வரும் நிலையில், இரண்டு தரப்புக்கும் இடையில் நாட்டில் பிரத்தியேகமாக ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தொடர்பான விவகாரங்களை சிறிலங்காப் படையினரும் பொலிசாரும் சிக்கலாக்கும் காரியங்களிலே ஈடுபட்டே வந்தனர்.

பல்வேறு குற்றங்களை சுமத்தி புலிகள் இயக்க உறுப் பினர்களை கைது செய்த அரச தரப்பினர் அவர்களை நீதிமன்றில் நிறுத்தி பிரச்சனையை இடியப்ப சிக் கலாக்கியதன் விளைவு இப்போது ஊர்காவல் படை வீரர்களின் விடுதலையில் முட்டுப்பட்டு நிற்கிறது.

அரசதரப்புதெரிவிப்பதுபோல விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை விடிவிக்கும் விவகாரம் நீதிமன்றோடு சம்பந்தப்பட்டிருப்பின் புலிகளால் கைது செய்யப்பட்ட ஊர்காவல் படையினரின் விவகாரமும் நீதிமன்றோடு சம்பந்தப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதி பரிபாலனங்களை தாங்கி இயங்கிவரும் தமிழீழ நீதி மன்றங்களின்முன் எல்லோரும் சமமே.

சிறிலங்கா அரசால் நீதியின் பெயரால் விடு தலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களை விடுவிக்க முடியாது எனின் ஊர்காவல் படையினரையும் விடுவிக்க முடியாதிருப்பது நீதியின் பெயரால் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த நிலையில் கண்காணிப்புக் குழு தலைவர் ரொன் புறுவ் ஹொவ்டே ஒரு தரப்பினால் பிடித்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்ப தற்காக மற்றைய தரப்பைச்சேர்ந்தவர்கள் எதிர்த்தரப்பைச் சேர்ந்தவர் களைக் கைது செய்வதை கண்காணிப்புகுழு ஏற்றுக் கொள்ளாது என தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின் அரசதரப்பின் பிடியிலிருக்கும் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தொடர்பான முடிவு என்ன?

யுத்த நிறுத்த காலத்தில் அதாவது அரசு: புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நடை முறையிலிருக்கும் காலத்தில் கைது செய்யப்பட்ட புலிவீரர்களின் விடுதலையோடு கண்காணிப்புக்குழுவுக்கு எந்த சம்பந்தமும் இல்லையா?

கண்காணிப்புக் குழுத்தலைவரின் இக்கூற்றானது நிலைமையின் யதார்த்தத்தை புரிந்து கொள்ளாது தட்டி கழிக்க முயலும் ஒரு செயற்பாடாகவே பார்க்க வேண்டி யுள்ளது.

# தேசிய ஆலோசனை சபை சந்திரிகாவின் கேலிக்கூத்தா?

சமாதான முயற்சி முன் தொடா வதும் அமைதி வழியில் பிரச் சினைக்கு தீர்வு காண்பதும் சனாதி பதியின் கைகளில் தான் இருக் கிறது.

பிரச்சினைக்கு தீர்வு காண்ப தற்கான மார்க்கங்களை தன்கைக் குள் வைத்துக் கொண்டே கூடிப் பேசுவதும் பிரச்சினையைத் தர்க் கிப்பதும் காலத்தை இழுத் தடிக்க பயன்படுமேயொளிய பிரச்சினை யைத் தீர்க்க உதவப் போவ தில்லை. சனாதிபதி சந்திரிகா வினால் இறுதியாக சமாதான முயற்சிக்காக மேற்கொள்ளப் பட்டிருப்பதாக கொள்ளப்படும் தேசிய ஆலோசனைசபை இன்று எதற்காக கூட்டப்பட்டதோ அதன் எந்த நோக்கங்களையும் அல்லது யார் அதில் முதன்மையாக பங்கு பற்றி இருக்க வேண்டுமோ. அவா களின் பங்கு இன்றியே முதற் கட்டம் நிறைவடைந்திருக்கிறது. அத்தோடு கூட்டப்பட்ட தேசிய ஆலோசனை சபை கூட்டம் எனவும் நம்பப் படுகிறது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இந்தத் தேசிய ஆலோசனை சபையை முற்றாகவே நிராகரித் துள்ளது.

கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் இத்தகைய எந்த சபைகளோ மாநாடுகளோ தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண உத வப்போவதில்லை என்ற நிலை யில் புலிகள் இயக்கம் இருக் கிறது.

இதே நேரம் தேசிய ஆலோ சனை சபையை கூட்டி எதிர் கட்சிகளின் ஆதரவை சமாதான முயற்சிக்கு தேடவேண்டியஎந்தத் தேவையும் சனாதிபதி சந்திரிகா வுக்கு இல்லையென்றே கூற வேண்டும்.

ஏனெனில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசிய முன் னணியோ புலிகளின் இடைக் கால தன்னாட்சி அதிகார சபைக் கான திட்டவரைவின் அடிப் படையில் அரசு பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு எந்த நிபந் தனைகளுமின்றிஆதரவு வழங் கத்தயார் என ஏற்கனவே தெரி வித்திருப்பதோடு அதன் அடிப் படையில் பேச்சுக்களை முன் னெடுக்குமாறு வலியுறுத்தியும் வருகிறது. .

ஆனால் சனாதிபதி சந்திரி காவின் நோக்கமோ இதற்கு எதிர்மாறாக இருப்பதாக தக வல்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதி சந்திரிகாவுக்கு புலிகளின் இடைக்காலதன் னாட்சி அதிகார்சபைக்கான திட்ட வரைவின் அடிப்படையில் பேச் சுக்களை ஆரம்பிப்பதில் உடன் பாடு இல்லையெனவும் ஏற்க னவே அவரால் 2000ஆம் ஆண் டில் முன் வைத்த தீர்வுத்திட்ட யோசனைகளின் அடிப்படையில் ஒரு இடைக்கால திட்டத்தை சமர்ப்பிக்கவே விரும்புவதாகவும் தெரியவருகிறது.

இந்த வகையில் சனாதிபதி கடைசியாக மேற்கொள்ளப்பட்டி ருக்கும் இந்த தேசிய ஆலோசனை சபை அவரின் அபத்த நாடகத்தின ஒரு காட்சியாகவே நோக்க வேண்டி யுள்ளது.

சனாதிபதி சந்திரிகாவின் முன் இலங்கையின் இன்றைய தேசியப் பிரச்சினையாக சமா தான முயற்சி இருக்கிறது என் பதைவிட முடியும் தறுவாயில் இருக்கும் அவரது அரசியல் வாழ்வின் ஆயுட்காலமே மிக முக்கியமானதாக அவருக்கு இன்றுஇருக்கிறது.

நாட்டில் இன்று மீளவும் தோன்றும், பேரிடியாய் தினசரி வெளியாகும் பாவனைப்பொருட் களின் விலையேற்றத்தை சகித் துக் கொண்டு வாழும் அளவுக்கு இலங்கை மக்களின் தனி நபர் வருமானம் ஒன்றும் பெரிதாக இல்லை என்கிற நிலையிலும் நாளாந்தம் அத்தியாவசியப் பொருட்களின் விலை ரேஸ் குதி ரைகளைப் போல முடக்கிவிட்ட வேகத்தில் பாய்கிறது.

ஆனால் இந்த வேகத்தை விஞ்சுகின்ற வேகத்தில் அவ ரின் ஏமாற்று நாடகங்களுக்கான ஒத்திகைகளும் அரங்கேற்றங்க ளும் நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரிலும்,இலங்கையின் இறை யாண்மை என்ற பெயரிலும் நடக்கிறது.



ஆளும் கட்சியினது ஆலோசனைக் கூட்டமாகவே நிறைவுற்றிருப்பதே இதற்குக் காரணம்.

சமாதானத்திற்கும் நல்லெண் ணத்திற்குமான தேசிய ஆலோ சனைச்சபைக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுகந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மட்டுமே கலந்து கொண்டதால் இதன் வினைத்திறன் என்ன விளை வைத்தந்து விடப்போகிறது. பிரதான எதிர் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி கூறியிருப்பது போல இது ஒரு நாடகமாகவும் கேலிக் கூத்தாகவுமே முடிந் திருக்கிறது.

இ. இவ்வாறிருக்க சனா திபதி சந்திரிகா கூட்டிய தேசிய ஆலோசனைச் சபை மூலம் தன் மீது ஐக்கிய தேசிய முன்னணி அரசு சுமத்தியிருக்கும் வாழ்க் கைச் செலவு உயர்வு தொடர் பான குற்றச்சாட்டை திசைதிருப் பியிருக்கிறார் எனவும் இதன் மூலம் வாழ்க்கைச் செலவு உயர் வினால் கொதிப்படைந்திருக் கும் மக்களினதும் சமாதான முயற்சி தொடர்பான உலக நாடுகளின தும் கவனத்தை இந்த தேசிய ஆலோசனைசபை எனும் மாய மானின் திசையில் இழுத்து வைத்திருக்க முயல்கிறார்.

ஆனால் இலங்கையில் மக் கள் நலன் நிறுவனங்களும் சேவைகளும் படிப்படியாக அர சின் பிடிகளிலிருந்து மெல்ல நழுவி சர்வதேச தனியார் நிறுவ னங்களின் கைகளுக்கு மாறு வதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தின் பாதுகாப்பும், இலங்கையின் இறையாண் மையும் பறிபோவது எவரது கண் களிலும் படவில்லை. தேசிய ஆலோசனைசபை மூலமாக அல் லது ஒரு உடன்பாட்டின் அடிப் படையில் நாட்டின் நலனின் அடிப் படையில் சமாதான பேச்சுக்களை சாத்தியமாக்க ஓரே வழியாக இருக்கும் புலிகளால் சமர்ப்பிக் கப்பட்டிருக்கும் இடைக்கால தன் னாட்சி அதிகாரசபைக்கான திட்டவரைவின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதன் மூலமாக போரினால் பாதிக்கப் பட்ட தமிழ் மக்களும் வாழ்க் கைச்செலவினால் படாதபாடு படும் சிங்கள மக்களும் இயல் பான வாழ்க்கைச் நோக்கி நகர வழிவகுக்குமேயொளியவேறு எந்த மார்க்கமும் இப்போதைக்கு இல்லை என்று தான் கூற வேண்டும்.

சிறி.இந்திரகுமார்

# வெளித்தெரிந்த சம்பவங்களின் பின்னே மறைந்து கிடக்கும் பயங்கரங்கள்

மன்னார் என்ற வார்த்தை ஊடகங்களில் கடந்த சில நாட்களாக அதிகம் அடிபடுவதாக மாறிவிட்டது. ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், அதிலே ஒருவர் பலியானது, இதனையடுத்து மன்னாரிலுள்ள புலிகளின் அலுவலகங்கள் மூன்று அடித்து நொருக்கப்பட்டமை ஆகிய வெளித்தெரிந்த சம்பவங்களின் பின்னே மறைந்து கிடக்கும் பயங்கரங்கள். இந்த 'அடிபடுதலில்' பெருமளவுக்கு அடங்கியிருக்கவில்லை. வெளிவெளியாக நடந்தேறியவை பற்றியவையாகவே பெருமளவுக்கு அவை அமைந்துவிட்டன. அத்தோடு இதைவைத்து அரசியல் நடத்த முனையும் தரப்புகளின் செய்திகளுக்கும், அறிக்கைகளுக்கும் ஊடகங்களில் இடமளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வுகளின் பின்னே இரண்டு முக்கியவிடயங்கள் மறைந்து கிடப்பதனை நாம் கட்டாயம் இனங்காண வேண்டும். மன்னாரில் நடைபெறும் போதைப் பொருள் வர்த்தகம் (பரிமாற்றம் என்பது மிகவும் பொருத்தமாக இருக்கக்கூடும்), தமிழர் தாயகப்பகுதிகளில் இனமோதலைத் தூண்டிவிடுவதனூடாக அமைதியின்மையைத் தோற்றுவிக்க முனையும் மறைகரங்கள் என்பவையே அந்த இரு விடயங்கள். இந்த ஒவ்வொரு விடயங்களுக்குள்ளும் பல்வேறு துணைச் சக்திகள், காரணிகள் தொடர்புபடுவதோடு சில இடங்களில் ஒரே சக்தி இரண்டு விடயங்களுக்குமே பின்னணியிலிருப்பதையும் காணமுடியும்.

**பு.சத்தியமூர்த்தி**

இலங்கை சர்வதேச போதைப்பொருட் பாதையில் ஒரு கேந்திர நிலையமாக மாறிவருகிறது. அடிக்கடி பெருமளவிற் கைப்பற்றப்படும் பல்வேறு போதைப் பொருட்கள் இதற்கு சிறிய உதாரணம். சில வருடங்களுக்கு முன்பு நீர்கொழும்புப்பகுதி இதற்கான கேந்திரமாக இருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் புத்தளம் மன்னார் ஆகிய இரு பகுதிகளும் போதைப்பொருள் தரையிறங்கும் இடங்களாக மாறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தங்க முக்கோணத்திலிருந்து தென்னிந்தியாவூடாக கடல் வழியாக வரும் ஹெரோயின் சிறிலங்காவிலிருந்து பல்வேறு நாடுகளுக்கும் பரிமாற்றப்படுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இவ்வாறு கடல் வழியாக வரும் போதைப் பொருட்களைக் கையேற்றுப் பரிமாற்றுவதில் பல குழுக்கள் ஈடுபடுகின்றன.

> **இலங்கை சர்வதேச போதைப் பொருட் பாதையில் ஒரு கேந்திர நிலையமாக மாறிவருகிறது. அடிக்கடி பெருமளவிற் கைப்பற்றப்படும் பல்வேறு போதைப் பொருட்கள் இதற்கு சிறிய உதாரணம். சில வருடங்களுக்கு முன்பு நீர்கொழும்புப் பகுதி இதற்கான கேந்திரமாக இருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் புத்தளம் மன்னார் ஆகிய இரு பகுதிகளும் போதைப்பொருள் தரையிறங்கும் இடங்களாக மாறிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தங்கமுக்கோணத்திலிருந்து தென்னிந்தியாவு,டாக கடல் வழியாக வரும் ஹெரோயின் சிறிலங்காவிலிருந்து பல்வேறு நாடுகளுக்கும் பரிமாற்றப்படுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இவ்வாறு கடல் வழியாக வரும் போதைப் பொருட்களைக் கையேற்றுப் பரிமாற்றுவதில் பல குழுக்கள் ஈடுபடுகின்றன.**

கடந்த வாரம் மன்னார்-தலைமன்னார் வீதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகிப் பலியான நபரும் இவ்வாறானதொரு குழுவின் உறுப்பினரே என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு தெரிவித்தவர்களில் மன்னார் பொலிசாரும் உள்ளனர். ஒக்ரோபர் 2 ஆம் திகதி குறித்த கொலைச்சம்பவம் இடம்பெற்ற இடத்தை சல்லடையிட்டுத் தேடிய பொலிசார் அங்கு பற்றையொன்றினுள் வீசியெறியப்பட்டிருந்த நிலையில் 1800 கிராம் ஹெரோயின் அடங்கிய பொதியொன்றைக் கண்டெடுத்தனர். இந்தப் பொதிக்கான 'துரத்துதலே' மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குக் காரணமாயிருக்கலாமென மன்னார் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

போதைப் பொருட்களைக் கடத்தும் 'மாபியா' கும்பல்கள் தமக்குள்ளும் போட்டிக்குழுக்கள் மீதும் அடுக்கடுக்கான கொலைகள் புரிவது உலகப் பிரசித்தமான விடயம். அதுமட்டுமன்றி இவ்வாறான குழுக்கள் 'ஒப்பந்தக் கொலை' களைப் புரிவதும் உலகறிந்ததே. கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் இயங்கும் பாதாளஉலகக் குழுக்கள் இவ்வகையானவையே. 'கொலை' என்பது அக்குழுக்களுக்கு ஒரு வருமானமீட்டும் வழி என்பதோடு, போட்டித் தவிர்ப்புக்கான வழியுமாகும். அத்தோடு போதைப் பொருள் கடத்துபவர்கள் சமூகத்தில் எப்படியான அந்தஸ்திலும் இருக்கக்கூடும் என்பதுடன், அவ்விடயம் வெளிப்படையாகத் தெரியக்கூடியதாகவும் இருக்காது என்பதுவும் இங்கு கவனிக்கத்தக்கது.

நிலைமைகள் இவ்வாறு இருக்க, சம்பவம் நடந்த அன்று நள்ளிரவில் மன்னாரிலுள்ள, புலிகளின் மூன்று அலுவலகங்கள் 'உணர்ச்சிவசப்பட்ட' முஸ்லிம் கும்பலொன்றினால் அடித்து நொருக்கப்பட்டன. கொலையைப் புரிந்தது புலிகளே என்ற முடிவுக்கு எந்தவித ஆதாரமோ, தடயமோ இன்றித் தான்தோன்றித்தனமாக வந்த இவர்கள் மிலேச்சத்தனமாக நடந்துகொண்டார்கள்.

இதிலுள்ள விசேஷம் என்னவெனில் இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு ஏறக்குறைய மூன்று மணி நேரத்திற்கு முன்பாக 10 வரையான சிறிலங்காப் பொலிசார் புலிகளின் அலுவலகங்களைச் சூழ நிறுத்தப்பட்டதுதான் இந்தப் பொலிசார் தாக்குதலைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். அப்படியாயின் தாக்குதல் நிகழப்போவது பொலிசாருக்கு குறைந்தது மூன்று மணிநேரத்துக்கு முன்பாகவே தெரிந்திருக்கிறது என்பது இங்கே புலப்படுகின்றது அல்லவா?

இந்தச் சம்பவத்தை பொலிசார் அறிக்கையிட்ட விதத்தைப்பாருங்கள், "மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து இனங்களுக்கிடையேயான உறவைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட கும்பலொன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகங்களை உடைத்துச் தேசப்படுத்தியுள்ளது" ஆக தாக்குதலின் "நோக்கத்தை" பொலிசார் அறிந்துதான் இருக்கின்றார்கள்.

இந்தத் தாக்குதல்களின் பின்னணி என்ன? இன்று கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் பகுதிகளில் 'சமூக சீர்திருத்தக் குழுக்கள்' முளைத்துள்ளன. இவர்கள் இஸ்லாமிய மத நம்பிக்கைகளுக்கு விரோதமான செயல்களில் ஈடுபடுவதாக தாம் கருதுபவர்களைத் தண்டிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள். லொத்தர் சீட்டு விற்பனை, மது, சூது விளையாடுதல், பாலியல் துர்நடத்தை, வீடியோ நாடாக்களை வாடகைக்கு விடுதல் போன்ற செயல்களில் ஈடுபட்ட பலர் மீது அண்மைக் காலமாகப்பரவலான 'தண்டிப்புக்கள்' நிகழ்ந்துள்ளன. எவ்வாறான தண்டனைகளை இக்குழுக்கள் வழங்குகின்றன? துப்பாக்கிச் சூடு, கைக்குண்டு வீச்சு ஆகியனவையே, அதாவது மரணமே இக்குழுக்களின் தண்டனை ஆகும்.

'முஸ்லிம்களும், தமிழர்களுமே போதைப் பொருட்களை நாட்டுக்குள் கொண்டுவருகின்றார்கள்' என்று அண்மையில் மகாநாயக்க தேரர் ஒருவர் காட்டமாகத் தெரிவித்திருந்த கருத்தை இங்கு உற்றுக் கவனித்தல் வேண்டும். இந்தச் சூழலில் மேற்படி 'சமூக சீர்திருத்த, மதநம்பிக்கை குழுக்கள்' இந்தத் துப்பாக்கிச் சூட்டினை நடத்தி இருக்க முடியாதா?

இதை விடவும் வேறு பல காரணங்களும் இக் கொலைக்கு பின்னால் இருக்கக்கூடும். ஆனால் நிராகரிக்க முடியாத மிக வலுவான மேற்படி இரு காரணங்களுமே கவனத்திற்கெடுக்கப்பட்டனவா என்றால் இல்லை என்றே பதில் வரும்.

இன்றைய முஸ்லிம் இளைஞர்கள் தீவிர சிந்தனைப் போக்குள்ளவர்களாகவும், வன்முறை மீது அதீத நாட்டமுடையவர்களாகவும் வளர்ந்து வருகின்றனர். இதனை முஸ்லிம் பகுதிகளில் தினமும் நடக்கும் சம்பவங்களை அவதானிப்போர் நிச்சயம் அடையாளங் காண்பர். சமூகத்தில் நடைபெறும் எந்தவொரு சம்பவத்துக்கும் அதீதமான எழுச்சியுடனும் திரட்சியுடனும் வன்முறை வடிவில் பதிலளிக்கப்பட்டு விடுகிறது. இதன் ஆபத்து எங்கே இருக்கிறதென்றால், இந்தப் பதிலளிப்புக்கான காரணங்கள் இவர்களின் பதிலளிப்பின் பின்பும் தொடர்ந்தால் தொடர்தேர்ச்சியாக இவர்களால் அதே பாணியில் பதிலளிக்க முடியுமா என்பதில் தான். தொடர்வன்முறை அலையென்பதினுள் முஸ்லிம் சமூகம் இழுபடவோ அன்றிக் கையறு நிலையில் பொங்கிய சோடா GAS போலப் பட்டென அடங்கவோ நேரிடலாம். இது இவர்களது 'போராட்டத்தை' மிகப் பலவீனமாக்கிவிடும். உலகளாவிய ரீதியில் இஸ்லாமியர்கள் இன்று சந்திக்கும் நெருக்கடி இது தான். வன்முறைக்குச் சமாந்தரமாக முன்னெடுப்பதற்கான பாதையெதுவும் அங்கே இல்லை. அப்படி ஏதும் இருப்பினும் அதுவும் வன்முறையால் விழுங்கப்பட்டுவிடுகிறது.

முஸ்லிம்களின் இந்தப் பண்பை அல்லது பலவீனத்தை பல்வேறு சக்திகளும் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. முஸ்லிம் அரசியல் வாதிகள் இவர்களில் முதன்மையானவர்கள். சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு, உளவியல் போர் முறை நிபுணர்கள் இப்போது கடைசியாகப் பாகிஸ்தானின் ISI எல்லோரும் களத்திலே இறங்கியிருக்கிறார்கள். மட்டக்களப்பிலே முரளிதரனின் பெயரால் யாழ்ப்பாணத்திலே குருநகர் மீனவர் பெயரால் களமிறங்கியவர்கள், மன்னாரிலும் தற்போது களமிறங்கி இருக்கிறார்கள். இதற்குப் பலியாகாமல் இருக்கவேண்டியது சம்பந்தப்பட்டவர்களே. ஏனெனில் எதிர் விளைவுகள் ஏற்படப்போவதும், அவற்றை அனுபவிக்கப்போவதும் இவர்களுக்கேயன்றி அவர்களுக்கல்லவே. அத்தோடு இங்கு ஒரு இன மோதல் உருவாகுமாயின் அதன் தீமைகள் அனைத்தும் இங்கே வாழ்பவர்களுக்கும், நன்மைகள் அனைத்தும் அதனை தூண்டிவிடுபவர்களுக்குமாகவும் இருக்கும். ●



# அரபாத்தின் வெற்றிடத்தை ஹமாஸ் ஈடு செய்யுமா?

ஐங்கரன்

பலஸ்தீன விடுதலைப் போராட்டம் நெருக்கடி காலநிலையையும் கடந்து சென்றுகொண்டிருக்கிறது. அடிப்படையற்ற போராட்டத்தை பின்பற்றும் ஒரு விடுதலைப்போராட்டமாக மாறிவரும்வேளையில் ஆயுதங்களை மட்டுமே நம்பிக் கொண்டு வன்முறையே போராட்டமென திட்டமிட்டுக்கொண்டிருக்கும் ஹமாசின் கைகளும் பலவீனப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் பலஸ்தீன விடுதலை (PIO) இயக்கம் மட்டுமே அழிந்து விடும் ஹமாஸ் போராட்டத்தை தக்க வைத்துவிடும் என்ற நம்பிக்கை தென பட்டது. ஆனால் அது கூட கையறு நிலைக்கு வந்துவிட்டதுபோல் காணப்படுகின்றது. காஸாவை மையப்படுத்தி ஏரியல் ஷரோனின் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான தந்திரோபாய அணுகுமுறையை பரிசீலிப்போம்.

1993ஆம் ஆண்டு செய்யப்பட்ட காஸா-ஜெரீக்கோ உடன்பாட்டின் கீழ் பலஸ்தீன விடுதலை இயக்கம் அதிக நம்பிக்கையோடு செயற்பட்டது. ஆனால் அதன் அடிப்படையே அமுலாக்க முடியாத சூழலில் 1997 இல் அதனை அமுல்படுத்த வைநதி உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்ட போதும் அதனையும் பாதியில் தவறவிட்ட இஸ்ரேலியத் தரப்பு அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலஸ்தீன தேச நிர்மாணத்தை சிதைவுக்குட்படுத்தி வந்தது. இறுதியில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கமாக மாற்றிக்கொண்டு காஸாப்பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுயன்றது. ஜெரீக்கோ பிரதேசத்தைப்பற்றி ஆரம்பத்தில் இழுபறி நிலவினாலும் பின்னர் அப்பகுதி முக்கியத்துவமற்ற பிரதேசமாக மாறியதுடன், காஸா முந்தன்மை வகித்தது. காஸாவை மையப்படுத்தி யசீர் அரபாத்தும் அவரது அமைப்பும் செயற்பட்டதுடன் ஹமாஸ் இயக்கமும் காஸாவிலிருந்து தனது தீவரவாத நடவடிக்கையை நிகழ்த்தியது. இது கடந்த நான்கு வருடமாக நீடித்த இராணுவ அரசியல் நிகழ்வாக அமைந்தது.

காஸாப் பிரதேசத்தில் ஏற்பட்டு வந்த அரசியல் நடவடிக்கைகளாலும் அதனை ஒட்டி வளர்ந்த ஹமாஸ் இயக்கத்தின் நடவடிக்கையையும் முறியடிக்க ஷரோன் அரசாங்கம் பாரிய நடவடிக்கையில் ஈடுபடத்தொடங்கியது. ஏற்கனவே ஆட்சியிலிருந்த இஸ்ரேலியத்தரப்பு ஜெரீக்கோ பிரதேசத்தை யூதர்களது புனிதப் பிரதேசமாக ஆக்குவதிலும் அதன் செல்வாக்கை பேணுவதிலும் வெற்றி கண்டது போல் காஸாவை கையாள திட்டமிட்டிருந்தது. இத்திட்டமிடலுடன் ஆட்சிக்குவந்த ஏரியல் ஷரோன் படிப்படியாக காஸாப்பகுதியை நோக்கி இராணுவ நகர்வுகளை தீவிரமாக்கியதுடன் யூதக்குடியிருப்புக்களை பாதுகாக்கும் திட்டங்கள் பலவற்றை வரைந்தது.

யூதக்குடியிருப்புக்களை பேணும் வகையில் இராணுவ முகாம்களை விஸ்தரிப்பதுடன் வீதித்தடைகளையும் சுவர்களையும் அமைத்து பலஸ்தீனர்களை தடைசெய்ய முயன்றுவருகிறது. இதே நேரம் பலஸ்தீன தொழிலாளர்களில் தங்கியிருக்கும் இஸ்ரேலியப் பிரதேச தொழில் நிறுவனங்கள் இராணுவ வேலிகளுக்குள்ளால் தொழிலாளர்களை அழைத்து வேலைக்கு அமர்த்திவருகின்ற- கொடுமையான அணுகுமுறையை பின்பற்றிவருகிறது. இவற்றைவிட இராணுவ ரீதியான தாக்குதல்கள் எறிகணை வீச்சுக்கள், பலஸ்தீன குடியிருப்புகள், அகதிமுகாங்களை இடித்து அழிக்கும் நடவடிக்கைகளை கடந்த காலங்களில் தீவிரப்படுத்திவருகின்றது. இதன்மூலம் உளவியல் ரீதியாக பலஸ்தீனத் தரப்பை அச்சத்துக்கும் பலவீனத்துக்கும் உள்ளாக்கிவரும் நிகழ்வுகளை அவதானிக்க முடிகிறது.

காஸாப் பகுதியிலிருந்து யூதர்குடியிருப்புக்களை அகற்றுவதாக பல ஆண்டுகளுக்கு முன்பே யூதத்தரப்பு உத்தரவாதங்களை வழங்கியிருந்தது. அதனை மிகத் தீவிரமாகக் காட்டிக்கொண்ட ஷரோன் அதனை பலஸ்தீனருக்கும் உலகத்திற்கும் காட்டுகின்ற அரசியல் தந்திரமாக கையாளத்தொடங்கினார். அதனை உலகமும் பலஸ்தீன விடுதலைப் போராட்டமும் நம்புமளவுக்கு நிலைமையை ஷரோன் திரித்துக்காட்டினார். பலஸ்தீனியர் தரப்பு இதனை ஒரு வெற்றியாகக் கருதியதுடன் அதனை கொண்டாடத்திட்டமிட்டுவந்தது. குறிப்பாக பலஸ்தீனத் தரப்பைக் காட்டிலும் காஸா தனது இராணுவ உபாயங்களுக்கு சிறப்பான வாய்ப்பளிக்கும் கழ்வாகக் கருதியது. கடந்த ஆண்டு குடியிருப்புக்களை விலக்கிக் கொள்வதற்கு ஷரோன் திட்டவட்டமான அறிவிப்பை விடுத்திருந்தார். ஆனால் என்னுமே அதற்கான பூரண வேலைகளையேனும் நிறைவேற்றாது மாற்றுத்திட்டங்களை வகுத்து ஒழுங்குபடுத்துகின்றார்.

ஆரம்பத்தில் காஸாப்பகுதியிலிருந்து குடியிருப்புக்களை விலக்கிக் கொள்வதாக அறிவித்த ஷரோன் பின்னர் காஸாப் பகுதியிலிருந்து யூதப் பிரதேசத்துக்குள் நிகழ்த்தும் தற்கொலைத் தாக்குதல்களை நிறுத்திவிட்டு வெளியேறுவதாக கூறினார். பின்னர் காஸாப்பகுதியிலுள்ள- தமது பாதுகாப்பு முகாங்களை தொடர்ந்து பேணிக்கொள்வதென அறிவித்தார். தற்போது இஸ்ரேலிய விமானத்துறைகளையும், அதன் நிலைகளையும் பாதுகாப்பதென அதற்காக யூதப்படைகளை காஸாப் பகுதியில் வைத்துக்கொள்வதென அறிவித்துள்ளார். இவ்வாறு படிப்படியாக கொள்கைகளை மாற்றிக்கொள்வதோடு மேற்குக் கரைப்பிரதேசத்தை பலப்படுத்துவதில் ஷரோன் அரசாங்கம் முனைப்பாக உள்ளது.

இவ்வாறு ஏரியல் ஷரோன் அரசாங்கம் அடிக்கடி கருத்து நிலையை மாற்றுவதற்கு காரணங்கள் தனித்துவமானவையாக விளங்குகின்றன. காஸாப்பகுதியுடன் பலஸ்தீனரது அரசாங்கம் அமைக்கப்பட்டிருப்பதால் அப்பகுதியிலுள்ள இயல்பான நிலைமையை அழிவுக்குள்ளாக்கி ஆட்சிமுறையை முடிவுக்குக் கொண்டு வருதல், மக்களாலும் போராட்ட சக்திகளாலும் பலஸ்தீன சனாதிபதியை தனிமைப் படுத்துவது யசீர் அரபாத்தை கொண்டே ஹமாஸ் போராட்ட கிளர்ச்சிவாதிகளை அழித்தல்- இவ்வாறான நடத்தை முழுமையான பலஸ்தீன கட்டமைப்பைக் குலைப்பதுடன் பலஸ்தீன இயக்கத்திலோ அல்லது ஹமாஸ் அமைப்பிடமோ மக்களின் உறவை ஏற்படாதவகையில் கையாண்டு முற்றாக பலஸ்தீனர்களை அப்புறப்படுத்துவதே நோக்கமாக உள்ளது. யூதர்களின் பிரதான இலக்கான விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. மக்களோ, போராட்டப் பிரிவினரோ இனியும் ஆயுதரீதியில் அரபாத்தின் தலைமையில் போராடுவார்கள் எனக்கருதுவது சாத்தியமற்றது. ஆனால் ஹமாஸ் அதனை நிரப்பும் என்ற நம்பிக்கையும் படிப்படியாக கரைந்து கொண்டிருக்கிறது. ஹமாஸ் எப்படி முன்னெடுக்கும் எனக்கருதப்பட்டதோ அப்படியான அணுகுமுறைகளை முற்றாக தகர்ந்துவருகிறது. இது பலஸ்தீனர்களின் எதிர்காலம் பற்றிய அச்சமாகவே உள்ளது. அதனை ஏற்படாது தவிர்த்து ஹமாஸ் செயற்படுமாயின் மட்டுமே பலஸ்தீனர்கள் பாதுகாக்கப்படுவார்கள் இல்லையேல் உலகத்திற்கு அனுபவமாக மட்டுமே பார்க்கப்படும் விடுதலைப் போராட்டமாக அமையும். எனவே ஹமாஸ் நிலை பற்றி விரிவாக நோக்குவோம்.

ஹமாஸ் அமைப்பை ஒரு விடுதலை அமைப்பாக யாரும் கருதவில்லை. ஹமாஸின் பிறப்பே தற்கொலைத் தாக்குதலாக அமைந்திருந்தது. அதுவும் இஸ்ரேலியப் பிரதேசத்தில் சிவிலியன்கள் வாழும் பகுதிகளில் நடத்துவதனூடாக போராட்டத்தை நடத்தலாமே அன்றி விடுதலைப் போராட்டத்தை வெண்றுவிடமுடியாது. ஹமாஸ் தனித்து தற்கொலை தாக்குதலிலேயே குறிப்பாக உள்ளது. பலஸ்தீன விடுதலைப்போராட்டம் முன்னெடுக்கப்பட்ட மாதிரியில் தடம்பதிக்கும் இயக்கமாக இல்லாதுவிட்டாலும் மறைமுகமாக தாக்குதல் யுக்திகளை சார்பு நிலையில் வைத்துசெயற்படவேண்டிய நிலை உள்ளது. பல ஆண்டுகளாக ஹமாஸ் தற்கொலைத் தாக்குதல் அல்லது எறிகணைத் தாக்குதலை நிகழ்த்திவருகிறது. இது எதிரியை அழிப்பதாகக் கருதி சிவிலியன்களை மேலும் யூத இராணுவ நடவடிக்கையோடு இணைப்பதாகவே அமைந்துவிட்டது. ஹமாஸ் உடன் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் இணைந்திருந்தாலும் போராட்டத்தளம் பலஸ்தீனத்துக்கு வெளியே விரிந்து பரந்து கிடக்கிறது. அரசியல் ரீதியில் பாரிய வேலைத் திட்டத்தை வடிவமைத்து செயற்படுத்தினால் உலக நாடுகளின் தார்மீக ஆதரவு மாற்றத்தை ஏற்படுத்தும்.

யசீர் அரபாத் செய்யக் கூடிய உடனடி வேலை சர்வதேச மட்டத்தில் ஆதரவு சக்திகளை திரட்டுவதே சிறப்பான விடயம்.அதனை ஹமாஸ் அமைப்பாக செயல் வடிவம் கொடுத்திருக்குமாயின் போராட்டத்தின் அடித்தளம் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

ஹமாஸ் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தும் பயங்கரவாத அணுகுமுறையை நிறுவுவதாக உள்ளது. படிப்படியாக யூதர்களும் அதனை நிறுவ முயலுவதுடன் சர்வதேச சக்திகளின் ஆதரவுடன் யூதர் காணப்படுவதானால் இலகுவாக ஹமாஸை பயங்கரவாத அமைப்பென நிறுவிவிடுவார்கள். ஹமாஸ் இவ்வாறு செயற்படுவதானால் யசீர் அரபாத்துக்கு பின்னர் இலகுவாக யூதர்கள் பலஸ்தீன மக்களை கையாளுவார்கள். காஸாப்பகுதியிலிருந்து தாக்குதலை யூதர் குடியிருப்புகள் மத்தியில் நிகழ்த்திக் கொண்டிருந்தால் இறுதியில் மிஞ்சப் போவது பயங்கரவாதம் என்பது மட்டுமேயாகும். இதனால் ஹமாஸ் அமைப்பின் போக்கில் மாறுதல் அவசியம் என்பது உலகத்தின் போக்கை அவதானிக்கும் போது புரிந்துகொள்ள முடிகிறது.

சமகால உலக அரசியல் போக்கில் விடுதலைப் போராட்டம் என்பது அரசியல் பலத்தை கொண்டிருக்கும்போது மக்களின் அரவணைப்புடன் செயற்படக் கூடியதாக இருத்தல்வேண்டும். பாதுகாப்பை கொண்டிருக்கும் இராணுவ யுக்திகளையும், தாக்குதல் திறன்களையும் கொண்டிருந்தாலும் மிகத்தீவிரமான அரசியல் நகர்வுகளை புரிந்து கொண்டு செயற்படக்கூடிய ஆளுமை அவசியமானது. மக்களின் அரவணைப்பை உலகத்திற்கு வெளிப்படையாகவே காட்டவேண்டும். மிக உயர்ந்த நிலையில் காட்டுகின்றபோது மட்டுமே உலகம அதிர்ச்சியடையும்.

மிக அண்மையில் ஆசியாவின் பயங்கரவாத பட்டியலில் அமெரிக்கா வைத்திருந்த ஆசிய அமைப்புக்கள் பல மக்களின் பலத்தையும் விருப்பத்தையும் கொண்டிருப்பவையாக இருப்பதோடு பூரண நிதி உதவி அவற்றுக்கு கிடைப்பதாக அமெரிக்கா கூறுகின்றது. இதனால் அத்தகைய அமைப்புக்களை முறியடிக்க முடியாதுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு பயங்கரவாத அமைப்புக்களாக அவற்றை வரையறுக்கலாமா அல்லது அமெரிக்க நலனுக்கு அது செய்யப்பட்டதா? என்பதெல்லாவற்றையும்விட மக்களுடன் அரவணைப்புக் கொண்ட போராட்டங்கள் விடுதலைக்கான பாதையில் வெகுவிரைவாக வெற்றி வாய்ப்பை பெற்றுள்ளன.

எனவே அரபாத்தை ஈடுசெய்ய ஹமாஸ் தவறுமாயின் பலஸ்தீன மக்களின் விடுதலையும் போராட்டமும் அஸ்தமனத்தையே தளுவும். ●

பயணம் 06



# படையினரின் மண் அணையால் வீடுகளுக்குள் மழைநீர் வருகிறது

## -கரிப்பட்டமுறிப்பு மக்கள்-

**அ.அருள்**



கரிப்பட்ட முறிப்பு கிராமம் ஒரு காலத்தில் மிகவும் பிரபல்யமாக பேசப்பட்ட ஓர் கிராமமாகும். இதற்கு இரண்டு வகையான காரணங்கள் உண்டு. ஒன்று கிளிநகர் இடம் பெயர்வினால் பல மக்கள் இப்பகுதியில் குடியேறியதுடன் பல நிறுவனங்களும் இப்பகுதியில் இயங்கி வந்தன. அடுத்து ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது முக்கியத்துவம் வாய்ந்த இக்கிராமத்தின் மீதான பாரிய மூர்க்கத்தனமான இராணுவ நடவடிக்கையில் சிக்கித்தீக்குளித்தது.

இராணுவ ஆக்கிரமிப்புக்குள் வந்த பின்னர் இக்கிராமம் ஒரு இராணுவமுன்னணி காவலரண்களைக் கொண்டு பாரிய இராணுவ படைத்தளமாகவும், கனரக மோட்டார் தளமாகவும் விளங்கியது. இதன் பின்னர் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின் மூலம் மீட்கப்பட்ட இக்கிராமத்தில் மக்கள் மீளக் குடியேறி வருகின்றார்கள். இவர்களை சந்திக்கும் நோக்கோடு இக்கிராமத்திற்குச் சென்றோம். கரிப்பட்ட முறிப்பு ஊரக புனரமைப்புக் குழுத் தலைவர் ம.தவராஜசிங்கம் அவர்கள் கூறியவை. பின் வருமாறு

"நாங்கள் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை காரணமாக 1997 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து போய் 2000ஆம் ஆண்டு தான் இங்கை வந்தனாங்கள். நாங்கள் கமம், கூலிபோன்ற தொழில் செய்யுறம். எங்களுக்கு இப்ப இஞ்ச மேட்டுப் பயிர், தோட்டம் ஒண்டும் செய்யேலாது. ஏனெண்டா எங்கட சனத்தின்ர காணியெல் லாம் ஆமி பண்ட் அடிச்சு வைச்சிருக்கிறான். கனபேரின்ட காணியில கிண்டி கிரவல் எடுத்து றோட்டுக்கு போட்டிட்டான். முதல் தோட்டம் செய்யிற காணியெல்லாம் இப்ப ஒண்டும் செய்யேலாது. நாங்கள் இடம் பெயர்ந்து போய் திரும்பி வரேக்குள்ள எங்கட காணி எதுவெண்டு கண்டு பிடிக்கவே சனம் கஷ்டப்பட்டதுகள். அப்பிடியிருந்தது! இஞ்ச றோட்டு ஒண்டும் சரியில்லை. எல்லாம் "பண்ட்" டால மூடி வைச்சிருந்தான். சிலர் மூவாயிரம், நாலாயிரம், குடுத்து வெட்டி றோட்டு எடுத்தவை. கஷ்டப்பட்ட சனம் ஒண்டும் செய்யேலாது. அப்படியே வீட்டை போட்டுட்டு பண்டால தான் போய்வருகுதுகள். நாங்கள் எல்லாரிட்டையும் கேட்டனாங்கள் இந்த பண்ட அகற்றிவிடுங்கோ எண்டு. ஒருதரும் செய்து தரேல்லை" என்றார். இவரைத் தொடர்ந்து கனகராயன் குளம் கரிப்பட்ட முறிப்பு வீதியில் அமைந்துள்ள தம்பனை எனும் இடத்தில் வசிக்கும் மக்களை சந்தித்தோம்.

இம்மக்களின் வீடுகள் சிறியகொட்டகைகளால் ஆனது. நாளாந்த கூலித்தொழில் செய்யும் இவர்களின் வீடுகளைச் சூழவும் மண் அணைகள் காணப்பட்டன. வறுமையில் வாடும் இம் மக்கள் அனைவரும் வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து வந்துள்ளனர். இவர்களில் முருகேசு இராசம்மா என்பவர் கூறுகையில்;

"நாங்கள் இஞ்சயிருந்து இடம்பெயர்ந்து போய் வவுனியா முள்ளிக்குளத்தில இருந்தம், அங்க ரணகோச இராணுவ நடவடிக்கையால இடம்பெயர்ந்து வாரிக்குட்டியூர் அகதி முகாமில இருந்து இப்ப இஞ்ச வந்திருக்கிறம். எங்கட வீடுகளுக்கு பக்கத்திலயே பண்டுகள் இருக்கிறதால காணிகளுக்க தோட்டம் ஒண்டும் செய்யேலாது. வீட்டுக்கு போற பாதையெல்லாம் மூடி பண்ட், அடிச்சி வைச்சிருக்காங்கள். இதால போய் வாறதும் கஷ்டம். அதோட இப்ப பய்கிற மழையில வெள்ளம் வீட்டுக்க உள்ளடுது. இதைத் தயவு செய்து சீர் செய்தா உதவியா இருக்கும்" என்கிறார் அவர்.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பழமைவாய்ந்த கிராமமான கரிப்பட்ட முறிப்பு இன்று மக்கள் வாழமுடியாத அவல நிலையில் உள்ளது. இராணுவ நலனுக்காக கனகராயன் குளம்- கரிப்பட்ட முறிப்பு வீதி அந்தக்காலப்பகுதியில் இராணுவத்தால் புனரமைப்பு செய்யப்பட்டது. இதற்கான கிரவல் மண் மக்களின் காணிகள்மேல் மண் அகழப்பட்டு இராணுவ பாதுகாப்பு அரணாகவும் கிரவல் மண் வீதி புனரமைப்புக்குமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது கரிப்பட்ட முறிப்பு கிராமத்தில் மட்டுமல்ல மணவாளன் பட்டமுறிப்பு, மேழிவனம், தச்சடம்பன், பெரிய புளியங்குளம், கற்கிடங்கு ஆகிய கிராமங்களிலும் இவ்வாறான மண் அணைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு திட்டமிட்ட வகையில் சிறிலங்கா இராணுவத்தால் மக்கள் குடியிருப்பு மண் காணிகளில் அகழப்பட்டு பெரும்பாலான இடங்களில் மக்கள் குடியிருக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. விவசாயத்தை மையமாக கொண்ட இக்கிராமங்களில் விவசாய நிலங்களிலும் மண் அகழப்பட்டதாலும், கிராமங்களில் மண் அரண்கள் நிறைந்து காணப்படுவதாலும் மீள் குடியேறிய மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அத்துடன் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர மண் அணைகளும் பெரும் இடையூறாக இருப்பதாகக் கூறுகின்றனர்.

இவ்வாறு மீள் குடியேற வேண்டிய குடும்பங்களில் இது வரை மணவாளன்பட்ட முறிப்பு கிராமசேவையாளர் பிரிவில் வசித்த 168 குடும்பங்களில் 116 குடும்பங்கள் மீள் குடியமர்ந்துள்ளனர். இன்னும் 52 குடும்பங்கள் மீள் குடியமர வேண்டியுள்ளன. இதே போன்று தச்சடம்பன் கிராமசேவையாளர் பிரிவில் வசித்த 174குடும்பங்களில் 136 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் 38 குடும்பங்கள் மீள் குடியேற வேண்டியுள்ளன.



இவர்களின் பெரும்பாலானோர் வவுனியா அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர். இவர்களின் காணிகளும் அகழப்பட்டு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் உள்ள மண் அணைகள் வில்வடிவிலும் பரிதி வடிவிலும் பாரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன. கிராம சேவையாளரின் கணிப்பின்படி மணவாளன்பட்டமுறிப்புக் கிராம சேவையாளர் பிரிவில் ஏறத்தாள 12கிலோ மீற்றர் நீளமான மண் அணைகளும் தச்சடம்பன் கிராம சேவையாளர் பிரிவில் ஏறத்தாள 25 கிலோ மீற்றர் நீளமான மண் அணைகள் உள்ளதாகவும் இதில் இரண்டு கிராமசேவையாளர் பிரிவுக்குள்ளும் / 500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் இம்மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு இந்நிலம் பயனற்றதாக ஆக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இம்மண் அணைகளை அகற்ற சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் இதற்கான நடவடிக்கை இன்னும் மேற்கொள்ளவில்லையென தெரிவித்தார். அத்துடன் மண் அணைகளால் இக்கிராமங்களின் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக இம் மண் அணைகள் அகற்றுவது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக மாங்குளம் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தெரிவித்தார்.

ஆனாலும் இவை உடனடியாக சீர்செய்யப்பட்டு மீள் குடியேறிய மக்களின் இயல்பு வாழ்வு தோற்றுவித்தல் வேண்டும். இம் மண் அணைகளால் இவர்களின் போக்குவரத்து, தொழில், கமம் என பல்வேறு துறைகளிலும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இவ் இன்னல்கள் தீர்க்கப்படுமா?

தமது கிராமத்தின் வளங்கள் யாவும் கடும் யுத்தத்துக்குள் அகப்பட்டு அழிந்து போன நிலையில் மீண்டும் தமது கிராமத்தில் குடியேறி இருக்கும் இம் மக்களுக்கு அபிவிருத்தி உதவிகள் தேவையாகவுள்ள நிலையில் தமது முயற்சியினால் விவசாயத்தை மேற்கொள்வதாக இருந்தால் கூட இந்த இராணுவ மண் அணைகள் பெரும் தடையாக உள்ளமை உறுதியளிக்கத்தக்கது.

# பழிபோடும் அரசியல் பயன்தராது

பொய் வாக்குறுதி வழங்குவதும் எதிரணிமீது அவதூறுக் குற்றங்களைச் சுமத்துவதும் பழிபோடுவதும் நேர்மையற்ற அரசியல்வாதிகளின் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஒரு வழிமுறைதான். எனினும் அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிப்பதை விரும்புகிறது. இதற்கு பேச்சுக்களை ஆரம்பித்து பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்ற நேர்மையான நோக்கம்தான் காரணமெனக் கூறிவிடமுடியாது. இவ்வாறான



சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவுக் குத்தான் இதிலே முதலிடம் வழங்கப்படவேண்டும்.

"தேசியநல்லிணக்கச்சபை" என்ற பெயரில் அவர் திறந்து வைத்துள்ள நாடக மேடைக்கு சமுகமளிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவிற்கு எழுதிய கடிதம் மீண்டும் அதனை நிரூபித்துள்ளது.

தேக்கமடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் இயங்கு நிலையை அடையவேண்டுமாயின் சமாதான முயற்சிகளிலே நகர்வு ஏற்படவேண்டுமாயின், விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்பதே இன்றைய யதார்த்தமாக உள்ளது.

இதனையே ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்திவருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் இடைக்காலத் தன்னாட்சித்திட்ட வரைவின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்படுமாயின் ஐ.தே.க.வின் சமாதான முயற்சிகள் சரியான தடத்தில்தான் சென்றுகொண்டிருந்தன என்பதை சந்திரிகா பண்டாரநாயக்க ஏற்றுக் கொண்டதாகிவிடும். அதேவேளை ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் இரண்டாவது கட்சியான ஜே.வி.பி. கூட்டை உடைத்துக்கொண்டு வெளியேறிவிடும். இவ்வாறான ஒரு நிலை ஏற்படவேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் எண்ணமாகும்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி சமாதான முயற்சிகளை மிக மெதுவான நகர்வுகளுடன் முன்னெடுத்துக்கொண்டிருந்தது என்பதும் உண்மையே. அதற்கான காரணம் எதுவாக இருப்பினும் அது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க சம்மதம் தெரிவித்திருந்த நிலையிலேயே ஆட்சி கலைக்கப்பட்டது. இதன்மூலம் சமாதானத்துக்காகப் பாடுபட்ட ஓர் ஆட்சி அதற்காகவே கலைக்கப்பட்டது என்ற தோற்றப்பாடு உள்ளது. இதனைத் தக்கவைத்துக்கொள்ளவும் அது பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்திவருகின்றது.

ஆனால் இடைக்காலத்தன்னாட்சி அதிகார யோசனையின் அடிப்படையில் மாத்திரமல்ல சமாதான முயற்சிகளை எந்த வகையிலும் நகர்த்தமுடியாத நிலையிலுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஒரு தரப்பான புலிகளை விட்டுவிட்டு, தனித்து ஒரு போலி நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறார்.

இதற்கு அவர் எதிர்க்கட்சியின் ஆதரவைக்கோரி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதிய கடிதத்தில், புலிகளால் நிராகரிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனைகளின் அடிப்படையில் எவ்வாறு பேசுவது எனக் கேட்டுள்ளார்.

முன்னர் குறிப்பிட்டதுபோல சனாதிபதி சந்திரிகா அரசு இடைக்காலத்தன்னாட்சி திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என ஐ.தே.க. வலியுறுத்துகின்றபோதிலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு கூறியிருப்பது அவரது போலியான செயற்பாட்டை வெளிப்படுத்துகிறது. அதேபோலவே கடந்தமாத பிற்பகுதியில் வெளிநாடுகளுக்குச் சென்ற சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளுக்கு புலிகளே தடையாக இருப்பது போன்ற தோற்றப்பாட்டை உருவாக்கமுயன்றார்.

ஐக்கிய தேசியக்கட்சி மேற்கொண்ட சமாதான முயற்சிகளைத் தொடரமட்டுமல்ல பிரச்சினையின் பிரதான தரப்பான விடுதலைப் புலிகளுடன் பேசுவதையே விரும்பாத ஜே.வி.பியின் பிடிக்குள் சனாதிபதி சந்திரிகா சிக்கிக் கொண்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கலைச் சிறிதும் விரும்பாத ஜே.வி.பி அதற்குத் தீர்வாக யுத்தத்தையே வைத்திருக்கிறது. இந்நிலையில் சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள தம்பக்க இடையூறை மறைத்து பிரச்சினையை இழுத்தடிக்க பழைய உத்தியாகிய "ஆலோசனைச்சபை" அமைத்துள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஏனையோர் மீது போலிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்திவருகின்றார்.

அதேவேளை அவரால் அமைக்கப்பட்ட ஆலோசனைச்சபையை பெரும்பாலான எதிர்க்கட்சிகள் நிராகரித்துள்ளன. இந்தச் சபையானது சமாதான நடவடிக்கைகளைப் பின்நோக்கி நகர்த்தும் முயற்சி என்பதில் ஐயமில்லை. ஆனால் இதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் "புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்துவர தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்" என அவர்கூறியது கேலிக்குரிய ஒன்றாகும். அத்துடன் அவரது மற்றுமொரு ஏமாற்றுப் பேச்சுமாகும்.

சமாதானப்பேச்சுவார்த்தைகள் நகர்ந்து உண்மையிலேயே நிரந்தரமான அமைதிநிலை தோன்றவேண்டுமாயின் ஜே.வி.பியை வழிக்குக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்வதே யதார்த்தமானதாகும். அதனைவிடுத்த தேசிய ஆலோசனைச் சபை எனக்கூறி ஏமாற்றுவதும் மாற்றுத்தரப்பு மீது பழிபோட்டு நடத்தும் அரசியலும் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதாகவே அமையும்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

வாராந்தம் எரிபொருட்களின் விலை உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அனைத்துப் பொருட்களின் விலைவாசிகளும் ஏறத் தொடங்கிவிட்டன. இரண்டு வாரங்களுக்கு முன்பாக அதிகரிக்கப்பட்ட தனியார் பேருந்துகளின் கட்டணமும் மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளது.

# மக்களின் பட்டினியும் சாவுமே இன்றைய அரசியலாகிவிட்டது!

பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்க தாம் காரணம் இல்லை எனவும் சிறிலங்கா அரசாங்கமே காரணம் எனவும் அந்த அமைப்பின் தலைவர் கூறியுள்ளார். தமக்கு எரிபொருள் விலை ஏற்றத்தால் ஏற்படும் மேலதிக செலவீனத்தை ஈடு செய்ய மானியம் தரவேண்டும் என்றும், அவ்வாறு இல்லாவிட்டால் கட்டணங்களை அதிகரிக்க அனுமதிக்க வேண்டும். என்றும் தாம் கோரியதாகவும் தெரிவித்துள்ளார் கெமுனு விஜேயரத்ன.

போக்குவரத்து அமைச்சரோ முதலாவது கோரிக்கையை கருத்தில் எடுக்காமல் கட்டண உயர்வுக்கு ஒப்புதல் வழங்கி விட்டார். விளைவாக கடந்த திங்கள் முதல் தனியார் பேருந்துகளின் போக்குவரத்துக் கட்டணம் அதிகரித்துவிட்டது. ஆனால், இது போதாதென்றும் இன்னும் கட்டணங்களை அதிகரிக்கவேண்டிய தேவை உண்டென்றும் கெமுனு விஜேயரத்ன கூறியுள்ளார்.

இறுதியாக அமுலுக்கு வந்துள்ள கட்டண அதிகரிப்புக்கு முன்னர், மிகக் குறைந்த வழிச்செலவாக 3.50 சதம் சில நாட்கள் அமுலில் இருந்தது. அது இப்போது 4.00 ரூபாவாகிவிட்டது. ஆனால், 4.00 ரூபாவாக உயர்த்தப்பட்ட முன்னரே அதிகமான பேருந்துகளில் நான்கு ரூபாவே அறவிடப்பட்டமை வடக்கு-கிழக்கு எங்கும் நடந்துள்ளது.

சில்லறை நாணயங்கள் இல்லை என்ற காரணத்தைச் சாட்டாகக் கொண்டு மீதிப்பணம் 50 சதம் வழங்கப்படாமல் இந்தச் சுரண்டல் நடந்தது. சில நாட்களாக இடம்பெற்ற இச்சுரண்டல் கடந்த முதலாம் திகதியுடன் அமுலான கட்டண அதிகரிப்புடன் அங்கீகரிக்கப்பட்டதாகிவிட்டது.

கட்டணம் அதிகரிக்கப்படாவிட்டால் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு நஷ்டமே ஏற்படும் எனக் குறிப்பிடப்பட்டாலும், அதனால் அதிகம் பாதிக்கப்படுவது சாதாரண மக்களாகவே உள்ளனர். ஏற்கனவே தனியார் பேருந்துகளை நம்பியிருப்பே ர் அல்லது போக்குவரத்துக்கு பய ன்படுத்துவோர் ஒன்றும் சௌகரியமாகப் போய் வரவில்லை.



சலிப்பும், உடல், உளவதைகளுக்கும் உட்பட்டுத்தான் பயணிக்கின்றார்கள். தனியார் பேருந்துகளில் அவ்வப்போது அமரக் கிடைக்கும் இருக்கைகள் கூட அதிகமாக இருக்கைகளாக இருப்பதில்லை. ஏற்கனவே, கட்டணம் அதிகரிக்கப்பட்டபோது பேருந்துகளின் வசதி அதிகரிக்கப்படவேண்டும் என்பது ஒரு நிபந்தனையாக விதிக்கப்பட்டிருந்தது. அது அநேக பேருந்து உரிமையாளர்களால் உதாசீனப்படுத்தப்பட்டு இருப்பதோடு நடத்துநர்கள் பயணிகளின் மேய்ப்பர்களாகவே நடந்துகொள்வது முடிந்தபாடாக இல்லை.

சில பேருந்துகளில் பயணிகள் நின்று கூட பயணிக்க முடியாத அளவுக்கு கூரையின் உயரம் மட்டாக உள்ளது. அத்தகையான இருக்கைகளுக்கு அளவாக மட்டும் பயணிகளை ஏற்றுவது என்ற உடன்பாட்டுடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் நிகழாமல் எல்லா ஊர்திகளும் உச்ச இலாபத்தை பெறும் நோக்குடனே ஓடின; கட்டண அதிகரிப்பின் பின்பும் ஓடுகின்றன.

கடினமான இந்த போக்குவரத்தில் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருப்பது ஏற்படுத்தப்போகும் விளைவுதான் என்ன?

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் சேவையில் ஈடுபடும் பகுதிகளில் மக்கள் அவற்றையே கூடுதலாக நாடத்தலைப்படுவதே சாத்தியமாயிருந்தது. ஆனால் தனியார் பேருந்துகளைத் தொடர்ந்து போக்குவரத்துச் சபையும் கட்டண அதிகரிப்பை கடந்த திங்கள் முதல் மேற்கொண்டுவிட்டது.



இது மிகக்குறுகிய பேருந்துப் பயணங்களை மக்கள் புறக்கணித்து நடையில் போய்வரும் நிலைமையையே சாதாரண மக்களுக்கு ஏற்படுத்தும். இலங்கைத் தீவினுள் மட்டும் உழைப்போராக இருக்கும் பெரும்பாலான மக்களுக்கு இக்கட்டண உயர்வு என்பது ஈடுகொடுக்கக் கூடியதாயில்லை.

பேருந்து கட்டணத்துக்கு இவ்வாறு மாற்றுவழியைத் தேட முடியுமெனில் வரையறை அற்று உயரும் அத்தியாவசியப் பொருட்களின் செலவை எவ்வாறு தாங்கிக் கொள்வது? அதிலும் யுத்தத்தின் ஈவிரக்கமற்ற தாக்குதலுக்கு முகம் கொடுத்து இப்போதுதான் மெல்ல இயல்பு நிலையை நோக்கித் திரும்பும் சராசரி மனிதர்கள் எப்படி எதிர்கொள்வது?

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் அள்ளித் தெளிக்கும் பணத்தில்தான் ஏதோ புனர்நிர்மாணப் பணிகள் நடக்கின்றன. அதனால் நாள் கூலியாளர்களுக்கான கூலியும் அதிகரித்துள்ளது. ஆனால் அதிகரித்த கூலியை வேதனமாகப் பெறுபவர்களே ஈடாடும் அளவுக்கு உச்சம் பெறும் விலைவாசிகள் வேலைவாய்ப்புக் காலப்பட்டினியையே உருவாக்கப் போகின்றன.

இது ஒரு நீண்ட யுத்தத்தின் விளைவே ஆகும். சர்வதேச சந்தையில் உயர்ந்த எரிபொருள் விலையே இவை யாவற்றுக்கும் காரணம் என சிறிலங்கா அரசு காரணம் கூறித் தப்பிக்கொள்ள முனைகின்றது. ஆயினும் உள்நாட்டில் அதன் உயர்வைக் கட்டுப்படுத்த பல நாடுகளும் வழங்கும் மானியங்களை போதியளவில் அளிக்காது உள்ளது இன்றைய அரசு.

தானே தோற்றுவித்து நடத்திய யுத்தத்துக்காக செலவிட்ட நிதியும் அதற்காகப் பெற்ற கடனுமே இந்த நிலைக்குள் தள்ளியுள்ளன. போதாததற்கு இப்போதும் யுத்தத் தயாரிப்பில் ஒப்பந்தங்களும் கொள்வனவுகளும் நிதி ஒதுக்கீடுகளும் கூட இடம்பெறுகின்றன.

ஆக, கட்சி அரசியலின் நலன் கருதிய யுத்தம் இலங்கைத் தீவு முழுவதும் சாதாரண மக்களை சமாதான காலத்திலும் பட்டினியை நோக்கித் தள்ளுகின்றது. மக்களின் பட்டினியும் சாவுமே அரசியலாகி இன்னுமொரு கட்சியை இனியும் வாழச் செய்யப்போன்கிறது.

**ஞாபகன்**

காரைநகர் சிறிலங்கா கடற்படை லெராதள முன்பகுதி மீதான தாக்குதலில் 60வரையான சிறிலங்காப்படையினர் கொல்லப்பட்டனர். 100க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். 1991 காலகட்டத்தில் சிறிலங்காவின் முப்படைகளையும் எதிர் கொண்டு படைத்தரப்புக்கு இந்தளவு பாரிய இழப்பு ஏற்படுத்தப் பட்டது முக்கியமானது. ஆனால் அதன் முழுப்பரிமாணம் அப்போது ஊடகங்களில் வெளிவரவில்லை.

இந்தத் தாக்குதல் முடிந்த உடன் - சிறிலங்கா கடற் படை யாழ் தீவகப்பகுதியில் ஒரு படையெடுப்புக்கு திட்டமிட்டது. இதற்கு **Operation High tide** (உயர் ஏற்றம்) என குறியீட்டுப் பெயரும் வைக்கப்பட்டது. கடலின் பெருக்குக்காலத்தை **Hightide** என்பார்கள். இது அடிப்படையில் காரைநகர் தளத்தின் அரண்களை விரிவுபடுத்துவதாகும். (ஆனையிறவுபோல்)

இதற்கு சிறிலங்காப்படையின் துட்டகைமுனுவான அப்போதைய வடதளபதி மேஜர்ஜெனரல் டென்சில்கொப்பேகடுவ

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

## 17



மேல்நிலை ஒருங்கிணைப்புத்தளபதியாகவும் -பிரிகேடியர் விஜயவிமலரட்ண நடவடிக்கைசெயற்பாட்டு தளபதியாகவும் நியமிக்கப்பட்டனர். இதன் பின்புலமாக சிறிலங்காக்கடற் படையும் செயற்பட ஏற்பாடுகள்செய்யப்பட்டன.

1991 ஏப்ரல் 25 சிறிலங்காக்கடற்படையின் பப்பதா தரை யிறக்கக்கப்பல் (கடற்கரும்புலிகளால் பின்னர் அழிக்கப்பட்டது) காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து நடவடிக்கை இராணுவத்தினரை ஏற்றியவாறு - பீரங்கிப்படகுகளான **SLNS** வீரயா, **SLNS** ரக்சயா ஆகியவற்றின் துணையுடன் **PHH** கடல் பாதைவழியாக காரைநகருக்கு கொண்டுசென்றது. நீலங்காட்டுக்கு வடக்கே - எலரா தளமருகாக இப்படைகள் இரவிரவாக தரையிறக்கப்பட்டன.

ஏப்ரல் 25 அதிகாலை காரைநகர்த் தளத்திலிருந்து சிங்களப்படைகள் காரைநகர்த்தீவை ஆக்கிரமிக்கும் **Hightile** நடவடிக்கையை ஆரம்பித்தன. அதேவேளை ஊர்காவற்றுறை புனித அன்ரனீஸ் கல்லூரி முகாமிலிருந்து புளியங்கூடல் சந்திநோக்கிய ஆக்கிரமிப்பு நகர்வும் சிங்களப்படைகளால் மேற்கொள்ளப்பட்டது. முப்படைகளின் பின்னணியில் சிங்களப்படைகள் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை தொடர்ந்து நடத்தின. இருபக்கப்படைநகர்வுகள்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். அதேவேளை ஒரு போர்ப்பொறியான காரைநகரைவிட்டு தந்திரோபாய ரீதியாக விடுதலைப்புலிகள் நிலைகளை பின்நகர்த்தினர் - சிங்களப்படைகள் கணிசமான இழப்புடன் 26ஆம் திகதி காரைநகரை ஆக்கிரமித்தன. காரைநகர்மக்கள் தம் இடங்களைவிட்டு வெளியேறினர்.

ஊர்காவற்றுறை சிங்களப்படைகள் புளியங்கூடல் சின்னமடு கிராமம்வரை தெற்கே குறுக்குக் கடல்வரை மட் டுமே நகரமுடிந்தது. இதன்போது நாரந்தனையில் படையினரின் தாக்குதலில் மக்கள் நால்வர் கொல்லப்பட்டனர். 4 பேரும் 12வயது சிறுமி அடங்கிய ஒரு குடும்பம்.

சிங்களப்படைகளின் சின்னமடுநகர்வுக்கு எதிராக விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 4 போராளிகள் வீரச்சாவைத்தழுவினர்.

ஊர்காவற்றுறையிலிருந்தான சிங்களப்படைகளின் **High Tide** ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் தீவகத்தின் எஞ்சிய மக்களும் - யாழ்ப்பாணத்துக்கு வெளியேறத்தொடங்கினர். தீவகமக்களுக்கு அது இரண்டாம் இடப்பெயர்வு இம்முறை பண்ணைவீதிவழியாக இந்த இடப்பெயர்வு நிகழ்ந்தது. மறுபுறம் காரைநகர் மக்கள் பொன்னாலை வழியாகவெளியேறினர்.

சிங்களத்தின் **Hightide** ஆக்கிரமிப்பு நடவடிக்கையில்

மேஜர்ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ (பின்னர்கொல் லப்பட்டார்) பிரிகேடியர் விஜயவிமலரட்ண (கொப்பேகடுவவுடன் கொல்லப்பட்டார்)

10ஆம் பிரிகேட்தளபதி - பிரிகேடியர் **T.G** திலகரட்ண 4ஆம் சிங்க றெஜிமன்ட் தளபதி - மேஜர் சுசந்த மென்டிஸ் (பின்னர் கொல்லப்பட்டார்) 5ஆம் கெமுனுறெஜிமன்ட் - மேஜர் ஜம்பதி விஜேரட்ண 4ஆம் கஜபாறெஜிமன்ட் - மேஜர் **C.R.M.** சில்வா வடகடற்படைத்தளபதி - கப்டன் **A.N.M** ரசீக் வட விமானப்படைத்தளபதி - லிங்கொமாண்டர் சுனில் கஸ்ரஸ் ஆகியோரின் பங்களிப்பு இருந்தது.

தமிழரின் நில ஆக்கிரமிப்பில் - அழிப்பில்.

**தருவன்**




# நெடுந்தீவில் ஈழத்தின் தொல்மாந்தர்

யாழ்ப்பாணத்தின் நெடுந்தொலைவில் உள்ள- தரைவழிப்பாதை தொடர்பற்ற தீவு நெடுந்தீவு. யாழ்ப்பாணத் தில் ஆழ்கடலில் இருக்கும் ஒரேதீவு நெடுந்தீவு.

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப குடியேற்ற தொல் மையங்களில் ஒன்றாக நெடுந்தீவின் மேற்குக்கரை உள்ளது. நெடுந்தீவில் நன்னீரை -(குடிநீரை) கொண்ட ஒரே பகுதியாக அதன் மேற் குக்கரை உள்ளது. இதன் காரணத்தால் அத்தீவில் அங்கு மட்டுமே விவசாயம் செய்யப் படுகின்றது. அங்குசெய்யப் படும் விவசாயம் - இன்றுவரை நெல்கிடையாது. சாமி, வரகு உட்பட தானிய வகைகளே அங்கு பாரம்பரியமாக பயிர் செய்யப்படுகின்றன. கடற்பகுதி திரவியமாக மீன்களும்- இந்த தானியங்களும்- பனையுமே நெடுந்தீவின் அடிப்படை உணவு ஆதாரம். 1950களின் வரை நெடுந்தீவு அடிப்படை போக்குவரவு படகு வசதிகளை கொண்டிருக்கவில்லை. கட்டு மரங்களே போக்குவரவில் பயன்பட்டன. அவை கூட வாடை - சோளகம் ஆகிய காற்றுக்களை பயன்



படுத்தியே மேற்கொள்ளப்பட் டன. ஒரு காற்றில் தீவி லிருந்து புறப்பட்டு - ஒரு காற்றில் திரும்புவதாகவே இவர்களின் பயணம் இருந்தது.

ஆகவே வெளிப்புற வரவுகளில் தங்கியிராமல் தானியம்-கடலுணவு- பனை ஆகியவற்றுடன் அவர்கள் தன்னிறைவை பெற்று வாழ்ந் தனர் என்பது உறுதியாகிறது.

நெடுந்தீவு- பசுந்தீவு எனப்படுகின்றது. பசுக்கள் நிறைந்ததால் இப்பெயர் வந்தது. அங்கிருந்து தமிழகம் இராமேஸ்வரத்துக்கு பால் கொண்டு செல்லப்பட்டதாக ஐதீகங்கள் பல நெடுந்தீவுக்கு உள்ளன. ஆனால் இங்கு நெடுந்தீவின் தொல்மையம் பற்றியே இங்கு கூறுவோம்.

நெடுந்தீவு கோட்டைக் காடு என்ற மேற்குப்புறத்தில் இப்பொழுது இரு வட்ட கட்டு மானங்களை காணலாம்.



ஒன்று பெரியதொரு வட்ட கட்டுமானம், மற்றையது சிறிய வட்டகட்டுமானம் (படம் பார்க்க) இதனை வெடியரசன் கோட்டை என மக்கள் கூறினர். நெடுந்தீவை வெடியர சன் என்பவன் ஆண்டதாகவும் அவனது கோட்டையாக இவை இருந்தன என்பதும் ஐதீகமாக உள்ள கதை.

வெடியரசனின் கதை சிலப்பதிகாரத்தின் கண்ணகி பொற்சிலம்புக்கு அவளின் தந்தை வரங்களை பெறுவ தான விடையத்துடன் தொடர்பு படுத்தப்படுகின்றது. வரங்களை பறிப்பதற்கான போரில் வெடியரசன் கொல்லப் பட்டதாக ஐதீகக் கதை கூறுகின்றது.

"வெடியரசன் கோட்டை" எனப்படும் இந்த தொல்லியல் மைய வட்டக் கட்டுமானங்கள் (இப்போது காணப்படுபவை) இலங்கை தொல்லியல் திணைக்களத் தினால் கட்டப்பட்டவையாகும் (கந்தரோடை போல) இந்தப் பகுதி முழுமையும் பவளப் பாறைகளால் (முருகைகள்) நிறைந்து காணப்படுகிறது. இந்த தொல்மையத்தின் சான்றுகள் பவளப்பாறைகளால் ஆனவையாக காணப்படுகின் றன. தூண்களை நடும் குழி கற்கள்கூட பவளப்பாறை களாகவே உள்ளன. இங்கு இலங்கை தொல்லியல் திணைக களம் ஆய்வு எதனையும் மேற்கொள்ளாது, இதனை ஒரு பௌத்த மையமாகக்காட்ட விகாரையின் அடித்தளம் போல வட்டக்கட்டுமானங்களை கட்டி விட்டது.

ஆனால் இப்பகுதியில் பெரும் அளவில் சிவப்பு- கறுப்பு (பெரும் கற்காலம் (2000-3000 ஆண்டுகள்வரை) மட்பாண்டங்கள் சிதறி- சிதைந்து காணப்படுகின்றன. குழிகற்கள் தொன்மையானவை. நெடுந்தீவில் மேலாய்வு செய்த (1980களில்) கலாநிதி பொ.ரகுபதி இப்பகுதியில் காணப்படும் மட்பாண்ட துண்டுகள் இப்பகுதி கிறிஸ்துவிற்கு முன் பல நூற்றாண்டுகளின் முன்பதா கவே மக்கள் வாழ்ந்ததை உறுதி செய்வதாகக் குறிப்பிடு கிறார். இது தமிழரின் வரலாற்றில் பெரும் கற்கால மாகும். அக்காலத்திற்குரிய சிவப்பு- கறுப்பு மட்பாண்ட துண்டுகளை இன்றும் அங்கு காணலாம். ஓரங்குல தடிப் புடைய ஈமத்தாழிக்குரிய- அல் லது கிணறுகளுக்கான மண்வள யங்களுக்குரிய மட்பாண்ட துண்டுகளையும் இங்கு காண லாம்.

முறையான அறிவியல் பூர்வமான தொல்லியல் அகழாய்வு நெடுந்தீவின் மேற்குப்பகுதியில் மேற் கொள்ளப்படுகையில் அங்கு புதைந்துகிடக்கும் எமது முது மக்களின் வாழ்வு வெளிச்சத்திற்குவரும்.

இலங்கை - இந்திய பிராந்தியத்தில் தொலை தூர தனித்த தீவு ஒன்றில் இருக்கும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரேயொரு தொல்லி யல் மையம் நெடுந்தீவு- வெடியரசன் கோட்டை ஆகும்.

**குரலோன்**




## அழுத்த மாறுபாட்டை மாற்றிப்பயன்படுத்தும் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள புளுட்டோனியம்

விண்வெளிக்கலங்களில் புளுட்டோனியம் விண்வெளிக் கலங்கள் இயங்குவதற்கான ஆற்றலை அளிக்கின்றது. புளுட்டோனியம் விண்வெளிக் கலங்கள், விண்வெளியில் ஏற்படும் ஆழுத்த மாறுபாடுகளை ஆற்றலாக பயன்படுத்தும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

பூமியையும் சந்திரனையும் சுற்றிவரும் விண்வெளிக்கலங்கள் விண்வெளி அறிவியலில் மிகவும் முக்கியமானவையாகத் திகழ்கின்றன. பூமியைச் சுற்றி வரும் இவற்றில் மனிதன், நாய் முதலியவை ஆய்வுக்காக அனுப்பியுள்ளனர். விண்வெளிக்கலங்களில் புளுட்டோனியம் எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இது யுரேனியத்தாதுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்படுகின்றது. யுரேனியத்தாது பொதுவாக யுரேனியம் ஒக்சைடாக கிடைக்கின்றது. ஏனைய தாதுக்களைப்போல இது அதிகளவில் கிடைப்பதில்லை. மிகவும் குறைந்த அளவில் கிடைக்கும் யுரேனியம் தாதுவில் மிகமிகக் குறைந்த அளவே புளுட்டோனியம் கிடைக்கின்றது. இயற்கை யுரேனியத்தை பிளக்கும் போது 'புளுட்டோனியம் - 239' கிடைக்கின்றது. எளிதில் பிளவுபடும் தன்மையை இது பெற்றுள்ளது. அணுக்கரு எரிபொருளாகவும், அணுக்கரு வெடிபொருளாகவும் உள்ள புளுட்டோனியம் விண்வெளிக்கலங்களுக்கு முக்கிய எரிபொருளாக உள்ளது. விலைமிகவும் அதிகமான இந்த எரிபொருளால் விண்வெளித் துறைக்கு ஒதுக்கப்படும் செலவு கூடுகின்றது. இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த புளுட்டோனியம் இரு உலோகத்தகடுகளுக்கு இடையே வெப்பத்தை ஏற்படுத்தும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதில் 7சதவீதம் மட்டுமே ஆற்றல் ஏற்படுத்தப்படுகின்றது.

புதிய தொழில்நுட்பம் புளுட்டோனியம் எரிபொருளோடு, விண்வெளியில் ஏற்படுகின்ற அழுத்த மாறுபாட்டை ஆற்றலாக மாற்றிப்பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை உள்ளடக்கி உள்ளது. இதன்மூலம் 25 முதல் 30 சதவீத ஆற்றல் உருவாகின்றது. மேலும், இதற்கான செலவும் குறைகின்றது. குறைந்த செலவு, முழுமையான பயன் எனும் மந்திரம் விண்வெளித்துறையில் இனி முழுமையான அளவில் பயன்படுத்தப்படும்.

## தரையில் புதைந்த ஜெனஸிஸ் விண்கலம்

வானில் வைத்துப்பிடிக்க முயன்று அது தோல்வியுற்று தரையில் மோதிய அமெரிக்க நாஸாவின் ஜெனஸிஸ் விண்கலம் அதன் இலக்கைப் பூர்த்தி செய்துள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். 2001இல் நாஸாவினால் செலுத்தப்பட்டு சூரியமின் காந்தப் புயல் துகள்களை

ஜெனஸிஸ் விண்ணில் வலம்வரும் படம்.



சேகரித்து பூமிக்குக் கொண்டு வரும் பணி ஜெனஸிஸ் உடையது. அதுவெற்றிகரமாக சூரிய மின் காந்தத் துகள்களை விண்ணில் வலம் வந்தவாறு சேகரித்தது. சேகரித்த அது பூமிக்குத் திரும்பியது. செப்டெம்பர் 22இல் அது தரைக்கு திரும்பியபோது வானில் வைத்து

பிடிக்கும் முயற்சி தவற தரையில் மோதிப் புதைந்த ஜெனஸிஸ்

உலங்கு வானூர்தியில் பறந்து கொக்கி ஒன்றினால் அதனை பிடிக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டது. ஆனால் விண்கல வேகம் குறைக்கும் வான்குடைகள் விரிய மறுக்க விண்கலம் 350 கிலோ மீற்றர் வேகத்தில் தரையில் மோதிப்புதைந்து. சிதைந்தது. அதனுடன் அமெரிக்காவின்



ஜெனஸிஸை வானில் வைத்து பிடிக்கும்திட்டம்.

திட்டம் தோல்வியடைந்ததாக முடிவுக்கு வரப்பட்டது. ஆனால் மோதிப்புதைந்த ஜெனஸிஸ் விண்கலம் எடுத்துச் செல்லப்பட்டு



பிரிக்கப்பட்டது. அது சேகரித்த சூரியத்துகள்கள் ஒரு பகுதி இருப்பதாக நாஸா தகவல் வெளியிட்டுள்ளது. அதனை சிதைவுகளிலிருந்து பிரித்து எடுப்பதே வேலை.

த.அருவி




## இரத்த அழுத்தம் உள்ளவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

மிகுதியான இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு அடிக்கடி மயக்கம் மற்றும் தலைவலி உண்டாகும். மருத்துவரிடம் சென்று. இரத்த அழுத்தத்தை பரிசோதித்தும் தெரிந்துகொள்ளலாம். நீரிழிவு நோயாளிகளை இருதய நோய் தாக்கினால் நெஞ்சுவலிக்கான அறிகுறி ஏற்படாது என்கிறார்களே?

50 சதவீத நீரிழிவு நோயாளிகள் இருதய நோயால் பாதிக்கப்பட்டால் கூட நெஞ்சுவலி ஏற்படாது. அதனால் நீரிழிவு நோயாளிகள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். அடிக்கடி உடம்பை பரிசோதிப்பது அவசியம்.

**இருதய நோயைத் தடுப்பதற்கான உடற்பயிற்சிகள்.**

வேகமாக நடப்பது.
சைக்கிள் ஓட்டுவது
நீச்சலடிப்பது
இருதய நோய்க்கேற்ற உடல் பயிற்சிகள் செய்வது
கூடின எடை தூக்குதலை தவிர்க்கவேண்டும்.

## உங்கள் கவனத்திற்கு!

உங்களால் அளவுக்கு அதிகமாக சாப்பிட முடியவில்லையா? காரணம் என்ன தெரியுமா? நமது மூளையில் 'ஹைபோதலாமஸ்' என்ற பகுதி உள்ளது. நாம் சாப்பிட ஆரம் பித்த பத்தாவது நிமிடத்திலேயே, "போதும், வயிறு நிரம்பிவிட்டது. எழுந்திரு' என்று கட்டளையிடுவது இது தான்.

* * *

நன்றாக அயர்ந்து தூங்கும் குழந்தையை 'திடுக்'கென தட்டி எழுப்ப வேண்டாம். இவ்வாறு செய்தால் குழந்தைகள் தூங்கும் போது அவர்களது மூளையில் அன்றாடம் நடந்த நிகழ்ச்சிகள் பதிவாவது தடைப்பட்டு விடும். இதனால் அவர்களது ஞாபக சக்தி குறைந்து விட வாய்ப்புண்டு.

* * *

குண்டுக் குழந்தையா உங்கள் செல்லம்? அவர்களது மூளையின் செயல்த்திறன், நினைவாற்றல் ஆகியவை குறைய வாய்ப்புண்டு. எனவே குழந்தையின் எடையை குறையுங்கள் முதலில்.

## முகப்பருவை அகற்ற சில வழிகள்...

எண்ணெய் சுரப்பி நாளங்களில், பிசுபிசுப்பு மிகுந்த எண்ணெய்ப்பசை, தோல்ப் பகுதியில் உள்ள சேதமடைந்த திசுக்கள், கிருமிகள் போன்றவற்றால் அடைப்பு ஏற்படலாம். அதைக் கொமிடோ (Comedo) என்று சொல்வார்கள். இப்படி ஏற்பட்ட அடைப்புக் காரணமாக தோல்ப் பகுதியில் ஒரு சிறிய வீக்கம் ஏற்படும். அந்த சிறிய வீக்கத்திற்கு WHLTE HEAD என்று பெயர். வீக்கத்தின் தோல்ப் பகுதி மூடி இருக்கும்.

இந்த வீக்கத்தின் தோல்பகுதி சிறிது திறந்து இருந்தால் அது பார்ப்பதற்கு கறுப்பாக இருக்கும். BLACK HEAD என்று பெயர். இந்தக்கறுப்பு நிறம் அழுக்கு என்று நினைப்பார்கள். அப்படி அல்ல. சுரப்பி நாளங்களில் அடைபட்டிருக்கும் பொருட்கள் திறந்த தோல்ப் பகுதி மூலம் வெளிக்காற்று மண்டலத்தில் உள்ள ஒட்சிசன் காற்றினால் கறுமை நிறம் அ... கிறது.

உடைந்த கொமிடோவில் அழற்சி ஏற்பட்டு மேலும் சில கிருமிகளின் தாக்கம் ஏற்பட்டு, சிவந்த கடினமான கட்டியாக மாறுகிறது. இதற்கு PAPULE (பப்யுல்) என்று பெயர்.

இந்த சிவந்த கட்டியில் சலம் உண்டாகி, நடுவில் மஞ்சள் கலந்த பழுப்பு நிறம் ஏற்படுகிறது. இதற்கு PUSTULE (பெஸ்ட்யுல்) என்று பெயர். இந்த சின்ன கட்டிகள், சில சமயம் பெரிதாகவும் ஆழமாகவும், மிகுந்த வலியுடனும் இருக்கும். இதற்கு NODULE (நொட்யூல்) ன்று பெயர். இந்த வகையினால் முகத்தில் தழும்புகள் உண்டாகும்.

நகத்தினால் முகப்பருவைக் கிள்ளி விடக் கூடாது. இதனால் தோலில் மேல் பகுதியில் உள்ள அடைப்பு நீங்கி முகப்பருக்குறைந்தது போன்று தோற்றம் கொடுக்கலாம். ஆனால் அடிப்பகுதியில் உள்ள அடைப்புகளில் கசிவுகள் ஏற்பட்டு கிருமிகள் அடுத்த இடத்திற்கு செல்கின்றன. இதனால் இன்னும் அதிகமாக சிவந்து மறுபடியும் கடினமான கட்டி போன்று முகப்பரு ஏற்படலாம். மேலும் கிள்ளி விட்ட இடத்தில் தழும்பு ஏற்படும். சில சமயம் குழியாக உள்ள தழும்பு எற்படவும் வாய்ப்பு உண்டு.

முகப்பருவைக் கைகளினால் அழுத்திப் பார்க்கவோ அல்லது மெதுவாக சலத்தை எடுத்து விடுவதற்காகவோ எந்த முயற்சியும் செய்யக்கூடாது. முகத்தில் உள்ள நரம்புகள் மூளைப் பகுதிக்கு முக அருகில் உள்ளன. முகப்பருக்களில் உள்ள கிருமிகள் தோலின் அடிப்பகுதியில் சென்று மற்ற இடங்களுக்குப் பரவலாம். இதக் கிருமிகள் மூளைப் பகுதிக்கு சென்றால் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

### கன்னத்தில் கை வைக்கக்கூடாது

ஒரு சிலருக்கு கைகளை முகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் பழக்கம் உண்டு. கவலையாக இருக்கும்போது கன்னத்தில் கைவைத்துக் கொண்டு இருப்பார்கள். ஏதாவது யோசனை செய்யும்போது முகத்தில் தாடைப் பகுதியைத் தடவுவார்கள். இதனால் முகப்பரு இன்னும் கடினமாக ஆகிவிடலாம். நெற்றிப் பகுதியிலும் தாடைப் பகதியிலும் போடப்படும் வார்ப்பட்டைகள் முகப் பருவிற்கு அழுத்தம் கொடுக்கின்றன. அதற்கு குறிப்பிட்ட இடங்களில் மட்டும் பருக்கள் நிரந்தரமாக வருவதற்கு வாய்ப்புண்டு. முடிந்தவரை முகத்தில் எந்தப் பகுதியிலும் அழுத்தம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.



## மண்ணின் மைந்தர்களின் கதை

# தாயகக் கனவுதனில் தளராத மனதிவள்



க. மிரேசு

அக்கா, நேற்றில இருந்து இதுவரை எனக்கு பக்கத்தாலயே ஆமிக்காரன் போய்வருகிறான். நானும் சொல்லிக்கொண்டே இருக்கிறன் கடைசியாய் முடிவைச் சொல்லுங்கோ, என்னை எடுக்கமுடியுமென்றால் எடுங்கோ. அதுவும் எந்தப் போராளிக்கும் ஒரு பிரச்சினையும் வராது என்று உறுதியாய் தெரிந்தால் மாத்திரம் என்னை எடுக்கவாருங்கள் இல்லையென்றால் ஒன்றுமே வேண்டாம்... என்ற ஒரு புனிதமானபோராளி ஒருத்தியின் குரல் தெளிவாக ஒலிக்கிறது... எல்லோரது நடைபேசியிலும்.

சாவின் விழிம்பில் இருந்து கொண்டும் தான் காப்பாற்றப்பட வேண்டியவள் என்ற சிந்தனையை தவிர்த்துத் தன் சகபோராளிகள் உயிரை மாய்த்துக்கொள்ளக்கூடாது என்பதில் எந்தளவு விசுவாசமாக இருந்தாள் அந்தப்போராளி என நினைக்கும்போது மிக மிகக் கவலையாக இருந்ததுஎன்பதைவிட இதயமே நொருங்கிவிடும்போல் இருந்ததாக பல பெண் போராளிகள் சொல்வதுண்டு.

எதிரி சுற்றிலுமாக நின்றிருக்க, உயிர் ஊசலாடிக் கொண்டிருக்க என்னதான் நடக்கப் போகிறது என்று சிந்திக்காதவளாய் தாயகவிடுதலைக்கே தனது உயிர் என நினைத்திருந்தவள், உயிர் போகின்ற வேளையிலும் எதிரியை துவம்சம் செய்வதையே தனது இலக்காகக்கொண்டவள், தாயகவிடிவிற்காய் போராட வந்தவள். தாயக விடுதலைக்கே தனது உடலும் உயிரும் என உவந்தளிக்க தீர்மானித்துவிட்டாள்.

கப்டன் ராஜினி. (நாகேந்திரம்.சுதர்சினி) மாலதி படையணியில் குறுகியகாலத்தில் திறமைகளால் முன்னேற்றப்பாதைக்கு வந்தவள். உடல், உயிர், ஆன்மாவை அர்ப்பணித்துத்தானே போராட ஒவ்வொரு போராளியும் களம்விரைகின்றனர். அதுபோலவே ராஜினியும் தனது உணர்வுகளால் களத்தில் காவியம் எழுதப்புறப்பட்டாள். தனது உயிராலும், உதிரத்தாலும், உயரிய இலட்சியப்பற்றுக்கொண்ட ஆன்மாவினாலும் சாதிக்கவேண்டும் என்று பல களங்களை சந்தித்து தன்நிலையில் வெற்றியும் பெற்றாள். ஆனால், அதிகம் சாதித்த களத்திலேயே களப் பலியாகுவாள் என்பது அவளுக்கு மட்டுமல்ல யாருக்குமே தெரிந்திருக்க நியாயம் இல்லைத்தான்.

அவளது வீரச்சாவு வீரமான வரலாற்றுடனேயே நடக்கவேண்டும் என்றிருந்தாள். அதையாரால் தடுக்க முடியும்.

1997ஆம் ஆண்டிலேயே போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்டவள் வன்னி வரலாற்றில் எத்தினையோ வீரவரலாறுகள் இருக்கின்றன. குறுகிய காலத்திலேயே தனது போராட்ட வாழ்வில் பெரும்பாலான நிகழ்வுகளை செய்துகாட்டியவள்.

தான் படிக்கின்றபோதிலும் கூட பாடசாலையில் படிப்பு, விளையாட்டு, நடனம், பாடல் இப்படி எத்தினையோ விதத்தில் திறமையானவளாகவே காணப்பட்டாள். பாடசாலை வாழ்விலும், அவளின் பொதுவான வாழ்விலும், அவளது அடிமனத்தில் ஆழமான விடுதலை உணர்வே காணப்பட்டது. எப்படியும் விடுதலை சம்பந்தமான நிகழ்வுகளில் அவளைக்காணலாம், போராளிகள் என்று தெரிந்துவிட்டாள், அவர்களுடனேயே திரிந்து இயக்கம் சம்பந்தமாக ஆராய்வதே அவளின் வேலையாகும்.

பொதுவாழ்வில் வீர வேங்கை கப்டன் ராஜினிக்கு தனிப்பட்ட ஒரு பிடிப்பு இருந்தது. அதற்குக் காரணம் அவள் ஒரு ஆண்மகனை தன்மனக்காதலனாக நினைத்தும், விரும்பியும் இருந்தாள். எனவேதான் பல பெண் போராளிகள் இயக்கத்தில் இணையச்சொல்லிகேட்டிருந்தும் இவள் மாட்டன் என்றே சொல்லிவிட்டாள்.

ஆனால் நாட்டின் நிலைமை மோசமாகத்தொடங்கியதும், நாடு சீரழியத்தொடங்கியதும் போரின் கொடுமைகளால் பொதுமக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதனாலும், புதிய பிரச்சினை ஒன்றிற்குப் புதியதாக முகம்கொடுத்தாள்.

காதலனுடன் வாழ்வா, அல்லது மனித தர்மத்தின் மனச்சாட்சி இல்லாது போய்விட்ட சீரழியும் தமிழ் மக்களின் போராட்டமா? என முடிவெடுக்க அவளுக்கு நீண்டநேரம் எடுக்கவில்லை. உடனே போராட்டத்திற்குப் போகவேண்டும் என்றே முடிவெடுத்துவிட்டாள், போராடி நாட்டை மீட்டு உயிரோடு இருந்தால் வாழ்வைப்பற்றி சிந்திக்கலாம். இல்லையேல் தாய் நில மக்களின் விடுதலைக்காய் உயிர் விட்டு மாவீரராகலாம் என்ற முடிவுடனேயே போராட்டத்தில் இணைந்தாள்.

ஆரம்பப்பயிற்சியை முடித்து வெளியேறியவளுக்கு, முன்அவதானிப்பு வேலையும் எறிகணை சீர்சொல்வேலையும் கொடுக்கப்பட்டது. அந்தவேலையிலே ராஜினி எல்லோரையும்விட வேகமாகவும், நிதானமாகவும் வேலைகளை செய்தாள், ஒரு வருடமாக சிங்கள எதிரி மேற்கொண்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையில் தனது பணிகளை மிகவும் நேர்த்தியாக இருந்தே செய்தாள்.

கப்டன் ராஜினி முன் அவதானிப்பாளராக இருந்தபோதும் சிராட்டிக்குளத்திலும், அம்பகாமத்திலும், 82.மி.மீ மோட்டார் அணியிலும் சிறப்பாக செயற்பட்டாள். ஏற்கனவே எறிகணை வீழ்ச்சிகளுக் குள்ளேயே வாழ்ந்தவள், இப்போது 82.மி.மீ ஏவுகருவிக்கு பொறுப்பாக வந்துவிட்டதும் அவள் வேலைகள் வேகம் பெற்றன. அவளது வேகம் பல எதிரிக்குப் பெரும் அழிவாக இருந்தது.

மழையும், குளிருடனும் அடர்ந்த அம்பகாமக்காடுகளில் சிங்கள எதிரியின் வோட்டர் செட் பட்டை நடவடிக்கை தொடர்ந்துவிட்டது. காடுகளுக்குள்ளேயே ஊடுருவி நகர்ந்த எதிரியானவன் திடீரென எமது காவலரண்களை உடைத்து உள் நுழைந்துவிட்டான். எதிரியின் நடவடிக்கையினால் கப்டன் ராஜினியும் மற்றுமொரு போராளியும் காடுகளுக்குள் இடம்மாறி தனிமைப் படுத்தப்பட்டனர். அடர்ந்தகாடு எதுவுமே செய்யமுடியாது. எங்கு போவதென்று தோன்றாதவர்கள் அப்படியே இருந்துவிட்டனர்.

1999ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 14ஆம் திகதி காலை எதிரியின் தாக்குதல் தொடங்கிய சில மணி நேரத்திலேயே சென்றுவிட்டனர். எதிரி தனது நடவடிக்கைக்காக நகரும் போது இவர்களை சுற்றியே சென்று கொண்டிருக்கிறான்... ஆனால் இவர்களை காணவில்லை.

ராஜினி தனது இடத்தைக் காட்டிக்கொடுக்கக்கூடாது என்று சந்தடி இல்லாமல் அவ்விடத்திலேயே இருக்கத் தீர்மானித்துவிட்டாள். எதிரி தங்களிடத்திலிருந்து சிறிது நேரத்தில் போய்விடுவான் என்றே எதிர்பார்த்தனர். ஆனால் எதிரி மாலைவரை போகவில்லை. இரவாகிவிட்டது ஒன்றுமே செய்யமுடியாத நிலையில் உடனிருந்தவளுடன் காட்டிலேயே தங்கிவிட்டு நடுச்சாமத்தில் சென்றுவிடலாம் என்பதே இருவரின் திட்டமாகும். ஆனால் எதிரி நடுச்சாமத்தைத் தாண்டியும் அவ்விடத்தை விட்டுச் செல்லவில்லை. தொடர்ந்து அவ்விடத்திலேயே இருந்துவிட்டார்கள். ராஜினியும் வெளியேற முடியாமல் அவ்விடத்திலேயே இருந்துவிட்டாள். நேரம் செல்லச்செல்ல அவளது உணர்வுகள் மாறத்தொடங்கின, எதிரியைக் கொன்றொழிக்க இதுவே தகுந்த நேரம் என உணர்ந்தவள் தன்னை நன்கு தயார்ப்படுத்திக் கொண்டாள்.

15ஆம் திகதி அம்பகாமம் காட்டுப்பகுதியில் விடுதலைப் போராட்டத்தில் ஒரு அதிசயம் நடக்கவிருந்தது. கப்டன் ராஜினி தனது தாக்குதலைத்தொடர்ந்துவிட்டாள்.

அக்கா என்னை வந்து எடுக்கவேண்டாம். நான் சொல்லுற "பிச்சுக்கு" உடனே அடியுங்கோ?

என்னைச் சற்றிலும் நிற்கிறான். எல்லாஇடமும் ஆமியின்ர நடமாட்டமாகவே இருக்கிறது. திரும்பவும் இன்றைக்கும் ஏதோசெய்யப் போகிறான். எனவே இனியும் என்னைப் பற்றி யோசிக்கவேண்டாம். எனக்கு மேலால செல்ல அடியுங்கோ. எதுவுமே யோசிக்கவேண்டாம். நான் சொன்னதும் அடியுங்கோ... என்றாள்.

சக போராளிகளுக்கு நெருக்கடியான நேரம் வந்துவிட்டது. தங்களுடன் ஒன்றாய் உறவாடி பாசத்தங்கையாய் பல காலம் பழகிவிட்டவளுக்கு மேலால் செல் அடிப்பது எவ்வாறு என ஏங்கித் தவித்தனர். அவளது இறுதிக் கட்டளைக்காக எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

தாயக விடுதலையில் சாதிக்க வேண்டும் என வந்தவள் தனது இறுதி இலட்சியத்தை அடையத் தொடங்கிவிட்டாள்.

கலோ... நான் சொல்லுறத எடுங்கோ... என தனது நிலையையும் தனக்கு முன்னேயுள்ள எதிரியின் நிலையையும் மெதுவாக அறிவிக்கிறாள். அக்கா நான் சுடத்தொடங்கியதும் நீங்கள், நான் தந்தஇடத்தையே தூளாக்குங்கள் என்று சொல்லிவிட்டு சுடத் தொடங்கியிருக்கிறாள். சில வேட்டுச்சத்தங்கள், ஒன்றிரண்டு குண்டுச்சத்தங்கள், இவைகள் கேட்டுக்கொண்டிருக்கும்போதே, எறிகணைகள் எதிரியை நோக்கிப் புறப்பட்டன. எதிரி நிலை குலைந்து போனான்.

கப்டன் ராஜினியின் கடைசி வார்த்தை ஒலிக்கிறது.... அக்கா அதுதான் விடாமல் அந்த இடத்திற்கே அடியுங்கோ என்று சொல்லிவிட்டு, பேச்சை நிறுத்தினாள். இறுதியாக ஒருகுண்டுச் சத்தம் கேட்டது. எல்லாமே முடிந்துவிட்டதை அது அறிவித்தது. கப்டன் ராஜினி தாயக நினைவுடனேயே தன் உயிரினை தந்துவிட்டுச்சென்றாள். ●





சிறுகதை



# உடைவு

"கண்ணாடி உடைஞ்சு போச்சு" அம்மா சொன்னா கண்ணாடி உடைஞ்சால் என்ன? இன்னொண்டை கடையில புதிசா வாங்கிறதுதானே? உடைஞ்சது பழைய கண்ணாடியும்தான். இதைப்போய் பெரிசுபடுத்தி......?

எனக்குள்ள இருந்த எண்ணம் இந்தளவோட சரியாப் போச்சுது. நானும் அம்மாவுமாகச் சேர்ந்து உடைஞ்ச கண்ணாடித் துண்டுகளை அள்ளி எடுத்து வளவிலை பழைய கழிவுப் பொருள் கொட்டுற மூலையிலை கொட்டினம்.

அம்மாவுக்கு கண்ணாடித்துண்டுகளை அள்ளேக்கை கையில சின்னக்காயம். மேலும் கீழுமா கையப்போட்டு உதறினா நான் விரலை பிடிச்சு இரத்தத்தை அமத்தி வெளியிலை எடுத்தேன். பிறகு அம்மான்ர இரத்தம் கசிஞ்சுகொண்டிருந்த விரலை வாய்க்குள்ள வச்சு வந்த இரத்தத்தை உறிஞ்சிக்குடிச்சன்.

அம்மாசிரிச்சா.......

எனக்கு கோபம் வாறமாதிரித்தான் இருந்திச்சு. எண்டாலும் அடக்கத்தானே வேணும்.

"ஏனம்மா சிரிச்சனியள்...?"

"ஒண்டுமில்லை....."

அம்மா கதை சொல்லுகின்ற போதும் சிரிக்கின்ற மாதிரித்தான் இருந்தது. அம்மாவுக்கு தெரியும் தன்ர சிரிப்புக்கான காரணம். அதை கட்டாயம் நான் எப்படியெண்டாலும் அறியாமல் விடமாட்டேன் எண்டு.....

அம்மாவின்ர கையில இருந்து இரத்தம் வாறது கொஞ்சம் நிண்டிட்டுது. எனக்கு சற்று நிம்மதியாயிருந்திற்று. அம்மாவின்ர கையில காயம் எண்டா எனக்குத்தான் கஷ்டம். மனிசி பாவம். விடிய எழும்பி உந்தக்கையால வீட்டில இருக்கிற எத்தினை பாத்திரங் களை தேச்சுக்கொட்டுது அதோட விறகு கொத்தி, சமைச்சு..... எல்லாம் தனிய ஒருத்தியா நிண்டு மாரடிக்கிறதை பார்த்தால் பூப்போட்டுக்கும்பிட வேணும் போல கிடக்கும்.

என்ன செய்ய? பொம்பிளைப்பிள்ளையள் ஒண்டிரண்டு உதவிக்கு இல்லாட்டி வீட்டில இப்படித்தானே....

அம்மா திரும்பவும் தன்ர அலுவலும் கையுமா இருந்தா எனக்கும் கனக்க வேலை கிடக்குத்தான். ஆனா ஏன் நான் அம்மாவின்ர விரலை இரத்தம் வர வாய்குள்ளவைச்சு உறிஞ்சிக் குடிக்க சிரிச்சவா. ஏதோ மனதுக்குள்கிடந்து குமட்டியது. மனசு இருப்பற்று சுழன்றடித்துக்கொண்டே எதையும் தொடர்ந்து செய்ய முடியாத நிலைக்குள் அமிழ்த்திற்று.....

ஏன் இந்த மனசு இப்படி? ஒரு சின்ன விடயத்தில் சிரித்ததுக்காக இப்படி அலைகிறது? சிரித்தது அம்மாதானே? ஏதோ என்னத்தையோ நினைச்சு சிரிச்சிருப்பா அதுக்குப்போய் இப்படி.... சீ...... என்ன மனசு.

எனக்குள்ளே எரிந்து விழுந்தாலும் ஒன்றும் சரிப்பட்டு வருவதாகத் தெரியவில்லை. மனம் அந்தரித்து அலைந்து கொண்டே அம்மாவின் சிரிப்புக்கான பதில் தேடியலைந்தது.

"முளைக்கமுன்னம் ஒரு காதலும் கலியாணமும்.... ஒழுங்கா... கையால பிடிச்சு காற்சட்டை நனையாமல் பெய்யத்தெரியாது..... அதுக்குள்ள...." அப்பு புறுபுறுத் தபடியே வீட்டுக் குள் வந்தார்.

"அப்பு கையில என்ன துண்டு...?"

"அதொண்டுமில்லை நீ போ...." அப்பு எரிந்து விழுந்தார். எனக்கு இருந்த மனச்சிக்கல் எங்கோ தொலைந்து இப்போது அப்புவின் எரிச்சலுக்கு பதிலை தேடியது.

மெல்ல உள்ளே சென்று அம்மாவிடம் அப்பு வந்த செய்தி சொல்ல, அம்மா விழுந்தடித்து வந்தாள்.

அம்மாவுக்கு அப்புவின் கொதிநிலை பற்றிய தகவல் ஏற்கனவே தெரியுமோ? அதுதான் இப்படி வாறாவோ?..... அப்பு ஒரு கொதிபிடிச்ச மனுசன். ஒருத்தரோடையும் சேர்ந்து வாழத் தெரியாத பிறவி. தனக்குத் தனக்கெண்டால் எல்லாம் நல்லா செய்யும்...... தன்னை மீறி ஆரேன் போனால் அவையளை பிறகு எந்தக் காலத்திலையும் மதியாது பொல்லாத கிறுக்குப்பிடிச்சது. இல்லாட்டி ஏழு ஆம்பிளைப் பிள்ளைகளைப் பெத்துப்போட்டு ஒண்டோடையும் இருக்காமல்.......

அம்மா அப்புவுக்கு கிட்டப்போனா.

அப்புவின் கோபம் தணியவில்லை. வெண்தாடியை தடவியபடி அப்பு "உதென்ன கையில ஒரு பத்துப் போட்டிருக் கிறாய்" "அதொண்டுமில்லை கண்ணாடித் துண்டுவெட்டினது" அம்மா ஏதும் பெரிது படுத்தாமல் கூறினாள்.

"இந்தா இதை படிச்சுப்பார்" அப்பு கையில் இருந்த வெள்ளக்கடதாசியை அம்மாவிடம் கொடுத்தார்.

அம்மா மௌனமாகவே கடிதத்தை படித்துவிட்டு எதுவும் பேசாமல் படபடக்க அப்புவிடம் கொடுத்தாள். அம்மாவின் முகத்தை பார்த்தேன். ஒரு சிறுமாற்றம் தெரிந்தது. அப்புவின் முகத்தை பார்க்க அவரின் கொதிப்பு அடங்காமலே நீண்டு கொண்டிருந்தது தெரிந்தது.

என்ன நடந்தது? யாரிடம் கேட்பது? அம்மாவிடம்....? இல்லாட்டி அப்புவிடம்.......? என் மனசுப்புயல் துடித்தது. அதையும் மீறி ஒருவித பயஉணர்வு. அடக்கிக் கொண்டேன். நான் கேட்கப் போய் பிறகு பொல்லுக் கொடுத்து அடிவாங்கின கதை மாதிரி..... நினைக்கவே என்னவோவெல்லாம் செய்தது.

'முளைக்கமுதல் காதலும் கலியாணமும்....' அப்புசொல்லிக்கொண்டு வந்த அந்த வார்த்தை என்னை முள்ளாய் குற்றியது அப்போது. ஆனாலும் பேசாமல் மனம் அடங்கிப்போயிற்று அந்த தருணத்தில்...... ஆனால் இப்போது அது மீளவும் என்னை சுண்டியிழுத்தது. அப்புவும் அம்மாவும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

நான் மௌனித்திருந் தேன். அப்புவும், அம்மாவும் பேசட்டும் நான் கொஞ்சம் எட்டவாப் போவம் என்று தள்ளிப்போன போதுதான் விடயம் விளங்கிற்று. இரு உள்ளமும் மனந்திறந்து பேசிய போதுதான் எல்லாக் கொதிப்பும் அடங்கிப்போவதாய் இருந்தது. நான்தான் இடையில் நிண்டு தகப்பனையும் மகளையும் மனந்திறந்துபேச விடவில்லையோ?

என்மனம் என்னைத் திட்டித்தொலைத்தது. அமைதியோடே அவர்களின் வார்த்தைகளுக்குள் அவர்களின் அனுமதியின்றி செவிகளை உள் நுழைத்ததில் பெருவெற்றி தான்..... இதில்கூட எவ்வளவு சுகம் இருக்கிறதே.....?

ஒட்டுக்கேட்பது கூடாது தான் எண்டாலும் இந்த விசயத்தில்...... நான் தவறு செய்யவில்லைத்தானே!

எனக்குத்தலை சுற்றியது. அப்புவின்ர கதையை கேட்க. ஒண்டுமில்ல ஏதோ நடக்கக்கூடாத ஒன்று நடந்திட்டுதாம். அப்புவுக்கு என்ன விளங்கப்போகுது. அப்புவை நினைக்க எனக்கு சிரிப்புத்தான் வருகுது. அப்புவுக்கு வயதுதான் போட்டுது,

ஆனா அவற்றை அனுபவத்துக்கு மண்டேக்கை ஒண்டுமில்லைத்தான்.

பதினெட்டு, இருபது வயசில காதலிச்சு கல்யாணம் கட்டாம பிறகு எத்தனை வயசில கட்டிறது. அப்பு ஒரு.... அறிவு கெட்டது என்று சொன்னாலும் பிழைதான்.

முந்தி சின்னனில நாங்கள் கதை கேக்கேக்க தன்ர வீரப்பிரதாபங்களையெல்லாம் சுவாரஸ்யமாகச் சொல்லும் மனிசன். நாங்கள் புராணக்கதை கேக்கை அப்பு தன்ர சுயபுராணம் பாடுவார். அப்பு கொஞ்சம் உசாரா நிக்கிற நேரத்தில்தான் எடுத்து விடுவார். அதுவும் கதையோட கதையாத்தான் வரும். தன்னுடைய பழையகாலத்தை

**சத்துருக்கன்**

ஒருமுறை நினைத்து இரை மீட்டபோது தன்னுடைய காதல் லீலைகளை ஒருமுறை சொன்னபோது,

"நான் முந்தியொரு பலே கில்லாடி. பள்ளிக்கூடம் போகேக்கை வரேக்க என்ர வாய் சும்மாகிடவாது. அந்தக் காலத்தில தியாகராஜபகவதர் தான் என்ர ஆத்மீக கலைஞன். அவரப்போலதான் கொஞ்சம் ஸ்ரைல்பண்ண ஆசைப்பட்டு திரிஞ்சனான். இப்ப நீங்கள் திரியிறமாதிரி பகவதற்றை பாட்டு ஒன்று விடாமல் பாடமாக்கிப்போடுவேன்.

ஆச்சி கூட என்ர பாட்டிலதான் மயங்கினதா சொல்லுவா? ஆச்சியை சின்னனில ஏழு எட்டு படிக் கேக்கையே சாதுவா கண் போட்டிட்டன். ஆச்சி பெரிசானப்பிறகு பள்ளிக்கூடம் வாறேல்லை. வீட்டுக்காரர் மறிச்சுப்போட்டினம். எனக்கு பெருங்கவலை. ஆச்சிக்கும் தான் கவலையாயிருந்ததாம். பிறகு சொன்னவா. வீட்டுக்குள்ள இருந்த ஆளை என்ர பக்கம் திசை திருப்பினதே என்ர பாட்டுத்தான். றோட்டாலை போய்வரேக்க கொஞ்சம் உரப்பா ஒரு பாட்டை எடுத்து விட்டா ஆச்சி, கோடித்தா வரத்தில நிண்டு வேலி நீக்கலுக்கால ஒருக்கா எட்டிப் பார்க்காமல் விடமாட்டா. தெய்வதரிசனம் கிடைச்சது போல அப்ப, இருக்கும். இப்படிப் போன காதல் அம்பலத்துக்கு வந்திட்டுது. பிறகென்ன ஒரு அஞ்சாறு மாதம் பேசாமல் இருந்தன். சும்மா இருக்கேல திட்டத்தோட தான் இருந்தனான். ஒரு நாள் கோவில் திருவிழாவிலை கண்டிட்டு 'காரை' பிடிச்சுக் கொண்டு போய் இரவோட இரவா கடத்திக்கொண்டு ஊர விட்டே போட்டேன். பிறகு மூத்தவன் பிறந்தாப் பிறகுதான் ஊருக்கு வந்தனான்.

சும்மா சொல்லக் கூடாதடா மோனை ஆச்சி ஆச்சிதான்.... என்னோட நாப்பது வரிசம் சீவிச்சதே பெரும் சாதனைதான். இல்லாட்டி நான் ஒண்டும் சொல்லாமல் காரோடை போய்நிக்க ராசாத்தி சத்த மில்லாமல் காரில ஏறி வந்தவளெல்லே ம்... அந்தக்காலத்தை நினைச்சுப் பார்த்தா....."

பெருமூச்சோடு தன் கதையை முடித்தார் அப்பு.

அது கூட அப்ப நல்லாத்தான் இருந்தது கேட்க. இந்த இருபது. வயதிலையும் அப்பு விட்ட இப்பவும் பாட்டி வடைசுட்ட கதை முதல் பாரதக்கதை வரை கேக்கவேணு மாப்போல இருக்கு ஆனால்........

இப்படித்தான் ஒருதரும் இஞ்சகதை சொல்லுற பாட்டன் பாட்டி இல்லையே..... என்ன செய்ய ....? இவற்றை எல்லாம் நினைக்கிறபோது அப்பு ஒருநல்ல பிறவிதானோ?

தான் மாத்திரம் பதினாறு வயசிலை அம்மம்மாவை களவாத்தூக்கிக் கொண்டு வரலாம். தன்ரை பிள்ளையளுக்கு பதினாறு பதினேழு வயசிலை கலியாணம் கட்டிக்கொடுக்கலாம். ஆனா..... பேரப்பிள்ளையள் மட்டும் பதினெட்டு இருபதிலை......

என்ன நியாயம்....? அப்பு கதைக்கிறது சரியெண்டு ஆரேன் நினைப்பினமே? அப்பு தன்ர பாட்டுக்குத்தான் வாள்... வாள்...எண்டு கத்திப்போட்டு போகட்டும்.

எனக்கு அப்புவில ஆத்திரம் முட்டிக்கொண்டு வந்தது. அம்மாவை பார்க்க பாவமாய் கிடந்தது. அம்மாதான் பாவம் நாங்கள் செய்யிற சரி, பிழை எல்லாத்துக்கும் எல்லாரிட்டையும் மத்தளம் போல வேண்டிக்கட்டும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## கவிதைகள்

என்னைச் சுற்றிலும்
இறுக்கமான கம்பிக்கூடு.
முள்முடி தரிக்காமலேயே
சிரசிலிருந்து உதிரம் சொட்டுகிறது.
குண்டாந்தடிகளின் குதறல்களால்
சீழ் பிடித்திருக்கும் என் சரீரம்
நெருங்குகிறது தன்
இறுதிநாளை நோக்கி.
மனிதக் குருதி எந்நேரமும்
காய்ந்துகிடக்கும் பாதணிகளும்
மானுட எல்லைகடந்த குரூரவிழிகளுமாய்
அலைந்து திரியும் காவலர்கள்.
இந்துமா கடலில் சஞ்சரிக்கும்
இந்தத்தீவின் எங்கோவோர் மூலையில்
என் தாயின் கருப்பையில் காணத்தவறிய
இருளை நாள்முழுதும் காணும் பேறுபெற்ற
ஓர் சித்திரவதைச் சிறைக்கூடத்தில்
கிடக்கிறேன் என்பதுமட்டும்
இப்போதைக்கு எனக்குத்தெரிந்த
ஒரே உண்மை.

என்னுயிர் சகி....
ஒரே அன்புடையோமாய்
நாம் நேரெதிர்ப்பட்டு
சந்திக்கநேர்ந்த அந்த முதல்நாளை
எப்போதாவது எண்ணிப்பார்க்கையில்
மக்கிப்போன மனவெளியிலிருந்து
உற்பவித்தெழுகிறது
நானெழுதும் கவிதைகள்.

உணர்ச்சிப் பிரவாகத்தில் முக்குளித்த
ஓர் நிலாநாளில்
உன்னிடமிருந்து பெற்றுக்கொண்ட
இதழொற்றின் ஞாபகச் சிதறல்களை
இன்றைக்கான என் காயங்களிற்கு
ஒத்தடமாக்குகையில்
மாபெரும் தீக்கல்லில்
என்னிதயம் வறுபடும் வாடை
நாசிகள் முழுதும் நிறைந்து மணக்கிறது.

கலங்காதிரு சகியே....
அன்றைய நாட்களில்
அனல் கக்கும் என்னை
ஓரவிழிப் பார்வையெனும் ஒரேயொரு
பனித்துளியினால்
உறைநிலைக்கு உட்படுத்தியவளன்றோ நீ.

விருட்சங்கள் தம் ஆணிவேர்களை
ஆழப்புதைத்து நீர்தேடுவது
தத்தமக்குரிய ஆயுள் நாட்களின்
நிமிடங்களை நீளப்படுத்தத்தானே.
நம்பிக்கைத்துளிகளில் சில
இன்றைக்கும் ஈரமாகத்தான் இருக்கின்றன.

வந்துவிடுவேன்
நிச்சயம் வந்துவிடுவேன்.

வேல்.லவன்



# இலக்கியப்பகிர்வு

# ஏகலைவன்

"ஈழத்து இலக்கியச் சூழலிலே சிற்றிதழ்களின் எண்ணிக்கைகள் அதிகரித்தவண்ணமுள்ளன. இது இலக்கிய உலகில் ஆரோக்கியமான நிகழ்வுகளுள் ஒன்றாகும். ஒரு சில இதழ்கள் வர்த்தக ரீதியான இலாபங்களையும் ஈட்டிவருவதாக அவ்விதழ்களின் ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள்." என்ற விடயத்துடன் ஏகலைவன் இதழ் எட்டு வெளிவந்துள்ளன.

ஏகலைவன் கூறும் இச்செய்தி உறுதியானால் ஈழத்து இலக்கிய உலகிற்கு ஒரு பொற்காலம்தான் என்பதை திடமாக நம்பலாம். ஆனால் அவ்வாறு வெளியாகும் இதழ்கள் எவ்வகையான படைப்புக்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றன. என்பதும் கவனிக்கப்படவேண்டிய விடயம் ஆகும்.

ஏகலைவன் சமூக கலை இலக்கிய விடயங்கள் கல்வி, அறிவியல் விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றது. அதன் காரணமாக மாணவர்களின் கணிசமான ஆக்கங்கள் உள்ளன. இதனால் பாடக்குறிப்புக்கள் போன்ற விடயங்கள் வருவது தவிர்க்க முடியாது.

துரோணர் பதில்கள். நடிகைகளுக்கு ஆடை அவசியமில்லை என்று இயக்குநர்கள் கருதிவிட்டார்களா? என்ற மாதிரியான கேள்விகளை தவிர்க்க முடியாதா? அதே போலதான் பிரதம ஆசிரியருக்கு தற்செயலாக இடமாற்றம் கிடைத்தால் ஏகலைவன் நிலை என்ன? போன்ற கேள்விகளும் "கேட்பவருக்கும் பதில் சொல்பவருக்கும் பிரயோசனமான விடயங்களைக் கையாண்டால் நல்லது என்று நினைப்பதில் தவறேதும் இல்லைத் தானே!

மாணவர் ஆக்கங்களைத் தவிர்த்துக் கொண்டால் ஞானரதன் அவர்கள் எழுதிய ஸ்கிறிப்ற் நெற் (SERI PTNET) அமைப்பின் குறும்படங்கள் தொடர்பான கட்டுரை- உள்ளது.

"பொதுவாகவே இனக் கலவரங்கள், யுத்தங்களில் பின்வரும் அமைதிக் காலங்களில் சமரசம் செய்யும் கலை இலக்கியப் படைப்புக்கள் கூடுதலாக சிங்களக் கலைஞர்களிடமிருந்து உறவுப்பாலமாக வருவது வரலாறாக உள்ளதும் கவனிக்கத்தக்கது." என்று ஞானரதன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

ஈழத்து நவீன இலக்கிய ஆய்வு முயற்சிகள் நிகழ்காலமும் எதிர்காலமும் என்னும் கலாநிதி. செ. யோகராசா அவர்களின் கட்டுரை முக்கியமான ஒரு செய்தியை வெளிப்படுத்துகின்றது.

"இன்றுவரை நடைபெற்ற ஈழத்து நவீன இலக்கியம் தொடர்பான ஆய்வுகளின் வளர்ச்சி ஆரம்பநிலையிலேயே உள்ளமை புலப்படுகின்றது. அதுகூட குறைபாடுகள் பலவற்றைத் தழுவியுள்ளது. ஆக இதனை நோக்கும் போது எமக்கு ஓர் உண்மை பளிச்சிடுகின்றது. இதுவரை நடைபெற்ற நவீன இலக்கிய வளர்ச்சி சார்ந்த ஆய்வுகள் என்று கருதப்படுவன கூட சரியான அல்லது முழுமையான விதத்தில் இனிமேல் தான் செய்யப்பட வேண்டிய ஆய்வுகளாக உள்ளன என்பதே அது" என செ.யோகராசா அவர்கள் கூறுவது உண்மையானது.

எங்கள் இலக்கிய வரலாற்றில் முறையான ஆய்வுகள் மதிப்பீடுகள் என்பன நடந்தனவா, நடக்கின்றனவா என்பதெல்லாம் ஆராய்வுக்கு உரிய விடயங்கள்.

"பல்கலைக் கழக ஆய்வுகளுக்கு மட்டும்தானா படைப்புக்கள்? ஏன் கூடாதா? பல்கலைக்கழகத்தில் உள்ளவர்கள் இலக்கியங் குறித்து எந்தளவிற்குக் கவனம் கொள்கிறார்கள்? ஏதோ ஒரு ஆத்திரத்தோடு ஒன்று கூடல்களிலும் இலக்கியக் கூட்டங்களிலும் உரையாற்றுகிறார்கள். இந்தப் பேராசிரியர்களும் ராஜம் கிருஷ்ணரின் (ராஜம் கிருஷ்ணன் தான் சரியான பெயர்) கரிப்பு மணிகள்,கப்டன் மலரவனின் "போர் உலா'' செங்கையாழியானின் மரணங்கள் மலிந்த பூமி தவிர்த்து இலக்கியப் 'பரிச்சயமில்லை என்பது வேதனைக்குரியது. அவ்வாறெனின் அவர்களால் தயாரித்து அனுப்பபடும் பட்டதாரிகளின் இலக்கியப்பரிச்சயம்....?'' எனப்போர்க் கொடி தூக்கும் இராகவன் அவர்களின் குரல் எவ்வளவு தூரம் பொருத்தமானது.




இராகவன் சொல்லும் கருத்து தனியே பல்கலைக் கழக பேராசிரியர்கள் மட்டும்தான் பொருத்தமானதா? எங்கள் பல்கலைக் கழகங்களில் தமிழ் இலக்கியம் பற்றி மதிப்பீடு செய்து பேசக் கூடிய எத்தனை பேராசிரியர்கள் உள்ளார்கள். கைவிரல் எண்ணிக்கைக்குள் அவர்களை அடக்கிவிட முடியாதா? அப்படியானால் எந்த பேராசிரியர் மீது இவர் குற்றம் சாட்டுகின்றார்.

இராகவன் பட்டியல் இடும் ரஞ்சகுமார், உமா வரதராஜன், எல். எம்.மன்சூர், சட்டநாதன், குப்பிளான் சண்முகன் போன்றவர்களை பேராசிரியர் சிவத்தம்பி தன்னுடைய எத்தனையோ பேச்சுக்களிலும், கட்டுரைகளிலும் சொன்னதை ராகவன் அறியவில்லையா?

ராஜம் கிருஷ்ணரின் "கரிப்பு மணிகளை'' கப்டன் மலரவனின் "போர் உலா" செங்கை யாழியானின் "மரணங்கள் மலிந்த பூமி" தொடர்பாக பேராசிரியர்கள் கருத்துச் சொன்னால் இராகவன் ஏன் துள்ளி எழவேண்டும்.

"கரிப்பு மணி'' இலக்கியமில்லையா? "போர் உலா" இலக்கியமில்லையா. எப்படி இராகவனுக்கு ரஞ்ச குமாரை, உமா வரதராஜனை, அ.யோகராசா பற்றி சொல்ல ஆர்வம் உள்ளதோ- அதே போலவே மற்றவர்களுக்கும் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல உரிமை இருக்கிறது.

எல்லோரும் எல்லாப்படைப்புக்களையும் ஏற்றுக் கொண்டதில்லை. எனக்கு இந்தப் படைப்புத்தான் பிடிக்கின்றது. உனக்கும் அதுதான் பிடிக்க வேண்டும் என ஒருவரும் சொல்ல முடியாது.

அப்படிச் சொல்லப்புறப் பட்டால் பண்பு இல்லாமல்தான் கதைக்க வேண்டிவரும். அதற்கு உதாரணம் இராகவன் சொல்லும் ஒரு வில்லங்கமான விடயம்.

நரி-பழம்-புளிப்பு என்று கதை தொடங்கும் இராகவன் எட்டாத பழங்கள் புளிப்பானவை. எனும் கோட்பாட்டுடன் அலையத் தொடங்கிய நரிக்கூட்டத்தில் ஏதேனும் ஒரு நரி ஒரு பெண்ணைப் புணர்ந்ததில் பிறந்தவர்களின் வழித் தோன்றலாக வில்லங்களைக் காணலாம் எனக் கூறுகின்றார்.

"தீவிர இலக்கியம் ஒரு மாயை" என்ற தலைப்பில் முன்னைய ஏகலைவன் இதழ்களில் "வில்லங்கன்"என்பவர் எழுதிய கட்டுரைக்கு எதிர் விளையாட முனைந்த இராகவன் இவ்வாறான ஒரு மிக மோசமான கருத்தை எதிர்வினையாக வைப்பது ஒரு பண்பான செயலாக /கருத்தாக முடியாது.

"இலக்கியப் படைப்பாக்கம் உண்மையில் தவம் போன்றது. நினைத்த மாத்திரத்தில் ஒரு படைப்பாக்கத்தைச் செய்ய இலக்கியவாதி மத்திரவாதியல்ல. அவன் தனது உணர்வுகளை உயிர்ப்புடன் பதிலாக்குகின்ற ஒருவர் தீவிரமான தேடலில் தொடர்ந்தியங்குபவன். அவன் இயங்கும் உலகம் அலாதியானது. அவனது படைப்புக்களைப் புரிந்துகொள்ள அவர் இயங்கும் அலாதியான உலகத்தில் சஞ்சரிக்க வாசகனும் தீவிரமான தேடலில் தொடர்ந்தியங்க வேண்டும். தனது மூன்றாந்தர இரசனை மட்டத்தில் இருந்து விடுபட்டு உயர்மட்ட இரசனைக்கு நகர வேண்டும்" எனக் குறிப்பிடும் இராகவன் வில்லங்கனின் பிறப்பு தொடர்பாகக் கூறும் கருத்தினை எந்த இரசனை மட்டத்தில் வைத்து சொல்லுகின்றார் என்பது தெரியவில்லை.

"இதுவரைகாலமும் சாதாரண மக்களால் விளங்கிக்கொள்ளப் பட்ட இலக்கியங்களுக்கான இடம் (எப்போதும்) மூன்றாம் தரமானதுதான். என்று அடித்துக்கூறும் இராகவனின் மேற்குறித்த தன்னுடைய கருத்தை எந்தத் தரத்துடன் அடக்குகின்றார்.

தீவிர இலக்கியம், ஜனரஞ்சக இலக்கியம் அல்லது தீவிர இலக்கியம் மாயை என்ற கருத்துக்களுக்கு அல்லது விவாதங்களுக்கு யாராவது முடிவு கட்டிவிட்டார்களா? அல்லது முடிவு கட்டிவிட முடியுமா?

அது தனியே ஆராயப்பட வேண்டும். தீவிர இலக்கியம் அது தொடர்பான புரிதல் என்பது 5ஆம் வகுப்பு மாணவனை 7ஆம் வகுப்பு மாணவனும், 7ஆம் வகுப்பு மாணவனை 9ஆம் வகுப்பு மாணவனும் (அப்படியே உயர்ந்து உயர்ந்துபோய்) கேலியாக பார்ப்பது போலதான்.

தனக்கு கீழ் மட்டத்தில் இருப்பவனை ஒருவர் கேலியாக பார்க்க அதற்கு மேல் நிலையில் உள்ளவன் அவரைக் கேலியாக பார்ப்பான் இதுதான் உண்மை. எனவே ஒருவன் எல்லாம் புரிந்தவன் நான் தான் என மார்பு தட்ட முடியாது.

குப்பிளான் ஐ.சண்முகனின் "சிதம்பரம்" சிறுகதையின் முடிவில் வருவது போலதான் எல்லாமே.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்



# இளைய நாதம்

## எங்கள் பள்ளி

சேர்த்து விட்டார் பெற்றோர்கள்
சிறுவர் எம்மைப் பள்ளியில்!
பார்த்துங் கேட்டும் இங்கேநாம்
பாடங்கற்றே ஓங்குவோம்
சிறுவர் எங்கள் பள்ளியில்
சேர்ந்திருப்போர் அறிவினால்,
சுறுசுறுப்பால் பூமியைச்
சொர்க்கமாக மாற்றுவோம்!
உள்ள தொழில்கள் யாவையும்
உலகமெங்கும் நாட்டுவோம்
கொள்ளை செல்வம் நாடெல்லாம்
குவியும் வழிகள் கூட்டுவோம்!

# எமது எலிகள்

எமது மரபுரிமைச் சொத்துக்களான பூர்வீகத் தன்மையான எலிகளில்- இலங்கையில் ஆறு வகைகள உள்ளன.

ஆறு வகை எலிகளும் எமது தாயகத்தில் வாழுகின்றன. அடிப்படையில் இவை நமது காட்டுப் பகுதிகளை பிறப்பிடமாகக் கொண்டவை. ஆனால், உணவுத் தேவைகளுக்காக அவை நமது வீடுகளுக்குள்ளும் வந்துவிட்டன.

எலியால் நாம் படும் தொல்லை சொல்லிமாளாதது. பயிரழிப்பு முதல் படிக்கும் நூல்களை அழிப்பதுவரை எமக்கு அழிவுகளை அளவு கணக்கில்லாமல் எலிகள் செய்கின்றன. இதனால் எலிகளை அழிப்பதற்கான மருந்துகள், பொறிகள், பூனை வளர்ப்பது என்று ஏராள தந்திரோபாயங்களை நாங்கள் கையாள்கிறோம். அதிகளவில் பெருகுவதால் எலிகளால் நாம் அழிவுகளை அனுபவிக்கிறோம்.

எமது இடங்களில் 6வகை எலிகள் இருக்கிறதாக சொன்னோம். அவை பற்றிப்பார்ப்போம்.

3வகை எலிகள் சிறியவை. 3வகை எலிகள் பெரியவை. சிறிய எலிகள் மூஞ்சூறு அல்லது மூஞ்சிலி எனப்படுகின்றன. ஒரு மூஞ்சூறு சாம்பல் நிறம் கொண்டது. மற்றவை சாம்பல் நிறம்கொண்ட சிறிய மூஞ்சூறு. அடுத்த மூன்றாவது சிறிய எலி வீட்டெலி பழுப்பு நிறம்கொண்டது.

பெரிய எலிகள் மூன்று வகையாக இருக்கு. ஒன்று கடும் பழுப்பு நிறம்கொண்டது. இதற்கு பெயர் சுண்டெலி. நீங்கள் படிக்கிற கதைகளில் வாறது இந்தச் சுண்டெலிதான். சிட்டெலி என்றும் இதை சொல்வார்கள்.

அடுத்த எலி வெண் பழுப்பு நிறம்கொண்டது. அதிகம் வெண்மையை கொண்டதால இதை வெள்ளெலி என்றும் சொல்வார்கள். இந்த எலிதான் உயிரியல் பெயர் ரீதியாக எமது பூர்வீகத் த்ன்மைகொண்டவை.

அடுத்தது எலிகளிலேயே மிகப்பெரியது 'பெருச்சாளி' எலி. இது உலகளவில் உள்ள பண்டிக்கூட்ட என்ற வகையுள் இந்த பெரிச்சாளி எலி அடக்கப்படுகின்றது. இப்ப நாங்கள் விளக்கமாக மூஞ்சூறு எலிகளைப் பற்றிப் பார்ப்போம். பெரிய மூஞ்சூறு எலி சாம்பல் நிறமானது. நீளம். 246மில்லி மீற்றர். வால் கட்டையானது. மூஞ்சூறுகளில் கூட



10வகை யான வை இருக்கின்றன. இவை எமது இடங்களுக்கு இந்தியாவிலிருந்து தான் வந்தவை என கருதப்படுகின்றது. நகர்ப்பகுதிகளில் இவை அதிகம் உள்ளன. ஒரு தடவையில் 2-3 குட்டிகளை இது ஈனும். இதன் உயிரியல் பெயர் **'Suncus Murimus CueraUlescens'** அடுத்த சிறிய மூஞ்சூறின் உயிரியல் பெயர் **'Suncus Murimus Murius.** இதன் நீளம் 173 மில்லி மீற்றா.

# சொற்சிலம்பம் - 56

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ன் | ர் | ஜ | நூ | ற | ஏ | ர |
| கி | கா | நி | வி | கௌ | கா | மா |
| நீ | பொ | ல் | ரோ | தி | எ | ம் |
| ஆ | ட் | சி | ப | உ | ங் | யா |
| ம் | ஸ் | ப் | த் | ரா | வ | ஜா |
| க் | ல | க | இ | ன | ம் | தே |
| சி | பூ | வ | ஓ | ச | வி | ளை |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -54 இன் விடைகள்

01. யாழ் நூல்

02. யானை

## சொற்சிலம்பம் - 54 இன் பரிசுக்குரியவர்

S.நிரோஷன்,
பரமாந்தர் வளவு,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

## சொற்சிலம்பம் - 54 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. செ.தினேஸ், விசுவமடு, முல்லைத்தீவு.
02. கி.சரிதா, கொக்கிளாய், அ.த.க- பாடசாலை, புதுக்குடியிருப்பு.
03. வா.தேனுஜா, மு/யோகபுரம்- ம.வி, யோகபுரம்.
04. ஸ்ரீ.சொரூபிகா, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
05. அ.தர்சீகன், உயிலங்குளம், மன்னார்.
06. ம.சுகந்தினி, 158 ஜெயந்திநகர், கிளிநொச்சி.
07. த.உதயபவன், கோவில் புதுக்குளம், வவுனியா.
08. சு.மகாலட்சுமி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

01. 50 ஆவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா?
01) ..................................

*சொற்சிலம்பம்-56*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

02. தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று?
01) ..................................

பெயர் :- ..................................

முகவரி :- ..................................

..................................

# எலியாரின் வண்டில்

பகுதி-06



# வீடு

## குடும்பச் சிக்கலை தவிர்ப்பது எப்படி?

"குடும்பம் ஒரு கோவில்" என்று அன்றைய சாண்றோர் சொல்ல இன்றைய சமூகம் "குடும்பம் ஒரு கதம்பம்" என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றன. குடும்பத்துக்குள்ளேதான் பல சிக்கல்கள் வேரூன்றிக்கிடக்கின்றன. ஒரு குடும்பம் என்பது கணவன், மனைவி, பிள்ளைகள் கொண்ட ஒரு கூட்டம். கணவன், மனைவி பிரச்சினை, மாமி-மருமகள் பிரச்சினை அத்தோடு வறுமை, சீதனக்கொடுமை போன்ற பிரச்சினைகள் குடும்பத்துக்குள்ளே ஊடுருவிக்கொண்டு குடும்பத்தை குலைத்துச்செல்கின்றது. "வீட்டுக்கு வீடு வாசற்படிதான்" அதைக்குறைக்க ஒவ்வொருவரும் முயலவேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே வாழ்ந்து காட்ட வேண்டும். எந்தக் குடும்பத்துக்குள்ளும் ஏதாவது பிரச்சினை ஊடுருவத்தான் செய்யும். வாழ்க்கையில் கணவனுக்கும், மனைவிக்கும் இடையிலான ஒரு உறவு ஒரு திறந்த புத்தகமாக இருக்கவேண்டும். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழப பழகவேண்டும். ஒருவருக்கொருவர் சிறிய சிறிய விடயங்களை மறைக்கக்கூடாது. மறைத்த காரியம் வெளிப்படும் போதுதான் சந்தேகமும், கோபமும் அவநம்பிக்கையும் ஏற்பட வாய்ப்புண்டு. சந்தேகம், முளைவிடத தொடங்கினால் வாழ்க்கை எனும் மரம் வேரோடு சாய்ந்துவிடும். ஆழமானநட்பு தகர்ந்துவிடும். அன்பு அநியாயமாகச் செத்துவிடும். இதனால வாழ்க்கையில் திசைமாற்றங்கள் வந்துபோகும். இளையவர்களின் அன்புப்பிணைப்பு அறுந்துவிடும். கணவன் மனைவி உறவு உடைந்துவிடும். இப்படிப் பல சம்பவங்கள் இந்த சந்தேகத்தால் நடைபெற்று இருக்கின்றன. "சந்தேகம் சந்தோசக் கேடு" ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் வாழலாம் குடும்பத்தில் கணவனோ மனைவியோ என்னதான் தவறு செய்தாலும் அதனை ஆறுதலாக பிழையை உணரும் வகையில் சொல்ல வேண்டும். பல்வேறுபட்ட கேள்விகளுக்கு இடங்கொடுக்காதீகள். அடுத்து மதுவால் ஏற்படும் பிரச்சினையை எடுத்



துப் பார்ப்போமானால் "குடி குடியைக் கெடுக்கும் என்பார்கள்" குடிகாரன் வீடு ஒருகாலமும் விடியாது. மதுவுக்கு அதிபதியானவர்கள் மதுவை அருந்திவிட்டு தொட்டுத்தாலி கட்டிய மனைவியைக்கூட கொன்றும் இருக்கின்றார்கள். பெற்ற பிள்ளைகளை வதைத்தும் இருக்கின்றார்கள். இது இன்றைய சமூகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதனால் பிள்ளைகளின் எதிர்காலம் சிதைவடைந்து போகிறது. மனம் பாதிக்கப்படுகின்றது. உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் உங்கள் கைகளிலேயே உள்ளது. உங்கள் பிள்ளைகளின் முகத்தில் சோகத்தின் கோடுகளை பதியாதீர்கள். மதுவிலிருந்து விடுபட்டு சுகமான வாழ்வைத்தேடுங்கள்.

மாமிக்கும் மருமகளுக்கும் ஒரு இடைவெளி இருக்கவேண்டும். மாமிக்குரிய அந்தஸ்தை மருமகள் கொடுக்கவேண்டும். விட்டுக்கொடுத்து வாழப்பழகவேண்டும். அதற் காக மாமி சட்டம் வகுக்கக்கூடாது. பகையை வளர்க்காது புரிந்துணர்வோடு எதையும் கதைத்து ஆலோசித்துச்செயற்படவேண்டும். மாமியும் சரி, மருமகளும் சரி, புரிந்துணர்வின்றி செயற்பட்டால் குடும்பத்தில் பூகம்பம்தான் வெடிக்கும். வாழ நினைத்தால் வாழலாம். ஒவ்வொரு மாமியும் தங்களுக்கு வரும் மருமகளை மகள் போலவும், ஒவ்வொரு மருமகளும் தங்களுக்கு வரும் மாமியை தாயைப் போலவும் நினைத்து வாழ்ந்தால் எந்தவித பிரச்சினையும் இடம்பெற வாய்ப்பில்லை.

வறுமை சீதனக்கொடுமையினால் பல குடும்பங்களில் பெண்கள் முதிர் கன்னிகளாக உள்ளார்கள். நம் ஆண்கள் சீதனம் வாங்குகின்றார்கள் என்ற பழியை ஆண்களின் மீது மட்டும் சுமத்துகின்றோம். இதில முக்கிய பங்கு வகிப்பது பெண்தான். அதாவது தனது மகனை அதிக விலைக்கு விற்க வேண்டுமென விரும்புவது ஆணின் தாய்தான் எனவே இங்கே ஒரு பெண்ணே பெண்ணுக்கு எதிரியாக, பெண்ணடிமைத்தனத்துக்கு துணைபோவதை காணலாம். எத்தனையோபேர் சீதனக் கொடுமைக்கு எதிராக குரல் கொடுத்தாலும் ஆணின் தாயான பெண்ணிடம் இருந்து எதிர்ப்புக்குரல் வெளிவரும் போது சீதன அரக்கன் இவ்வுலகை விட்டு வெளியேற வாய்ப்புண்டு. எனவே ஆணாதிக்கத்திற்கெதிராக நாம் குரல் கொடுப்பதில் ஆணின் தாயான பெண்ணின் பங்கு முக்கிய மடைகிறது.

இப்படியாக பல சிக்கல்கள் குடும்பத்துக்குள் ஏற்படுகின்றது. உலகத்திலே இன்பத்தைவிட துன்பம்தான் அதிகம். துன்பத்தை குறைக்க ஒவ்வொருவரும் முயலவேண்டும். "மனம்கொண்டதே மாளிகை" என்பதற்கிணங்க ஒவ்வொருவரும் புரிந்துகொண்டு வாழுதல்வேண்டும். பிரிதலில் இல்லை வாழ்க்கை புரிதலில்தான் வாழ்க்கை. ஒற்றுமையே பலம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. எனவே குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களை குறைத்து ஒற்றுமையுடன் வாழமுயன்றால் சந்தோசமாக வாழலாம்.

**ச.தயாபரநாதன்.**

## இப்படிச் செய்யலாம்...

குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை அவ்வப்போது கொஞ்சமாக வாங்கிக் கொள்ளவேண்டும். மொத்த மாக எந்தப் பொருளையும் வாங்கிச் சேர்த்து வைத்துக்கொள்ளக் கூடாது அப்போதுதான் விலைவாசிகள் அதிகரிக்காது இது பலருக்குத் தெரிவதில்லையே!

* * *

கற்பூரமும் தேங்காய் எண்ணெய்யும் கலந்த கரைசலை மெல்லிய தூரிகையினால் எடுத்து வீட்டிலுள்ள மரச்சாமான்களின் பூசி வந்தால் மூட்டைப் பூச்சிகள் ஒழிந்து விடும்!

* * *

வருடத்திற்கு இரண்டுமுறைகள் வீட்டிற்கு வெள்ளையடிக்கவேண்டும். சுண்ணாம்பின் காரம், வீட்டில் உள்ள பூச்சிகளையெல்லாம் கொல்லுகிறது. ஆகையால், பூச்சிகளைக் கொல்ல, தவறாமல் வருடத்திற்கு இரண்டுமுறைகள் வெள்ளையடிக்க வேண்டும்!

* * *

கண்ணாடி டம்ளர்களை மிகவும் சூடான தண்ணீரில் போட்டால், அவைகள் உடைந்துவிடும். கண்ணாடி டம்ளர் சூடான தண்ணீரில் உடையாமல் இருக்க, டம்ளரின் அடிப்பாகத்தை முதலில் தண்ணீரில் அழுத்தாமல், பக்கவாட்டில் அழுத்தினால், டம்ளர் உடையாது. * * *

## மருந்துகளை எவ்வாறு பேணுவது....

மருந்துகளை வைப்பதற்குத் தனியே சிறிய பெட்டி அவசியம் வேண்டும், அது குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் வைப்பது அதைவிட அவசியம். அதற்கு பூட்டும் சாவியும் இருந்தால் இன்னும் நல்லது. மருந்துப் போத்தல்களின் மேல் பெயர் கட்டாயம் இருக்க வேண்டும். வேறு மருந்துப் போத்தலில் வேறொரு மருந்து வைக்கும் போது அந்தப் பெயரை எழுதி ஒட்டுவது மிகவும் அவசியமானது. மருந்துகளை நோயாளியைக் கவனிப்பவர் மட்டுமே கையாளுவது நல்லது.

விஷ மருந்துகளை மற்ற மருந்துகளுடன் கலந்து வைக்கக் கூடாது. இவற்றின் பெயர்களை வேறொரு வண்ணத்தில்- குறிப்பாக, சிவப்பில் இருந்தால் நல்லது- எழுதி ஒட்டுங்கள். சிவப்புதானே அபாயத்தின் அடையாளம்....! அதை பார்த்ததும் கவனமாக இருக்க வேண்டும் என்ற உணர்வு தன்னால்வரும். இதே மாதிரியான கவனம் எல்லா மருந்துகளைக் கையாளுவதிலும் தேவை.

மருந்துகளை இருட்டில் கையாளக்கூடாது. இவற்றை இருட்டிலும் நோயாளிக்குத் தரக்கூடாது. ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக 'சரியான மருந்துதானா? என்று கவனியுங்கள். எந்த மருந்தில் எவ்வளவு, எப்பொழுது தரவேண்டும் என்ற மருத் துவர் குறிப்புகளை குறித்து வைத்துக் கொண்டு கடைப் பிடியுங்கள். வேளையும் மருந் தும் தவறவும் மாறவும் கூடாது.

## கோதுமை தேன் குழல்

**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| கோதுமை மா | -1பேணி |
| அரிசி மா | -2பேணி |
| வெண்ணெய் | -3கரண்டி |
| பெருங்காயத் தூள் | -3கரண்டி |
| சீரகம் | -1மேசைக் கரண்டி |
| உப்பு | -தேவையான அளவு |
| எண்ணெய் | -பொரிக்க தேவையான அளவு |




**செய்முறை:-**

கோதுமை மா, அரிசிமா, பெருங்காயத்தூள், சீரகம், உப்பு, வெண்ணெய் ஆகியவற்றை ஒரு அகன்ற பாத்திரத்தினுள் போட்டு கொஞ்சம் கொஞ்சமாக நீர் விட்டு முறுக்கு மா பதத்திற்கு பிசைந்துகொள்ளவேண்டும். பின் நன்கு எண்ணெயை காய வைத்துக்கொள்ளவும். பின் தேன் குழல் அச்சில் மாவினை இட்டு எண்ணெயில் பொரித்தெடுக்கவும். இது நன்கு மொறுமொறுப்பாக இருக்கும்.

**குமரகுரு பரிசுத் திட்டத்தின் 13 தொடக்கம் 16 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.**

**பரிசுத்திட்டம் –13**
தி.தாமரைச்செல்வி,
முடவேம்படி,
சுன்னாகம்.

**பரிசுத்திட்டம் –14**
ஜெ.அமலினி,
282,3ம் யூனிற், யோகபுரம்,
மல்லாவி.

**பரிசுத்திட்டம் –15**
த.சுமதி,
1ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

**பரிசுத்திட்டம் –16**
அரியரத்தினம் வாகினி,
ஒட்டறுத்தகுளம்,
ஏரம்பவிநாயகர் கோவிலடி,
வவுனிக்குளம், மல்லாவி.

**பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத் திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*


## குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்



வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—17**

பெயர்:........................................................

முகவரி:......................................................

........................................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# கழுத்துக்கு சுருக்குக்கயிறு கட்டினமாதிரி எங்கட காரியங்களைச் செய்யலாமா?

வணக்கம் பிள்ளையள்! எல்லாரும் சுகமா இருக்கிறீயளோ? உங்களை நான் இண்டைக்கு சந்திக்கிறதிலை எனக்குச் சரியான சந்தோசம் ஏனெண்டால் என்ரை தலை தப்பினது பெரிய விசயம் கொஞ்சம் பிந்தியிருந்தால் என்ர கதையே முடிஞ்சிருக்கும். அதுகும் பாருங்கோ, அநியாயச்சாவு! இந்தக் காலத்திலே சீவியம் நடத்திறதெண்டால் றொம்பக் கஷ்டம்தான்! உங்களுக்கென்ன சர்வதேச சிறுவர்கள் தினம் ஒரே கொண்டாட்டமா இருந்திருப்பியள். அதே போன வெள்ளிக்கிழமை தான்




சர்வதேச முதியோர் தினமும்! எட எனக்கெண்டும் ஒரு நாள் இருக்குதெண்ட நினைப்பில புது உடுப்புகளும் போட்டுக்கொண்டு கலாதியாய்த்தான் வெளிக்கிட்டனான். ஆனால் அதே என்ர நினைவுநாளாவும் ஆகிறதுக்கான வாய்ப்பும் இருந்ததெண்டு ஆருக்குத் தெரியும்! எட சாகிறதை விட, மற்றச்சனம் பிழையா எல்லே விளங்கிக்கொண்டிருக்கும் எண்டிறதுதான் நினைக்கவே கஷ்டமாயிருக்கிது.

இல்லைப்பாருங்கோ! கொஞ்சக் காலத்துக்கு முன்னால யாழ்-பல் கலைக்கழகத்தில படிக்கிற பிள்ளையளின்ர ஆதரவில சிலகுறும் படங்கள் வெளிவந்தது அறிஞ்சிருப்பியள். அதில 'செருப்பு' எண்டொரு படம் கொழும்பு, வன்னி, யாழ்ப்பாணம் எண்டு எல்லாப் பத்திரிகைகளிலையும் நல்லமாதிரி விமர்சனம் எழுதியிருந்தவை. எட ஒருக்கால் அதைப் பார்க்கோணும் எண்டிட்டு, உந்த 'ஏ9' பக்கமா இருந்த பெரிய ஒரு வீடியோ வாடகைக் கடைக்குள்ள உள்ளட்டன். சும்மா சொல்லப்படாது கால் வைக்க இடம் இல்லாமல் கண்ட இடமெல்லாம் படக்கசெற்றுக்கள் தான்! அங்கே 30 வயசை முட்டிற மாதிரி ஒரு தம்பி, ஏதோ 'கடை மாறி வந்திட்டார் இவர்' எண்ட தோரணையில, கேள்விக்குறிப்பார்வை ஒண்டை என்னில வீசினார். நானும் முந்திப் பிந்தி கசெற் எடுக்க ஒருநாளும் வந்த அனுபவம் இல்லை. ஆளாளுக்கு வந்து ஏதேதோ சொல்லி வேண்டிக் கொண்டு போனவடி இருந்திச்சினம். சரி மினைக்கெட நேரமில்லை எண்டிட்டு அந்தத்தம்பியைப் பார்த்துக் கேட்டன், "செருப்பு இருக்கிதோ?" "அ.'.க.'.கா... அங்கால பக்கத்துக் கடையில விசாரிச்சுப் பாருங்கோ!" பெரிசாச் சிரிச்சபடி சொன்னார். எட இல்லைப்போலகிடக்கு. சரி இன்னுமொரு நல்ல படம் ஏற்கனவே பார்த்ததுதான், இருந்தாலும் இன்னுமொருக்கால் பார்க்கலாம். 'குட்டி' எண்ட அந்தப் படத்தில வேலைக்கு அமர்த்தப்படிற ஒரு சின்னப்பிள்ளை கிழவி ஒண்டால கொடுமைப்படுத்தப்படிறதையும், பேந்து தரகன் ஒருத்தனின்ர ஏமாற்று வார்த்தையளை நம்பி, சிறுவர் விபச்சாரம் நடத்திறவங்களின்ரை கையில விழுறதையும், விவரணப் படமும், சினிமாப்படமும் கலந்த ஒரு பாணியில எடுத்திருக்கினம். பார்க்கிற ஒவ்வொருத்தருக்கும் சமூகப் பொறுப்பை உணர்த்தக்கூடின இந்தப் படத்தை ஒரு பெண்தான் இயக்கி இருக்கிறா ஆனா ஒரு வெக்கக்கேடு இந்தியாவின்ர ஒரு பிரச்சினையைச் சொல்லிற, இந்தப் படத்துக்கு தயாரிப்புச் செலவை ஏற்கிறதுக்கு ஒருதரும் முன்வராததால, இந்தியாவில இருக்கிற டென்மார்க் தூதரகம்தான் முழுச் செலவையும் ஏற்றிருக்கு. அந்தப் பிள்ளையைக் கொடுமைப்படுத்தி வேலை வாங்கிற அந்த மாமிக்காரியை ஏறிமிதிக்கோணும் மாதிரி ஆத்திரம் வரும். அப்ப அந்தப்படத்தையும் பார்த்துக் கனகாலம். ஒருக்கால் திருப்பிப் பார்ப்போம் எண்டிட்டு அவரிட்டக் கேட்டன், "தம்பி! அப்ப 'குட்டி' எடுக்கலாமோ?" என்னவோ தெரியாது, இருந்தாப்போல அவற்றை முகம் பயங்கரமாகச் சிவந்து கொண்டு வந்திச்சு. எல்லா விரலையும் மடிச்சு, சுட்டு விரலை என்ர மூக்கு மட்டும் நீட்டி "ஏய்! நான் இஞ்ச வீடியோக் கடை நடத்திறன். வயசுக்கு மரியாதை தந்து கை வைக்காமல் விடிறன். எனக்கு வர்ற அழலுக்கு...... சே....," பல்லைக்கடிச்சபடி சொன்னார். எனக்கு ஒரே சங்கடமாய்ப் போச்சு அங்கை நிண்ட சனமெல்லாம் என்னை ஒரு மாதிரிப் பார்த்தினம். "தம்பி! இல்லை எண்டால் சொல்லுமன். நான் வேற இடத்தில விசாரிக்கிறன். அதை விட்டிட்டு ஏன் உப்பிடி ஆத்திரப்படிறீர்?" "என்ன! ஏன் ஆத்திரப்படிறனோ? ஆ....செருப்பு இல்லையெண்டெல்லே சொன்னனான். ஆனால், இப்ப ...றன்.....!" கண்மூடித்திறக்கிற ...க்குள்ளை ஏதோ நடக்க முன்னம் அங்கை சனம் கூடி ஒரு மாதிரி இடையில புகுந்து விசாரிக்கத் தொடங்கின நேரம் தான், எனக்கே பிரச்சினை விளங்கிச்சு. "தம்பி! அது நாசர் நடிச்ச சின்னப் பிள்ளையள் பற்றின ஒரு நல்ல படம். நீர் என்னைத் தப்பா விளங்கிக்கொண்டிட்டீர்." அவருக்கு தான் அவசரப்பட்டு விட்ட பிழை விளங்க, கூனிக் குறுகி என்னட்டை மன்னிப்புக் கேட்டார் என்னை இருத்திவைச்சு, தேத்தண்ணியும் தந்து ஆறுதலாக் கதைச்சார். தன்னட்ட நான் கேட்ட 2 படங்களும் இல்லை, தான் அப்பிடிக் கேள்விப்படவும் இல்லை எண்டு, திரும்பத் திரும்ப மன்னிப்புக் கேட்டார். "தம்பி! உண்மையிலேயே பிழையான ஒரு நோக்கத்தில நான் வந்து ஏதாவது கேட்டிருந்தால், உமக்கு உப்பிடிப்பட்ட ஆவேசம் வர வேண்...து அவசியம் தான். ஆனாலும், நீர் கொஞ்சம் அவசரப்பட்டிட்டீர். கொஞ்சம் தவறியிருந்தால், நான் அம்போ தான்!" தம்பி! எங்கட நாட்டு 'அம்மா நலமா'? "படம் இருக்கிதோ? " "அப்பு! ஓ....நல்ல படம் அது நான் வேற ஒரு ஆளிட்ட எடுத்துப்பார்த்தனான். வேணுமெண்டால் இரவல் வாங்கித் தாறன். உங்களுக்கு இல்லாத உதவியே!" அவர் குழைஞ்சு போய் குளிரப் பேசினார். "இல்லைத்தம்பி! யாழ்ப்பாணத்தில போய் நிண்ட நேரம், ஆக்கள் விசாரிச்சவை. அதுதான் ஒண்டை வாங்கிக் குடுத்து விடலாம் எண்டுதான்!" வேற ஒரு கடையின்ர இடத்தைச் சொல்லிச் சொன்னார், அங்கை கட்டாயம் இருக்குமெண்டு.

நம்பிக்கையோட அங்கை போய் விசாரிச்சால், அங்கையும் எல்லாம் இந்தியாப்படங்கள்தான் குவிஞ்சு கிடக்கிது. 'அம்மா நலமா?' இல்லையாம் 'செருப்பு' 'குட்டி' யும் இல்லை. "சரி தம்பி, நான் நிதர்சனத்தில வேண்டுறன்!" எண்டு சொல்லிப் போட்டு வந்திட்டன். பாருங்கோ ஒரு அரைக்கிலோ மீற்றர் தூரத்துக்குள்ளை எத்தினை வீடியோக்கடையள் கிடக்கு, ஆனால் எங்கட நாட்டுப் படத்துக்கு, நிதர்சனத்துக்கு சைக்கிள் உழக்கவேண்டிக்கிடக்கு.

ஏதோ என்ர தலை தப்பினது பெரிய விசயம். இப்ப எல்லாத்தையும் இரட்டை அர்த்தங்களோட (?) சொல்லுற படங்கள் வர்றதால, நல்லதுக்குக் காலமில்லை. அதில்லைப் பாருங்கோ, உண்மையிலேயே குப்பை கூளங்களை கோவில், குளம் எண்டு ஏதோ ஒரு கௌரவமான தலைப்பைப் போட்டு சனங்களுக்கிள்ளை தள்ளிற வியாபார நோக்கம்தான் எல்லா இடமும் பரவிக்கிடக்கு. பொறுப்பான ஊடகத்துறையளில இருக்கிற ஆக்களுக்குக் கூட, உதுகளைப் பற்றி நாங்கள் விமர்சிச்சால் மூக்குக்கு மேல கோவம் வருகிது. அங்கிங்கெனாதபடி எங்கும் பரவியிருக்கிற இந்த அதீத அபிமானத்தை என்னெண்டு சொல்லிறது!

இந்தக் காலத்தில உதுகளைப் பற்றி விபரம் தெரியாட்டியும் கன பிரச்சினையளைச் சந்திக்க வேண்டிக் கிடக்கு. நான் வீட்டில இருக்கேக்கிள்ளை புலிகளின் குரல் 8மணிக்கு முடிஞ்சாலும், ஏதாவது சத்தம் கேட்டபடியே இருக்கோணும் எண்டிட்டு FM இல ஏதாவதொரு நிலையத்தைப் பிடிச்சு விடிறனான். இடைக்கிடை இருந்துவிட்டு அதில போற ஒரு கோதாரியும் விளங்காது. ஏதோ மீற்றர் மாறுப்பட்டிட்டோ எண்டு பார்த்தால், அதெல்லாம் சரியாத்தான் இருக்கும். எனக்குத்தான் அந்த நவீன தமிழ் (?) பாடல்களை கிரகிச்சுக் கொள்ளிற அளவுக்கு விளக்கம் காணாது. நான் விளக்கம் இல்லாமல் சும்மா பிராக்குக்காகப் போட்ட பாட்டுக்கள், பெரிய பிரச்சினையளைக் கொண்டு வந்திட்டிது. பக்கத்து வீட்டுப் பவளம் ஆச்சியை உங்களுக்கும் சில நேரம் தெரிஞ்சிருக்கும். என்னை விட பதினைஞ்சு வயசு மூப்பு. தான் ஒழுங்கையால போகவரேக்கிள்ளை என்ர போக்குவாக்குச் சரியில்லை, பிழையான பாட்டெல்லாம் போடுறன், எண்டு அந்த மனிசி என்ர வீட்டில பத்தி வைச்சிட்டிது. சத்தியமாப் பாருங்கோ உந்தப்பாட்டுக்கள் கனக்க எனக்கு விளங்கிறேல்லை. அதிலையும் உந்தப்பாட்டுக்களை தொலைபேசி வழியா விரும்பிக் கேக்கிறது கூடுதலா இளைய நேயர்கள் தான்! நான் இண்டைக்கு இருப்பன், நாளைக்கு செத்துப்போவன். ஆனால், நீங்கள் வாழவேண்டிய வயசு. எதையும் யோசிச்சுச் செய்யோணும்! இல்லாட்டி அநாகரிகமான பகிடிவதையள் அதிகரிச்சு, தமிழ்நாட்டில நடக்கிற மாதிரி இங்கையும் 'ஈவ் ரீசிங்' கூடி தற்கொலையள் செய்து கொள்ளிறது அதிகரிக்கத் தொடங்கிடும். கழுத்துக்கு சுருக்குக் கயிறு கட்டிற மாதிரி காரியங்களை நாங்கள் அன்றாடம் செய்து கொண்டு, வெறுமனே கையில காப்புக்கயிறு கட்டினால் தப்பிவிடலாம் எண்டு நினைக்கக் கூடாது. 'செம்மொழி' அங்கீகாரம் கொடுத்தால் மட்டும் போதாது, செம்மறியளும் திருந்தோணும்!

இதுகள் பத்தாதெண்டு இந்தியாவில தங்கியிருந்த எங்கட நாட்டுக்காரர் ஒருத்தர் இலங்கையை மையமா வைச்சு பக்திப்படம் ஒண்டு எடுக்கப்போறாராம். ஈழத்து மகிமையளைக் கருவாக்கொண்டு அவர் எடுக்கப்போற படத்தின்ர 5 கோடி செலவை, இறைபக்தர்கள் முன்வந்து ஏற்கலாமாம். துன்பத்தில அவதிப்படிற சனங்களின்ரை நப்பாசையளைப்பயன்படுத்தி ஏன்தான் உப்பிடி எரியிற வீட்டில கொள்ளை அடிக்கிறாங்களோ! நாகர்கோவிலில கூட்டி அள்ளின எங்கட குஞ்சுகளின்ர நினைவுநாள் இப்பதான் வந்து போனது நாங்கள் மறக்கேல்லை. உவங்களுக்கு நாங்கள் தானே ஏதோ பொரிச்ச மீன் மாதிரி அகப்பட்டோம்! இன்னுமொருத்தன் தன்ர படத்தில வர்ற வில்லன் அரசியல்வாதிக்கு செல்வநாயகம் எண்டு பேர் வைக்கிறான். வேற ஒருத்தன் எங்கட கிட்டு மாதிரி ஒருத்தரைப் போட்டு போராட்டத்தை தங்கட குப்பைப்படத்தில விமர்சிக்கிறான். ஏன் உந்த அநியாயப் புத்தி உவங்களுக்கு!

வேண்டாம் நான் உதுகளைப்பற்றிச் சொல்லமாட்டன் சூடு, சுரணை எண்டிறது சொல்லி வாறதில்லை, தானா வரோணும்!

**அநாகரிகமான பகிடிவதையள் அதிகரிச்சு, தமிழ்நாட்டில நடக்கிற மாதிரி இங்கையும் 'ஈவ் ரீசிங்' கூடி தற்கொலையள் செய்து கொள்ளுறது அதிகரிக்கத் தொடங்கிடும். கழுத்துக்கு சுருக்குக் கயிறு கட்டிற மாதிரி காரியங்களை நாங்கள் அன்றாடம் செய்து கொண்டு, வெறுமனே கையில காப்புக்கயிறு கட்டினால் தப்பிவிடலாம் எண்டு நினைக்கக் கூடாது. 'செம்மொழி' அங்கீகாரம் கொடுத்தால் மட்டும் போதாது, செம்மறியளும் திருந்தோணும்!**

# நேற்றிருந்தோம் அந்த ஊரினிலே

கைவிடப்பட்டு, கூரையில்லாமல் மழையில் கரைந்த பிறகும் மிஞ்சியிருக்கிற மண்சுவர்கள். அரித்தோடிகளாகவும் ஒற்றையடிப் பாதைகளாகவும் மாறிவிட்ட வீதிகள் அவற்றில் படுத்துறங்குகின்ற மாடுகள். ஆட்கள் அருகிப்போன கடைத் தெருக்கள். உடைந்துபோன பாலங்கள். புல்மண்டிய வளவுகள்.

இப்போது இப்படித்தானிருக்கின்றன மல்லாவியும், அக்கராயன்



- ஸ்கந்தபுரமும், வன்னேரியும், ஐயங்கன்குளமும், புத்துவெட்டுவானும், ஜெயபுரமும், கோட்டைகட்டி, அம்பலப்பெருமாளும், வவுனிக்குளமும்.

கைவிடப்பட்ட ஊர்களாக, பாழடைந்த கிராமங்களாக, யாரும் கவனிக்காத இடங்களாக, எல்லோராலும் மறந்துபோன பகுதிகளாக இவையாகிவிட்டன.

சத்ஜெயவின் நாட்களில், ரிவிரசவின் நாட்களில், ரணகோஷவின் நாட்களில், எடிபலவின் நாட்களில், ஜெயசிக்குறுவின் நாட்களிலெல்லாம் சரணாலயங்களாக எங்களைக் காப்பாற்றிய கிராமங்கள் இன்று கைவிடப்பட்டு அநாதரவாகக் கிடக்கின்றன.

நகரங்களிலிருந்து, பட்டினங்களிலிருந்து, நாங்கள் வாழ்ந்து வந்த ஊர்களிலிருந்தெல்லாம் இடம்பெயர்ந்தோடிப்போனபோது எங்களுக்கு மடிதந்தவை இந்த ஊர்கள்.

அப்போதிவை அமைதியாக இருந்தன. தன்னடக்கமாகவும் அழகாகவும் இருந்தன. இடம்பெயரிகளால் இவை நிரம்பியபோது திடீரென வீங்கத்தொடங்கின அளவற்ற வீக்கம்.

எல்லா வளவுகளிலும் சனங்கள். ஒவ்வொருவளவிலும் நான்கைந்துவீடுகள். கிணற்றடியில் கூட்டம். குளிக்கும் வாய்க்காலில் கூட்டம், குளத்தில் கூட்டம், வீதிகள் சனங்களால் நிரம்பியிருந்தன. சந்தைகளில் நெருக்கடி, சிறுசிறு கட்டடங்கள் என்றபோதும் அவற்றில்தான் எல்லா நிர்வாக இயக்கமும் நிகழவேண்டியிருந்தது. இந்தப் பள்ளிகளில்தான் எத்தனை ஆயிரம் பிள்ளைகளும் படித்தார்கள்.

இப்போது நம்பமுடிகிறதா இதெல்லாவற்றையும்? மீண்டும் முன்னர் இருந்ததைவிடவும் மோசமாக உருக்குலைந்துகிடக்கின்றன இந்த இடங்கள்.

ஒருவாரத்தில் பட்டினமாகியவை, சிறுநகரமாகியவை ஒரேயடியாக வடிந்துவிட்டன, மண்ணாற் கட்டிய வீடுகளை, மண்ணாற்கட்டிய கடைகளை, மண்பட்டினங்களை விட்டு எல்லோரும் மீளக்குடியேறிகளாக தங்கள் ஊர்களுக்கும் வீடுகளுக்கும் திரும்பியபோது இந்தக் கிராமங்கள் கைவிடப்படலாயின. சரணாலயங்களாக எம்மைப் போசித்த இந்த இடங்கள் வெறுமனே பாழடைந்துபோயிருப்பதன் பின்னணியென்ன? நாங்கள் அந்தரித்தபோது அரவணைத்து, ஆதரவளித்து, ஆறுதலளித்து மடிவிரித்த தாய்மடிகள் இன்று வெம்மைதகிக்க கிடப்பதென்ன?

அங்கெல்லாம் போயிருந்தபோது கடைகளைக்கட்டினோம், வீடுகளைப்போட்டோம். வளவுகளைப் பெருக்கினோம், சந்தையில் கூடினோம். வீதிகளில் நிரம்பினோம். பிறகு, ஒரேயடியாக எல்லாவற்றையும் விட்டுவிட்டு வந்துவிட்டோம். அப்படியும் சொல்லமுடியாது, அங்கிருந்தெல்லாம் வெளியேறும்போது மண்ணாலான சுவர்களைத்தவிர மற்றதெல்லாவற்றையும் ஒன்றும்விடாமல் பெயர்த்துக்கொண்டு வந்துவிட்டோம்.

**வெளிவாசல்பாலன்**

அப்படியும் மிஞ்சிவிடப்பட்டவை, பிடிபடாமல் நின்ற நாய்கள், பூனைகள் மட்டும்தான். வேறெதை விட்டுவந்தோம். புதிதாக வைத்த கோவில்களை விட்டுப்போனார்கள் சிலர். இருந்த கோவில்களை பெருப்பித்துவிட்டுப்பெயர்ந்தார்கள் சிலர். விரதம், நோன்பு அது இது என்று புதிதாகப் பலவற்றை அறிமுகப்படுத்தி விட்டுப்போனார்கள் வேறு சிலர். சில புதிய பழக்கவழக்கங்களை, மிதப்புக்குணங்களை விட்டுப்போனார்கள் இன்னுஞ்சிலர்.

எல்லோரும் போனபிறகு, விட்டுப்போனவைகளோடு கிடந்து மல்லாடவேண்டிய விதியோடு நாளும் அவதியுறுகின்றன அன்றைய சரணாலயங்கள்.

ஒவ்வொரு ஊர்களிலும் திருவிழாக்காலம்போல சனங்கள் கூடியிருந்த அந்த நாட்களை எப்படித்தான் மறக்கமுடியும்? எவரால்தான் நினைக்காமலிருக்கமுடியும்?

நுளம்புக்கடி, பாம்புப்பயம், தண்ணீர்ப்பிரச்சினை, வீட்டுவசதிக் குறைவு, உழைப்பும் வருமானமும் இல்லாதநிலை என்றெல்லாம் கஷ்டங்கள் இருந்தபோதும் திருவிழாக் காலம்போல அந்நாட்களில் ஒரு ஒட்டுறவிருந்தது; மகிழ்விருந்தது. அகதிவாழ்க்கையிலும் ஒரு கூட்டுணர்வு.

தினமும் இழப்புகளும் நெருக்குவாரங்களும் என்றபோதும் உயிர்ப்பிருந்த நாட்கள் அவை.

இன்று பலர் எல்லாவற்றையும் மறந்துவிட்டார்கள் போலத் தெரிகிறது. அன்றைய நாட்களும் இந்த ஊர்களும் ஞாபகத்திலிருந்தால் இன்று இவற்றை இப்படி அழிந்துபோக விட்டிருப்போமா?

இன்றைய சமாதான உடன்படிக்கை நாட்களின் சிறு கண்மலர்வு கூட இந்த ஊர்களுக்குக் கிட்டியதாகச் சொல்லமுடியாது. அப்படிக் கிட்டியிருந்தால் இந்த வீதிகள் ஒற்றையடிப்பாதையாகச் சுருங்கியிருக்குமா? சந்தையிலும் கடைத் தெருவிலும் மாடுகள் படுத்துறங்குமா?

உடைந்தபாலங்கள் உயிர்குடிக்கும் பொறிகள்போல இன்னும் மிஞ்சியிருக்குமா? நிர்வாக இயங்கு மையங்களாக நின்ற சிறு கட்டடங்கள் எல்லாம் சிலந்தியும் வௌவாலும் குடியிருக்கும் மடங்கள் போலாகியிருக்குமா? பள்ளிகளில் படிப்பிப்பதற்கு போதிய ஆசிரியர்களும் இல்லாமல் போயிருக்குமா? ஆஸ்பத்திரிக்கு சாட்டுக்கு ஒரேயொரு மருத்துவர் மட்டும் மிஞ்சியிருப்பாரா?

நன்றியுணர்ச்சி கொஞ்சமும் இல்லாதபெரிய மனிதர்களாகிவிட்டோம் நாமெல்லாம்.

அந்த ஊர்களும் நமது ஊர்கள்தான் என்ற எண்ணம் இல்லாமற்போனதேன்? ஏதோ இருக்குமட்டும் இருந்தோம், இனியென்ன; என்று நினைக்கிறோமா? அப்படியாயின் அதுதவறு; மகா தவறு.

நாளை மீண்டும் யுத்தம் வந்தாலும் வரலாம். முடிவற்று நீறாகிற இனப்பிரச்சினை யுத்தத்தைத்தவிர வேறெதைத் தரமுடியும்? தீர்வின் எந்த முனையிலும் தீண்டத்தயங்குகிற சிங்களத்தரப்பு எவ்வாறு அமைதியை நிரந்தரமாக உருவாக்கமுன்வரும்?

இன்று நிலவுகின்ற பேச்சுவார்த்தை இழுபறியும் சிங்களத்தரப்பின் சாட்டுகளும் பின்னடிப்புகளும் யுத்தத்தை மறைமுகமாக உருவாக்கும் முயற்சிகளின்றி வேறென்ன?

சரி, எப்படியோ ஒரு கட்டத்தில் மீண்டும் ஒரு இடப்பெயர்வைச் சந்திக்கநேர்ந்தால் இந்த ஊர்களுக்கு எந்த முகத்துடன் போவோம்?

இடப்பெயர்வுதான் வேண்டாம். சாதாரணமாக அந்த ஊர்களுக்குப்போகும்போது எப்படி இவை இருக்கின்ற பாராமுக நிலையைக் கண்டு சகிப்பது?

"எல்லாவற்றையும் மறந்து போய்விட்டீர்களே" என்கிறார்கள் இங்குள்ளசிலர்.

"எங்களை விட்டுப் போனவுடன் எல்லாவற்றையும் மறந்துவிட்டீர்களே" என்கிறார்கள் வேறு சிலர்.

அவர்களின் இந்தப் பேச்சினுள்ளே ஆதங்கம் தொனிக்கிறது. ஏமாற்றம் தெரிகிறது. தம்மை மறந்துவிட்டோம் என்று அவர்கள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுத் தெரிகிறது.

எல்லோரும் கூடியிருக்கும்போது காடுகளைக்கூட வெட்டித்துப் புரவாக்கி கிராமங்களாக்கியிருந்தோம். சில இடங்களில் புதிய பாதைகள் கூடப் போடப்பட்டன. இப்போது இந்த பழையபாதைகளே பாழடைந்துவிட்டன.

எல்லோரும் ஒன்றாகக் கூடியிருந்துவிட்டு, பிறகு ஒருவரைத் தனியே விட்டுவிட்டு மற்றெல்லோரும் போனால் எப்படி வெறுமையும் தனிமையும் தாக்குமோ அப்படித்தான் தாக்குகிறது இந்தமனிதர்களுக்கு இப்போதுள்ள அனுபவம்.

இவை ஒருபுறமிருக்கட்டும். மறுபக்கத்தில் புதிய நகர்களில் எல்லாவற்றையும் குவிக்கிறோம். நிர்வாக மையங்கள், பொது சனத்தொடர்பகங்கள், ஆஸ்பத்திரி தொடக்கம் நீர்ப்பாசன அலுவலகம் வரையில் எல்லாமும் நகரில் குவிக்கிறோம். தொழில்துறைகள் முதல் சகலமுதலீடுகளுமே நகரில்தான் மையமாக்கப்படுகின்றன.



யுத்தத்தின் நிழல் முற்றாக நீங்காத ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு எல்லாவற்றையும் ஒரே மையத்தில் குவிப்பது தவறானதாகாதா? ஒரு குண்டுவீச்சில் மிகக்கூடுதலான அழிவை நாம் சந்திக்கவேண்டியேற்படாதா? ஒரு இடப்பெயர்வு என்றாலும் கூட பல்லாயிரக்கணக்கான சொத்திழப்பும் அயிரக்கணக்கான மனித அவலமும் நிகழாதா? இதெல்லாம் இலகுவாகவே எதிரிக்கு சாதகமானதாக மாறிவிடுமே.

பதிலாக நாங்கள் எல்லா ஊர்களிலும் சகலதையும் பரவலாக்கினால் எந்த அழிவிலிருந்தும் எம்மை பாதுகாக்கலாம். அழிவோ, சிதைவோ, சேதமோ குறைவாகவும் இருக்கும். எல்லா ஊர்களும் வளமாகியிருக்கும். அவலமும் குறையும்.

நகர்மயப்படும்போது நகருக்குரிய கட்டுமானங்களில் சகலதும் வரும். அப்படிவரும்போது சனத்தொகையும் அதற்கேற்ப கூடும். சனத்தொகைகூடக்கூட வசதிப்படுத்தல், அத்தியாவசியதேவைகளுக்கான கட்டுமானங்கள் எல்லாமும் விரிவடையும். அதுவொரு இயல்பு; ஒன்றையொன்று சார்ந்திருக்கும் இயல்பு.

ஆனால், யுத்தத்தை எதிர்கொள்கின்ற சமூகமொன்று முடிந்தவரையில் நகர்மயப்படுவதிலிருந்து தவிர்க்கப்படுவதே சிறப்பு. நகர்மயப்படும்போது நகரத்தின் அவசரமும் மினுக்கமும் தவிர்க்கவியலாதபடி ஒவ்வொருவரையும் தொற்றிக் கொள்ளும்.

மத்தியதரவர்க்க பூர்சுவாச் சிந்தனையும் அதன் அபிலாசைகளும் நகரின் பிரதான குணாம்சம். மேற் கட்டுமானத்தை நோக்கிய போட்டியில் மற்றெல்லாவற்றையும் சிறியதாக்கிவிடுகிற அபாயம் நகரில் உண்டு. நகரில் கிடைக்கிற அனுகூலங்களும் பலவுண்டு. அதேயளவுக்கு பிரதிகூலங்களும் உண்டு.

நகரத்தின் பிரம்மாண்டம் எவ்வளவுக்கிருக்கிறதோ அவ்வளவுக்கு அதன் குப்பைத்தொட்டியும் பெரியதாயிருக்கும் என்று சொல்வார்கள்.

ஒருபக்கத்தில் பாராமுகமாகவும் ஒர வஞ்சனையாகவும் பல ஊர்களையும் இடங்களையும் ஒதுக்கிவிட்டு எல்லாவற்றையும் குவியப்படுத்துகிறோம். மறுபக்கத்தில் அந்தக்கிராமங்களும் அந்தமனிதர்களும் நாளாந்தம் நெருக்கடிக்கும் போதாமைக்கும் முகம்கொடுத்தபடியிருக்கிறார்கள்.

கிளிநொச்சியில் எட்டு வங்கிகளிருக்கின்றன. கல்விக்கு பல முறைகளும் ஏற்பாடுகளுமிருக்கின்றன. எல்லா வாய்ப்புகளும் வசதிகளுமிருக்கின்றன. அதில் பத்தில் ஒரு பங்குகூட அக்கராயனில் இப்போதில்லை. வன்னேரியில் இல்லை. மல்லாவியில் இல்லை. ஜெயபுரத்தில் இல்லை. கோட்டைகட்டி, அம்பலப்பெருமாள், பூநகரியில் இல்லை.

எல்லோரும் நகருக்குத்தான் வரவேணும். நகரோ மினுங்கியபடி வழவழப்பாக ஒரு பாம்புபோல நீண்டு கிடக்கிறது.



# பெண்களின் விடுதலை தொடர்பாக சமூக விழிப்புநிலை உருவாகவேண்டும்



வீட்டுக்குள் அடுப்படியில் அடங்கிக் கிடந்த தமிழ்ப் பெண் இன்று ஆயுதம் ஏந்திப் போராடுகின்ற நிலை வந்திருக்கும் போது கூட எமது தாயகத்தில் இன்னமும் பெண் விடுதலை முழுமையாக எட்டப்படவில்லை. விடுதலைக்கான பாதைகள் திறந்து விடப பட்டுள்ளன. அதற்கான பயணங்களும் தொடர்கின்றன. எனினும் பெண்விடுதலை என்பது இன்னமும் முழுமை பெற்று விட்டதாக இல்லை.

இப்போது கூட உங்களில் பலர் பெண்கள் விடுதலை பெற்றுவிட்டார்கள் என்று கருதலாம். பெண்கள் எங்கே அடிமையாக இருக் கிறார்கள் என்று கேள்வி எழுப்பலாம். ஆண்களல்லவா அடிமையாக இருக் கிறார்கள் என்று கேலி பேசலாம். அவர் கள் ஆயுதமேந்திப் போராடுகிறார்கள், கனரக வாகனங்களைச் செலுத்து கிறார்கள். கடலில் காவியம்படைக்கிறார் கள். எங்கும் சுதந்திரமாகத்தானே திரி கிறார்கள் என்று பிரமிப்புடனான சிந்தனை ஓடலாம். இவ்வளவு முன்னேறிவிட்டார்கள். உத்தியோகத்திலும் பெரும் எண்ணிக் கையில் வந்துவிட்டார்கள். இன்னுமா இவர்களுக்குத் திருப்தியில்லை என்று எரிச்சல் ஏற்படலாம். சர்வதேச மகளிர் தினம் போதாதென்று, தாயக மகளிர் தினம் கொண்டாடுகிறார்களே என்று கேள்வி எழலாம்.

இத்தகைய எண்ணங் கொண்டவர்களே! உங்கள் மூளையைச்சலவை செய்துவிட்டு ஒரு கணம் சிந்தியுங்கள். பெண்ணுக்கு எங்கே விடுதலை பூரணமாகக் கிடைத்து விட்டது? சீதனம் ஒழிந்ததா? குடும்பச் சுமை குறைந்ததா? அரசியலில் சம இடம் கிடைத்ததா? சுதந்திரமாகச் செயற்பட பெற்றோரும், கணவரும் ஒத்துழைப்பு நல்குகிறார்களா? இல்லையே! உண்மையிலேயே பெண்ணுக்கு இன்னும் முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. தாயக விடுதலை கேட்ட தமிழருக்கு மாவட்ட சபைகளும், மாகாண சபைகளும் கிடைத்தது போன்ற சில சலுகைகள் தான் பெண்ணுக்கும் இங்கு கிடைத்துள்ளது. வெறும் சலுகைகள் மட்டும் வாழ்க்கை இல்லை. அவளது சுயம் பேணப்பட்டு, அவள் தன் எண்ணப்படி இயங்கும் நிலை உருவாகவேண்டும். சுயநிர்ணய உரிமையில்லாத தாயக விடுதலையில் அர்த்தமில்லாதது போலவேதான் இன்றைய பெண்ணின் விடுதலையும்!

மாதராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்யவேண்டும் என்று பாடிவைத்தான் ஒரு கவிஞன். ஆனால் இங்கோ மாதராய்ப் பிறப்பதற்கு என்ன பாவம் செய்தோமோ என எண்ணிப் புழுங்குகின்ற அவல நிலையே உள்ளது.

பெண் இப்படித்தான் வாழவேண்டும் என்று சமூகத்தின் ஆழ்மனதில் பதிய வைக்கப்பட்டுள்ளன. சில எழுதாத சட்டங்கள் இன்னமும் முதன்மைப்படுத்தப்படுகின்றன. இந்த நிலையில் ஏன் எதற்கு என்ற சிந்தனைகள் எதுவுமின்றி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, கற்பு என்று போலித் திரையிட்டு பெண் பின்தள்ளிவைக்கப் படுகிறாள். ஆண்கள் மாத்திரமன்றி பெண்கள் கூட தாம் வீட்டுக்குள் அடங்கி ஒடுங்க வேண்டியவர்கள்தான் என மரபு வழிவந்த சிந்தனைகளைக் கண்மூடித்தனமாகக்கடைப்பிடிக்கின்றனர். புதுயுகப் பெண்களின் புத்தெழுச்சிக்குப்பின்னர் கூட இந்த நிலையில் இன்னும் பல பெண்கள் மாறாமலிருப்பது தான் வேதனைக்குரிய விடயமாகும்.

பெண் விடுதலையின் முதல்படி என்பது பெண் தனது நிலையை உணர்ந்துகொள்ளல் என்பதாகும். அதாவது அவள் அவளாக வாழ அவள் மனதில் தைரியம் வரவேண்டும். அவள் அவளாக வாழ சமூகம் வழி விடவேண்டும்.இவ்வாறான சுயசிந்தனை விழிப்பு சமூகத்தில் ஒவ்வொருவரிடம் எழவேண்டும்.

ஆதிகாலத்தில் தேவை கருதி வீட்டுக்குள் இருந்த பெண்களிடமிருந்து வெளியே சென்று உழைத்து வரும் ஆண் சுகங்களை அனுபவிக்கத் தொடங்கினான். இதனால் கால ஓட்டத்தில் பெண்களை வெறும் சுக போகப்பொருட்களாகக் கருதப்பட ஆரம்பிக்கும் அவலநிலை உருவானது. தொடர்ந்து வந்தகாலங்களில் வீட்டில் பெண் ஒரு அடிமை போல் மாற்றப்பட்டுவிட்டாள். இவ்வாறான வாழ்வு முறைக்கு பெண்களும் இசைவாக்கம் பெற்று விட்டமையினால் தாம் வீட்டுக்குள் முடங்கிப்போயிருக்க வேண்டியவர்கள்தான் என்று பெண்களும் நினைத்துவிட்டார்கள். இதனால் ஆண்கள் பெண்களுக்கு இட்ட விலங்கைவிட, பெண்கள் தாமே தமக்குப் போட்டுக்கொண்ட விலங்கு கடினமானது எனலாம்.

உலகளாவியரீதியில் ஏற்பட்ட பெண்ணியச் சிந்தனைகளைப்பாரதியும் அதன் பின் வந்தவர்களும் எடுத்துரைக்க ஆரம்பித்த பின்னர் தமிழ்ப் பெண்களின் சிந்தனையிலும் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது. எனினும் இச்சிந்தனை பாரிய மாற்றமெதனையும் சமூக மட்டத்தில் செய்யத்தவறிவிட்டது. மூன்று தசாப்தங்களுக்கு முன்னர்கூட எமது கிராமியப்பெண்கள் கிடுகு வேலிகளுக்குள் வீட்டில் அடைக்கப்பட்டிருந்தமையை உங்களில் பலர் அறிவீர்கள். தெருவில் சைக்கிள் ஓடும் பெண்களைக்காணமுடியாது. அப்படி யாராவது ஓடினால் கூட விநோதமாகவும் ஒரு வித அருவருப்புடனும்தான் பார்க்கப் பட்டாள்.

தாயக விடுதலைப்போர் முனைப்புப் பெற ஆரம்பித்த காலத்தில்கூட பெண்கள் போருக்கு லாயக்கற்றவர்கள் என்ற கருத்தோட்டம் நிலவியது. எனினும் விழிப்படைந்த பெண்களின் தாயக விடுதலை உணர்வு அவர்களைப் போராட்டத்தில் இணையவைத்தது. இவ்வாறு போராடப்புறப்பட்ட விடுதலைப்புலிகள் மகளிர் அணியிலிருந்து புயலெனப்புறப்பட்டு முதலாவதாக வீரமரணத்தைத்தழுவிக்கொண்ட மாவீராங்கனையின் நினைவு நாளையே, தாயகத்தில் மகளிர் தினமாகப் பெரும் எழுச்சியுடன் கடந்த சில வருடங்களாகக் கொண்டாடி வருகிறோம்.

சிந்தித்து விழிப்படைந்து செயற்படத் தொடங்கிய பெண்களின் இன்றைய சுதந்திர உணர்வு ஆணாதிக்க சிந்தனையாளர்களுக்கும் சில ஆண்களுக்கும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளமையே இன்றைய சில குடும்பப் பிரச்சினைகளுக்கும் வித்திட்டுள்ளது. சம அந்தஸ்தை நோக்கிய பெண்களின் நிலைப்பாட்டை பண்பாட்டுப்போலிகளில் ஊறியவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியாமலிருக்கிறது. எனினும் நாம் அனைவரும் ஆழமாகச் சிந்தித்தால் இந்த பெண்ணியச்சிந்தனைகளை விளங்கிக்கொண்டு ஒத்துழைக்க முடியும். பெண்ணை இரண்டாந்தரப்பிரஜையாக எண்ணுதலும் அவளை அடிமைப்படுத்துவதும் அர்த்தமற்ற செயல்கள்தான் என்பது புரியும்.

போர் தணிந்து விடுதலைத்தீர்வு முனைப்புப்பெற்றிருக்கும் இந்தக் காலகட்டத்தில் தாயக விடுதலையுடன் பெண் விடுதலையும் எட்டப்பட வேண்டும் என்று தாயக தலைமையும் விருப்புடன் செயற்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அதிகரித்துவரும் மகளிருக்கான உரிமைகள் தொடர்பாகவும் அவற்றின் தேவை கருதியும், அதன் உறுதிப்பாட்டை முன்னெடுக்கும் வகையிலும் பெண்களுக்கு எதிரான அனைத்துப்பாரபட்சமான பாகுபாடுகளை இல்லாதொழிக்கும் பொருட்டும் மகளிர் அரசியல் துறையினர் பல செயற்பாட்டுத்திட்டங்களை அமுல்படுத்துகின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு பெண்ணும் தமது உரிமைகளைத் தெளிவாக இனம் கண்டுகொண்டு அதற்கான நிலையில் வாழ முயற்சிக்க வேண்டும். மனித உரிமைகள் என்ற அம்சத்தில் மகளிர் உரிமையும் இன்று சர்வதேச சமூகத்தால் உள்ளடக்கப்பட்டுள்ளது. அடிப்படை மகளிர் உரிமைகள் மீதுள்ள நம்பிக்கையை உறுதிசெய்தல், சுயத்தை உணரலும் மதித்தலும், ஆண் பெண் சமஉரிமைகளை இனங்கண்டு ஏற்று நடத்தல் இவற்றை எல்லாம் எவ்வாறு அடையலாம் என்று தெளிவு பெற்று செயற்படல் என்பன இன்றைய பெண் விடுதலைப்பயணத்தின் கால் கோள்களாகும்.

ஓலைச்சுவடியிலும் கல் வெட்டுக்க ளிலும் எழுதிய நாம் இன்று கண னியில் எழுதுகிறோம். புறாவைத் தூதுவிட்ட நாம் இன்று மின் அஞ்சலில் ஆயிரக்கணக்கான மைல்களை அரை நொடியில் கடந்து எழுத்து மூலம் தகவல் சொல்கிறோம். உலகில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்பதை அனைவரும் உணர்ந்து கொண்டு பெண்ணியச் சிந்தனைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும்.

ஆண்களுக்குள்ள சமூக, பொருளாதார, கலாசார,குடியியல், அரசியல் உரிமைகளடங்கிய மனித உரிமைகள் யாவும் பெண்களுக்கும் சம அளவில் இருக்கவேண்டும். மகளிர் எதிர்நோக்கும் நியாயமின்மை, சமத்துவமின்மை என்பவற்றை வெறும் பிரமாணங்களினாலும், சட்டங்களினாலும் மட்டும் எட்டிவிடமுடியாது. இன்றும் கூட மகளிரை வாணிபப்பொருளாக்குவதையும் வீட்டு வேலைக்காரி ஆயா போலக் கணிப்பதையும் தரிசிக்க முடிகிறது. கற்றல், வேலை பார்த்தல் உரிமைகளில் கூட சமத்துவமின்மை நிலவுகிறது. ஊதியத்திலும் பேதம் இருக்கிறது. சட்டத்தில் சமத்துவம் இயற்றப்படுவது அவசியமாகிறது. சீதனப்பேய் ஒழியாதவரை எமது தாயகத்தில் பெண் விடுதலை ஏற்படப்போவதில்லை.

**சந்திரகாந்தா முருகானந்தன்**



# எவரெஸ்ட் ஏறுவாரா அடம் கில்கிறிஸ்ட்

அவுஸ்திரேலிய-இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட்போட்டி தற்போது பெங்களூரில் நடைபெற்று வருகின்றது.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தளவில் இத் தொடர் மிக முக்கியமான தொடர் ஆகும். காரணம் இந்திய மண்ணில் அது நீண்ட காலமாக டெஸ்ட் தொடர் ஒன்றைக் கைப்பற்றாததாகும். அன்றியும் கடந்த வருடம் தனது மண்ணிலும் இந்தியாவை வீழ்த்த முடியாமல் போனமையும் ஆகும். ஆகவே அவுஸ்திரேலிய வீரர்களின் நோக்கத்தின் உண்மை நிலை விளங்கும்.



உலகச் சம்பியனான அவுஸ்திரேலிய அணி ஆரம்ப காலம் முதல் டெஸ்ட் போட்டிகளில் கட்டுப்படுத்தியே வைத்துள்ளது. அதன் கிரிக்கெட் டெஸ்ட் வரலாற்றில் இந்தியாவுடன் பங்கு பற்றிய 30 தொடர்களில் 16 போட்டிகளை வென்றுள்ளது. எனினும் பெரும்பாலும் இந்திய மண்ணில் அவ்வணி 95 வீதம் தோல்வியையே சந்தித்துள்ளது. ஆகவே இந்தத் தொடர் அவுஸ்திரேலியாவுக்கு முக்கிய போட்டித் தொடராகும். இத்தொடரை கைப்பற்றுமிடத்து அணியை வழிநடத்தும் நட்சத்திர வீரர் அடம் கில் கிறிஸ்டின் புகழும் எவரெஸ்ட்டைத் தொடலாம். எனினும் அவர்களின் கனவை இந்திய வீரர்கள் சிதறடித்து விடுவார்களா என்றால் இந்திய அணியின் அண்மைக்கால செயற்பாடுகளை நோக்கும் போது சந்தேகமே தோன்றுகிறது.

இந்திய அணியைப் பொறுத்த வரை முன்னைய டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் லகஷ்மன், ராவிட் ஆகியோரின் பங்களிப்பே சற்று ரசிக்கக் கூடியதாக காணப்பட்டது. ஆயினும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைப் பெறும் செவாக் ஓரிரு போட்டிகளிலேயே திறமையை வெளியிட்டுள்ளார். அதே போன்று பந்து வீச்சிலும் இந்திய அணி மிகவும் பலவீனம் பெற்றுள்ளதாகவே புலப்படுகிறது. மிகச் சிறப்பாக விக்கட்டுக்களை கைப்பற்றும் அனில் கும்ப்ளேயின் துணிச்சல் எங்கு மறைந்ததோ தெரியவில்லை. தற்போது இர்பான் பதான், பாலாஜி போன்றோர் மட்டுமே எதிரணி துடுப்பாட்ட வரிசைக்கு அச்சுறுத்தலாக காணப்படுகின்றனர்.



பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் களத்தடுப்பிலும் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்களின் தேவை இந்திய அணிக்கு தற்போது மிக அவசியமாகிறது. இந்த நிலையில் அவுஸ்திரேலியாவிடம் தொடரின் வெற்றியை தட்டில் வைத்து வழங்குவதை தடுக்க இந்திய அணி கடுமையாக போராட வேண்டும். அதற்காக இளம் வீரர்களை அறிமுகப்படுத்தி திறமையான பங்களிப்பை பெற இந்தியா மாற வேண்டும்.





அண்மைக் காலமாக ஒருநாள் போட்டிகளில்மிகமிக சோர்வடைந்துள்ள இந்திய அணிக்கு இத்தொடர் கைகொடுக்குமா என்பதை கங்குலியின் தலைமைப் பொறுப்பே விடைதரும்.

# குழம்புவாரா பிரையன் லாரா...?

அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்தோ அன்றி கிரிக்கெற்றிலிருந்தோ விடை பெற்றுக் கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்பு லாராவுக்கு இதுவாகத்தான் இருக்க முடியும் என கிரிக்கெற் விமர்சகர்களாலும், முன்னால் வீரர்களாலும் ஆருடம் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி கிரிக்கெட்டில் புதியதொரு பயணத்தை மீண்டும் ஆரம்பிக்க முனையும் மேற்கிந்தியத் தீவுகள் அணியையும் அதன் தலைவர் லாராவையும் அழுத்தத்திற்கு உட்படுத்தி அவ்வணியின் வளர்ச்சியை தடுக்க முனையும் சிலரின் ஆருடமாகவே இது அமையும் எனலாம்.



மேற்படி ஆருடமானது மேற்கிந்தியத் தீவுகள் அணியை எந்த விதத்திலும் பாதித்து விடப்போவதில்லை. ஆனால், தலைவர் தனிநபர் என்றவகையில் லாராவிற்கு சில குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில் கிரிக்கெட்டைப் பொறுத்து அவர்ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரராகவே ரசிகர்கள் மத்தியில் காணப்படுகிறார். அந்த வகையில் துடுப்பாட்டத்தில் உச்சநிலையில் தான் உள்ளார் என்பதும் நிராகரிப்பதற்கில்லை.

தலைவர் என்ற ரீதியில் அவர் எதை சாதித்தார் என்று எழும் கேள்விகளுக்கு அவரால் கூட விடைகாண முடியாதவாறே உள்ளார் எனலாம்.

இந்த வகையில் மேற்படி ஆருடம் அவரை பெரும் குழப்பத்திற்கு உள்ளாக்கி முடிவெடுக்க முடியாத நிலைக்கு தள்ளியிருக்கும் என்பதில் சந்தேகம் கொள்வதற்கில்லை.

இந்த நிலையில் அவரின் முடிவு எந்த வகையில் இருக்கப்போகின்றது என்பதே இன்றைய கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் எழும் பிரதான கேள்வியாக உள்ளது.

லாராவைப் பொறுத்து மினி உலகக்கிண்ண வெற்றிக்கு நாங்கள் தகுதியானவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பில் உள்ளார். அதை நிரூபிக்க இனிவரும் போட்டித் தொடர்களில் எதிரணிகளுக்கு பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தி அதில் வெற்றியையோ அன்றி கௌரவமான தோல்வியையோ ஏற்படுத்த வேண்டிய பொறுப்பானவராகவும் உள்ளார்.

இந்த நிலையில் மேற்படி ஆருடத்திற்கு ஏற்ப ஒரு முடிவை லாரா எடுப்பாரேயானால் அது லாராவால் சவால்களை எதிர்கொள்ள முடியாதவராகவும் மேற்படி வெற்றிக்கு தகுதியற்ற அணியை வழி நடத்திய தலைவராகவுமே அவரைப் பார்க்க வேண்டி ஏற்படும். இந்த அவலம் லாராவுக்கு வேண்டுமா?

சம்பத்

# இந்திய அணிக்கு வோனே ஆபத்து...

இந்திய, அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரை உலகமே ஆவலுடன் பார்க்கிறது. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அவுஸ்திரேலிய உலகச்சம்பியன் அணி என்றாலும், இதற்கு முன் இரு முறை இந்தியா வந்து தோல்விகளையே சந்தித்துத் திரும்பியிருக்கிறது. இந்திய மண்ணில் அந்த அணி சாதிக்க முடியவில்லை. இம்முறை என்ன செய்யப்போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு அனைவரது மனதிலும் எழுந்துள்ளது.



இந்தியாவைப் பொறுத்தவரை, முழுவதும் குணமடையாத பட்சத்தில் சச்சின் விளையாடாமல் இருப்பதே நல்லது. காரணம், அடுத்த சில ஆண்டுகளில் பல முக்கிய தொடர்கள் வரப்போகின்றன. அந்தப் போட்டிகளில் இந்திய அணிக்கு சச்சின் கட்டாயம் தேவை. அனில் கும்ளே, ஹர்பஜன்சிங், இர்பான் பதான், ஷகிர் கான் ஆகியோர் நமது பந்து வீச்சுக்குப் பலம் சேர்ப்பார்கள்.

அவுஸ்திரேலியாவைப் பொறுத்த வரை, இந்தத் தொடரின் வெற்றிவாய்ப்புக் களைத்தீர்மானிக்கப்போகும் வீரர் என்றால், அது ஷேன்வோர்ன். கடந்த பயணங்களில் அவர் சிறப்பாகச் செயற்பட முடியாததை வைத்து, அவரை குறைத்து மதிப்பிட்டால், அது பெரும் பாதகமாக முடிந்துவிடும். அவர் சம்பியன் போலர்.

மெக்ராத், கிலெஸ்பி, கஸ்ப்ரோவிச், பிரெட்லீ என்று தலைசிறந்த போலர்கள் இருந்தாலும், இந்திய ஆடுகளங்களில் விக்கெட் வீழ்த்தக்கூடிய திறன் பெற்றவர் வோன் மட்டுமே.

பெட்டிங், போலிங் என்று அனைத்துத் துறைகளிலும் இரு அணிகளும் சமபலத்துடன் களமிறங்குகின்றன. சமபலம் என்பதாலேயே, இந்திய அணிக்கு ஒரு அறிவுரை. ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்த அவுஸ்திரேலிய அணி முயற்சி செய்யும். அதற்கு மட்டும் இந்திய அணி இடம் கொடுத்து விடக் கூடாது என்கிறார் ரவி சாஸ்திரி.




வன்னி.யாழ் ஊர்தி உரிமையாளர்களின் நீண்டகால கனவை நனவாக்க உங்கள் காலடியில் ஊர்திகளின் அனைத்துப் பணிகளையும் கணனி மயப்படுத்தப்பட்டு பொறியியல் வல்லுநர்களின் பணி உறுதிப்படுத்தலுடன் ஒரே கூரையின் கீழ் செய்துகொள்ள பரந்தன் சந்தியில் புதுப்பொலிவுடன் உதயமாகியுள்ள.

# கோடன் தானியங்கி பொறியியல் நிறுமம்

## KODAN AUTO MOBILE ENGNEERING COMPANY

எம்பணியில் என்றும் நீங்கள் மனம் மகிழ்ந்திட

நாம் வழங்கும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைகள்



- எவ்வகை ஊர்திகளையும் மிகச்சிறந்த முறையில் தூய்மிப்பு செய்யலாம்.
- ஊர்திப்பொறியியல்.
- கீரோ கொண்டா பிறீ சேவிஸ்.
- ஊர்தி வர்ணப்பூச்சு.
- இன்ஜெக்ரர் பம் சேவீஸ்.
- அனைத்து வகையான போறிங் வேலைகளும்.
- கிராங் வெட்டுதல்.
- கடைச்சல்.
- மின்னிணைப்பு.
- வில்லுத்தகடு பொருததுதல்.
- றேடி யேற்றர்.
- ரிங்கர்.
- சீற் தையல் வேலை.

**கணனிமயப்படுத்தப்பட்டபணிகள்**

வீல் எலமன்
வீல் வலன்ஸ்
குளிரூட்டி பொருத்துதல்
சொக்கச் சோபர் ரெஸ்ரர்
ஸ்கானிங் மெசின்
ஏ.ரீ.எவ் சேஞ்சர்
கெற்லைற் செற்றிங்
டிஜிற்றல் முறையில் காற்று சீர்செய்தல்
ரயர் மாற்றுதல்

(சி.10566)

**அனைத்து ஊர்தி உதிரிப்பாகங்களை மிக விரைவில் பெற்றுக்கொள்ள.**

**MITSUBISH, TOYOTA, ISUZU, MAZDA, NISSAN, LEYLAND, TATA, TAFE, MAHENDRA, MF240**

**கட்டட ஒப்பந்தக்காரர்களுக்கான பணிகள்.**

இரும்பிலான அனைத்துக் கூரைவேலைகளும், கிறில், கதவுவேலைகள் கட்டடம் நிர்மானிக்கப்படும் பகுதியில் வந்து பொருத்திக் கொடுக்கப்படும்.

"உங்களது தேவையே எங்களது சேவை"





# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 03

### பகுதி -17

"நான் செய்யும் வேலைக்காக எனக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள்.கொடுக்கும் சக்தி உங்களுக்கு இருக்கிறது. சிலர் கொடுப்பனவுகளை வழங்குகின்றனர், சிலர் கொடுப்பனவுகளை வழங்காத சேவையொன்றை நீங்கள் பெற்றுக கொள்கிறீர்கள் என்று உணர்வாகும் காரணியை இது நீக்கிவிடுகிறது. இந்த முயற்சி யோடு தொடர்புபடுத்தாமல் வழிகாட்டல் மையத்துக்கு பங்களிப்பை வழங்குவது உங்களைப் பொறுத்தது. ஆய்வுகளுக்கு அப்படித்தான் நிதி திரட்டப்படுகிறது"



"அப்படியா" என்றவள் "என்றாலும் .....அதற்கு அப்பாலும் உங்களுக்கு கொடுப்பனவைத் தர நான் தயாராக இருக்கின்றேன்" என்றாள்.

"நீங்கள் தருவீர்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். இது தொடர்பாக நீங்கள் காட்டும் அக்கறையையும் என்னால் புரிந்து கொள்ளமுடிகிறது. ஆனால் நான் கூறிய நிபந்தனைகளின் கீழ்தான் டிப்ஸ்சை என்னால் பார்வையிட முடியும்"

நான் என்னுடைய நிலைப்பாட்டை வலியுறுத்திவிட்டேன். அவளும் இந்தத் தொடர்ை மின்சாரவாள் ஒன்றின் வேகத்துடன் து ்டித்துவிடமுடியும். ஆனால் இந்த சிறிய சர்ச்சையை தீர்த்துவிட்டால், ஒரு தாயாருக்கு அவசியமான ஆரம்பப் பொறுப்புக்களை கட்டியெழுப்புவதில் ஓரளவுக்கு வெற்றிகாணமுடியும் என்று நான் நிச்சயமாக நினைத்தேன். டிப்ஸைப் பொறுத்தவரை இவ்வளவு ஆழமான பொறுப்புகளில் மாட்டிக்கொள்வதிலிருந்து பணத்தைக் கொடுத்து நழுவிக்கொள்பவளாக அவள் இருந்திருக்கக்கூடும். இந்தக் காரணியை இந்தக் கட்டத்தி லேயே ஒழித்துக் கட்டுவது முக்கியமானது என நான் முடிவு செய்திருந்தேன்.

சிலநிமிடங்களுக்கு அவள் மௌனமாக அமர்ந்திருந்தாள். அவளுடைய கைகள் இரண்டும் மடியின் மீது இறுகப் பற்றியிருந்தன. அவற்றை அவள் பார்த்தபடியிருந்தாள். திடீரென எனக்கு டிப்ஸின் நினைவு வந்தது. நிலத்தில் முகம் குப்புறப்படுத்துக்




கொண்டு இறுகிக்கொண்டு...... அமைதியாக படுத்துக்கொண்டிருப்பது...... நினைவுக்கு வந்தது. அவளும் அவளது மகனைப் போலவே துக்கத்தோடும் மற்றவர்களுக்கு எட்டாத தூரத்திலும் இருப்பதாக நான் நினைத்துக் கொண்டேன்.

இறுதியாக.... நிமிர்ந்து என்னைப் பார்த்து விட்டு விரைவாக பார்வையை அகற்றிக் கொண்டாள். என்னை நேராகப் பார்ப்பதைத் தவிர்த்துக்கொண்டாள். "உங்களுக்கு நான் இதைக் கட்டாயம் சொல்லத்தான்வேண்டும்" என்று ஆரம்பித்தவள், தொடர்ந்து, டிப்ஸ் பற்றிய விபரங்கள் தேவையென்றால் பாடசாலையிலிருந்து பெற்றுக்கொள்ளுங்கள் என்றுதான் கூறமுடியும். அவற்றைவிட மேலதிகமாக சொல்வதற்கு ஒன்றுமில்லை. உங்களுடைய நேர்காணலுக்கென என்னால் வர இயலாது. அது உங்களுடைய நிபந்தனைகளில் ஒன்று என்றால் முழு ஏற்பாட்டையும் இத்தோடு மறந்து விடுவோம். நான் சொல்லக்கூடிய வேறு எதுவும் இல்லை. இது ஒரு துன்பகரமான நிகழ்வு......

பெரும் துன்பமான நிகழ்வு ..... டிப்ஸ் பற்றி என்ன சொல்ல? அவன் உளவளம் குன்றியிருக்கிறான் அவ்வளவுதான். அந்தநிலையில் தான் அவன் பிறந்தான். ஆனால் எந்த நேர்காணலுக்கோ அல்லது விசாரணைக்கோ என்னால் வரமுடியாது" என்றவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். தன்னை நேர்காண்பது என்ற எண்ணமே அவளைத் திகிலுறச் செய்து விட்டதுபோல் தோன்றியது.

"எனக்குப் புரிகிறது" என்றேன் நான். "இந்த விடயத்தில் உங்கள் விருப்பங்களை நான் மதிக்கிறேன். ஆனால் இதை உங்களுக்குச் சொல்லவேண்டும். எந்தவேளையிலாவது டிப்ஸ் பற்றி என்னுடன் கதைக்கவேண்டும் என்று தோன்றினால் என்னோடு தொடர்பு கொள்ளத் தயங்கவேண்டாம். ஆனால் அதை உங்கள் விருப்பத்துக்கே முழுமையாக விட்டுவிடுகிறேன்."

அவள் சிறிது நிம்மதியுற்றதுபோல் தெரிந்தது. "எனது கணவரும் இதற்குள் வரவிரும்பவில்லை" என்றாள் அவள்.

"அது பற்றிப் பரவாயில்லை... நீங்களே அதை முடிவுசெய்து கொள்ளுங்கள்"

"நான் வழிகாட்டல் மையத்துக்கு டிப்ஸைக்கொண்டு வந்த பின் அங்கே நிற்க முடியாது.

(தொடரும்....)

---




'குட்டி' என்றொரு நல்லபடம் வந்திருந்ததே! யாராவது அதைப்பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருந்தால் அந்தப்படம் பற்றிய உங்களுடைய கருத்தென்ன? மதிப்பீடென்ன?

நானறிந்த வரையில் எந்தத் தியேட்டரிலும் குட்டிபடம் ஓடியதாகத் தெரியவில்லை. 'குட்டி' படத்தை ஏன் தியேட்டர்களில் காட்சிப்படுத்தவில்லையென்றும் புரியவில்லை. சினிமா என்றால் என்னவென்று இவர்களெல்லாம் கருதிவைத்திருக்கிறார்கள். காசு உழைக்கிற வழியாகமட்டும் சினிமாவை விளங்கிவைத்திருப்பதால் தான் பல சினிமாக்கள் படுகேவலமாகத் தயாரிக்கப்படுகின்றன. காசு உழைக்கிற அதே வழியாகவும்உத்தியாகவும்தான் இந்தக்குப்பைச் சினிமாவை பத்திரிகைகளும் விளம்பரப்படுத்துகின்றன. அதே காசு உழைக்கிற அற்பத்தனமாகவே தியேட்டர்களும் குப்பைச்சினிமாவுக்கு பெரும் விளம்பரக் கவர்ச்சிகொடுத்து படங்களை காண்பிக்கின்றன. இந்தச்சூழலில் 'குட்டி' காண்பிக்கத் தவறியதில் பெரும் ஆச்சரியம் ஒரு வகையில் இல்லைதான். ஆனாலும் இதையெல்லாம் மீறி நடந்து விடுகிற நல்ல சினிமா முயற்சிகளில் குட்டியும் வந்திருக்கிறது.

தயவுசெய்து குட்டியை இனியாவது பாருங்கள். குட்டிப்படம் காட்டுற உலகத்தை, பிரச்சினையை, அது வெளிப்படுத்த விளைகிற உண்மையை, உணர்வைப் புரிந்து கொள்ளுங்கள். இப்படியெல்லாம் ஒரு கோரிக்கையாக இங்கே எழுதக் காரணம் 'குட்டி' அப்படித்தான் எமக்குள் கொதித்துக் கொண்டிருக்கிறது. குட்டியைப் பார்த்த பிறகு அந்தப்படம் பற்றி பேசாமலும் யோசிக்காமலும் இருக்க முடியாது. அதன் சார்பாக கதைக்காமலிருக்கவும் இயலாது.

ஜானகி விஸ்வநாதன் இயக்கியுள்ள 'குட்டி'யின் ஒளிப்பதிவு தங்கர்பச்சானுடையது.

நாங்கள் எப்போதும் சிரிப்பூட்டும் நடிகராகப் பார்த்த விவேக் குட்டியில் ஆச்சரியமூட்டுகிற மாதிரி வேறு விதமாக நடித்திருக்கிறார். இளையராஜாவின் இசை குட்டியை நன்றாக உயர்த்தி விடுகிறது.

கிராமத்தில் உள்ள ஏழைக்குடும்பம். தந்தை மட்பாண்டங்களைச் செய்கிறார். தாய் கூட ஒத்தாசையாக இருக்கிறாள். தந்தைக்கு மகளைப்படிக்க வைக்கஆசை. ஆனால், வாழ்க்கையின் யதார்த்தம் அதற்கு இலகுவில் இடந்தரவில்லை. ஆனாலும் அன்பும் அரவணைப்பும் கூடுதல். இப்படித் தொடங்குகிற குட்டியின் வாழ்க்கை எப்படி எதிர்பாராத விதமாக சிதைந்து எங்களாலேயே ஜீரணித்துக் கொள்ளமுடியாத அளவுக்கு போகிறது என்பதைக் காட்டுகிறது குட்டி.




சிறுவயதுடையோர் வீட்டு வேலைகளுக்கு என்ன மாதிரியான சூழலிலிருந்து, எப்படியான நிலைமையிலிருந்து வருகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள குட்டியைப்பாருங்கள்.

வீட்டில் 'குட்டி' போன்ற ஒரு உயிரை, சிறுமியை, நீங்கள் எப்படி நடத்தக்கூடாது என்பதை, அப்படி சிறுவர்களை எவரும் வேலைக்கு அமர்த்தக்கூடாது என்பதை தெரிந்துகொள்ள குட்டியைப் பார்க்க வேண்டும்.

வீட்டுப் பிள்ளையை ஒரு விதமாகவும் வேலைக்காரப்பிள்ளையை ஒரு விதமாகவும் நடத்துகிற வேறுபாட்டை, நீதியின்மையை, நாகரிகக்கேட்டை விளங்கிக் கொள்ள குட்டியைப் பார்த்தல் நல்லது.

குட்டிக்குள்ளும் ஆசைகளும் கற்பனைகளும் ஏக்கங்களும் ஈரமும் இருக்கிறது என்பதற்கு ஒரு சாட்சியாகவும் குட்டியுள்ளது.

வயது முதிர்ந்து பாட்டியாகி விட்ட பிறகும் மனதில் பண்பும் நல்ல எண்ணங்களும் வராமல் சுயநலமும் குரூரச் சிந்தனையோடும் இயங்குகிற மனிதர்களின் குறியீட்டையும் குட்டியில் பார்க்கலாம்.

தாய் பிழைசெய்கிறார், பேரனைத்தவறாக நடத்துகிறார் என்று தெரிந்தும் கண்டிக்கத் திராணியற்றிருக்கும் மகளை காண்பதற்கும் குட்டியைப்பார்த்தல் அவசியம். அவர் உயரதிகாரியாக இருந்தாலும் தவறுதான் நடக்கிறது.

வசதியான சூழலில் வாய்ப்புகளோடு மட்டும் பிள்ளையை வளர்த்தால் போதாது. பிள்ளையை நல்ல மனப்பாங்கோடு வளர்க்க வேணும் என்பதற்கும் குட்டியில் வருகிற சிறுவன் நல்ல உதாரணம்.

பிள்ளையை படிப்பித்து ஆளாக்க வேண்டும் என்று மட்டும் கனவுகண்டால் மட்டும் போதாது. நடைமுறையில் எதையும் எதிர் கொள்ளக் கூடிய திராணியுடன் பிள்ளையை வளர்க்க வேண்டும் என்பதற்கும் குட்டியொரு சாட்சி. தந்தை அரவணைப்பில் குட்டி சிறகடிக்கும் சின்னப்பறவையாக இருக்கிறாள்.

தாய் எவ்வளவு தான் முயன்ற போதும் குட்டியால் உதவிகளில்லை. அவருடைய உலகம் விளையாட்டுகளோடு கழிகிறது. எதிர்பாராத விதமாக தந்தையை குட்டி இழக்கின்ற போது குடும்பம் வறுமைக்குத் தள்ளப்படுகிறபோது குட்டி எல்லாவற்றையும் மீறி நகருக்கு வீட்டு வேலைக்குப் போக வேண்டியேற்படுகிறது. அவருடைய விருப்பங்களை மீறி அவள் தாயைப் பிரிந்து போகும் நிலை மகளைப் பிரியமுடியாத தாயின் அவலம் அப்பாடா எத்தனை கொடுமையான யதார்த்தம் அது குட்டியைப் பாருங்கள்.

எவ்வளவுதான் படிக்காதவர்களாக இருந்தாலும் எத்தனைதான் நல்லவர்களான போதும் வீட்டில் சிறுமியைத்தான் வேலைக்கு வைத்திருக்கிறார்கள் என்பதற்கும் 'குட்டி' ஒரு நிரூபணம்.

வீடுகளில் வேலைக்கு நிற்கும் பெண்கள் சிறுவயதுப் பெண்கள் - எப்படிப் பாலியல் ரீதியாக பாதிக்கப்படுகிறார்கள், பாதுகாப்பின்மையாக வாழ்கின்றார்கள். அவர்களுடைய அவலம் எத்தகையது என்பதற்கும் குட்டி சேதியாகிறது.

இரண்டு வெவ்வேறு உலகங்களைத் துல்லியமாக, யதார்த்தமாகவும் குட்டி வெளிப்படுத்துகிறது.

ஒன்று நகர்ப்புறத்தில் படித்த வசதியான குடும்பச்சூழல்.

மற்றது ஏழ்மை நிரம்பிய கிராமியச் சூழல் இரண்டு சூழலின் பலங்கள், பலவீனங்கள், சரிகள், தவறுகள், வாழ்க்கை முறைகள், பிள்ளைவளர்ப்புகள், இரண்டு உலகங்களின் கனவுகள் எல்லாவற்றையும் கூட குட்டி வெகு சிறப்பாகச் சொல்கிறது.

இப்படிப் பல சிறப்படையாளங்கள் நிரம்பிய சினிமா தமிழில் வருவது வெகு அபூர்வம். குட்டி வந்திருக்கிறது. நாசர், குட்டியாக வருகிற சின்னப்பெண், விவேக் உட்பட பலரும் நன்றாகவே நடித்துள்ளனர். அப்பாடா அந்தச் சிறுமி-குட்டி-யை எப்படி மறக்க முடியும்?

ஜானகி விஸ்வநாதன் தமிழர்களுக்கு நல்லதொரு பணியைச் செய்திருக்கிறார். நல்ல சினிமாவைத் தந்தது மட்டுமல்ல, தமிழர்களின் வாழ்க்கை பற்றிய மதிப்பீட்டையும் அவர் செய்துள்ளார்.

உண்மையில் குட்டிபற்றிய விரிவான நல்லதொரு விமர்சனத்தை இன்னொரு சந்தர்ப்பத்தில் எழுத வேணும். நிச்சயம் எழுதுவேன்.

— ஆரதி



மனித வாழ்வுக்கு ஆதாரமான விடயங்களில் முதன்மையானது நீர். தூய்மையான நீர் அருந்தமுடியாது ஆண்டு தோறும் பாதிப்படைவோர் கோடிக்கணக்கானோர்.

அருந்தலாகிவரும் வளங்களில் பிரதான மானது நீராகும். இதே கணக்கில் போனால்ஒரு காலத்தில் நீரை பெற்றுக்கொள்ள மனிதர்கள் கொடுக்கும் விலையானது மிக அதிக மாகும்.

## பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

இத்தகைய பின்னணியில்தான் யாழ்ப்பாண குடாநாட்டு மக்களுக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அவர்கள் ஒரு எச்சரிக்கையை விடுத்துள்ளார். அவர் கூறிய கருத்து அண்மைக்காலமாக துறை சார்ந்த நிபுணர்களும், ஆராய்ச்சியாளர்களும் கூறிவரும் கருத்துதான்.

"நிலத்தடி நீர் அண்மைக்காலமாக குடாநாட்டில் அருகி வருகின்றது. எனவே நிலத்தடி நீரை அளவோடு பயன்படுத்துங்கள் என்பது தான் அவரது எச்சரிக்கையின் பிரதான அம்சம்.

யாழ் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காரணம் நீர்ப்பாவனையில் விவசாயிகளின் பங்கும் பாதுகாப்பும் கணிசமானதாகும்.

"இன்று பெரும்போகம், சிறுபோகம் என்ற பாகுபாடு இல்லாமல் காலத்துக்கு ஏற்ப பயிர்களை மாறி மாறி செய்கை பண்ணி வருகின்றீர்கள். இவ்வாறாக நீங்கள் நீர்ப்பாவனையிலும் கவனம் செலுத்த வேண்டும். நீர்வளம் குறைந்து வருவதால் எதிர்காலத்தில் நீருக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம். எனவே நீர்ப்பாசன முறைகளை மாற்றி அமைக்கவேண்டும். அதன் மூலம் எதிர்கால சந்ததிக்கும் நீர்வளத்தை விட்டு வைக்க முடியும்" எனவும் அவர் தெரிவித்தார்.

எங்கள் நீர்வளத்தை நாங்கள்தான் பாதுகாக்கவேண்டும். பராமரிக்க வேண்டும் என்பதன் அர்த்தத்தை உணர்ந்துகொள்வோம்.

(சி-10552)

# கிராம அபிவிருத்தி வங்கி எமது மக்களின் குடும்ப வங்கி

எமது தமிழ்ப் பிரதேசத்தில், எமது மக்களுக்கு சேவை செய்ய வென சிறிய முதலீட்டு நிதி நிறுவன மாக; 1993-3-14 அன்று உதய மாகியது கிராம அபிவிருத்தி வங்கி ஆகும். அத்துடன் மக்களுக்கான மூலதனச் சந்தையில் உறுதியான பங்கினை வழங்கவேண்டும் என்ற உயர் நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்டதாகும்.

• வன்னிப் பெருநிலப்பரப்பில் அதிக சனத்தொகையைக்கொண்ட கிராம மக்களின் வாழ்க்கையில் புதிய தொழில் முயற்சிகளுக்கு நம்பிக்கை யான தொழில் முதலீட்டை வழங்கும் பணியில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் பங்கு அளப்பரியது.

அந்தவகையில் மக்களின் தன்னிறைவான பொருளாதாரத்தை விருத்தி செய்தல் என்பதனை தூர நோக்காகக்கொண்டு கிராமிய மக்க ளின் முன்னேற்றத்தில் ஒரு தசாப் தத்தை நிறைவுசெய்த கிராமிய அபி விருத்தி வங்கியானது தமிழீழ மக்க ளின் குடும்ப வங்கியாகச் செயற்பட்டு வருகிறது.

இவ்வங்கியானது கிராம மக்களின் முன்னேற்றத்தில் பங்கு கொள்வதற்காக முல்லை மாவட்டம், கிளிமாவட்டம், திருகோணமலை மாவட்டம், மன்னார் மாவட்டம், வவு னியா மாவட்டம் ஆகிய மாவட் டங்களில் தனது கிளைகளைப்பரப்பி அம்மாவட்டங்களுக்கிடையே சேமிப் புப் பழக்கவழக்கங்களை ஊக்கப் படுத்துவதற்காக பல சேமிப்பு வைப்புத் திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது. கிராமியப் பொருளா தாரத்தை கட்டியெழுப்புவதற்காக அம்மக்களுக்கு சுயதொழில் கடன், விவசாயக் கடன், தொழில துறை மேம் பாட்டுக் கடன் என பல்வேறுபட்ட கடன்களினூடாக அவர்களது முயற் சிக்கு துணை புரிந்து வருகிறது.

மக்களிடையேயும் சிறுவர் களிடையேயும் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக, கிராமங்கள் தோ றும் வங்கி அலுவலர்கள் வங்கியின் வெளிக்கள அலுவலர்கள் நேரடி யாகச் செல்கின்றனர். பொது இடங் களில் மக்களை ஒன்றுகூட வைத்து வங்கி தொடர்பான கருத்துக்களையும் வழங்கி சேமிப்பு, கடன்வழங்கல் போன்ற சேவையைச் செய்து வரு கின்றனர்.

அன்றாடம் உழைத்துவரும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு எமது பிரதேசத்தில் சிறு வர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வதால்தான் எதிர்காலத் தில் ஒரு சிறந்த பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கமுடியும். இந்த வகையில் 2003 இல் "தளிர்" சேமிப்புக் கணக்கு அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டம் கடந்த 18 மாதங் களுக்கிடையில் மக்கள் மத்தியில் மிகப் பெரிய அளவிலான வரவேற் பைப் பெற்று சிறப்புடன் செயற்பட்டு வருகிறது. அத்துடன் வங்கிப் பணியாளர்கள் பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்கள் மத்தியிலே தளிர் சேமிப்புப் பற்றிய நன்மைகளை எடுத்துக்கூறி சேமிப்பை ஊக்கப் படுத்திவருகிறார்கள். இச் சேமிப்பில் கூடுதலாக சேமித்த மாணவர் களுக்கும் புலமைப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

வறுமையால் கல்விகற்க முடியாத மாணவர்களை தெரிவு செய்து கல்வியை தொடருவதற்காக மாதாந்தம் தலா 200/= வழங்கப்பட்டு வருவதோடு அறக்கொடை நிறு வனத்தின் உதவியுடன் இம்மாண வர்களுக்கு பள்ளிச் சீருடைகள் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வங்கியானது கடந்த யூலை ஆகஸ்ட் மாதம் முள்ளியவளை, பூநகரி, திருகோண மலை ஆகிய பிரதேசங்களில் தனது கிளையை நிறுவி தனது செயற்பாட் டை மேலும் விரிவுபடுத்தி உள்ளது.

தற்போது பல பயனாளி களுக்கு உழுபொறி வங்கியால் கொள்வனவு செய்து கடனாக வழங் கப்பட்டதுடன் பல பயனாளிகளுக்கு உழுபொறிக்கொள்வனவு செய்வ தற்கு கடனுதவி வழங்கப்பட்டுவரு கிறது. மின்சார வசதியற்ற எமது பிரதேசத்தில் வீடுகளுக்கு ஒளியூட்டு வதற்கு சூரிய மின்கலத்தொகுதி கடனாக வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

கிராம அபிவிருத்தி வங்கி யானது ஆரம்பத்தில் இருந்து இன்று வரையும் 25,3471,776ரூபா கடனாக வழங்கியுள்ளது. மேலும் வங்கியின் கிளிநொச்சிக் கிளையானது கணினி மயப்படுத்தப்பட்டு 2004ஆம் ஆண்டு மே, 1ஆம் திகதியிலிருந்து வாடிக் கையாளர்களுக்கு மிகத்துரித சேவை யை கணினியூடா சிறப்பாகச் செய்து வருகிறது.

எஸ்.கே

## உடைவு....

(14 பக்கத் தொடர்ச்சி)

*அப்பு பேசாமல் மெல்ல எழும்பிப் போனார் எங்கோ... அம்மா அப் புவை சமாதானப் படுத்தி விட்டு என்னைத்தேடினா. அம்மா என்னைத்தேடுவது என் கண்களில் தெரிந்த போதும் நானாக அம் மாவை சந்திக்க முயல வில்லை.*

*அம்மா ஒவ்வொரு அறையாக தேடினா. கேற் றடிக்கு வந்தா. நான் எதுவும் புரியாதவனாகி எங்கோ வெளியில் போய் வருமாப்போல் "கேற்" றடிக்கு வர அம்மா சிரித்தபடியே உள்ளே போனா....*

*நான் அம்மாவை பின் தொடர்ந்தேன். அம்மா எதுவும் பேச வில்லை. இருவரும் மௌனமாகவே வீட்டினுள் நுழைந்தோம். இருவரும் நீண்ட நேரம் மௌனத்தை விரைக்க நேர்ந்தது. அம்மாவுக்கும் எதுவும் பேசமுடியவில்லை. எனக்கும் தான்.*

*சற்று நேரம் அமைதி! நான் என்னை இழந்து எங்கோ தொலைந் திருந்த அக்கணம்.*

*"தம்பி அப்போதை நான் சிரிச்சது ஏனெண்டு நீ கேட்டனியெல்லே அது".... அம்மா கதையை தொடக்கினா.*

*நான் எப்போதோ மறந்துபோன கேள்விக்கு இப்போது அம்மா தன் வாயால் கூறமுயல, நான் அப்பு வந்து போனதற் கான பதிலை தேடினேன்.*

*இதை அம்மா தானே ஏன் தொடங்கினா? அம்மாவுக்கு கதைக்க வேறு எதுவும் இல்லையோ? அல்லாது போனால் அம்மாவும் குழம்பிப் போனாவோ....? என்னவோ........?*

*தம்பி நான் சிரிச்சது ஏனெண்டா, முந்தி நீ சின்னனில கோவிலுக்குப் போக வேட்டி கட்டிவிடச்சொல்லி அடம்பிடிக்க நான் உன்ர அப்புவின்ர சால்வைத் துண்டை கட்டிவிட அது பாதியில கழண்டு விழுந்து போச்சு. உடனை "ரோட் டிலை கிடந்த கல்லாலை எனக்கு எடுத்து எறிஞ்சனி. அப்ப என்ரமண்டை உடைஞ்சு இரத்தம் போக நீ ஓடின ஓட்டம்....." அம்மா மெல்லிய சிரிப்போடுதான். இதையும் சொல்லி முடித்தா, முன்னர் அம்மா சிரித்த அதே சிரிப்பு இப்போதும் கலந்திருந்தது. ஆனால் நான் மட்டும் அம்மா சொன்னவைக்கு செவிசாய்த்ததாய் தெரிய வில்லை. இருந்தாலும் சின்ன வெட்கம் அப்போது என்னை பீடித்தது ஏனோ எனக்கு புரியவில்லை.*

*அம்மா எதுவும் பேசவில்லை. நானும் தான் "அம்மா அப்பு என்னவாம்" அம்மாவிடம் கதைவிட்டேன் எதுவும் புரியாதவன் போல்.*

*அம்மா சிரித்து விட்டு "அதொண்டு மில்லை உடைஞ்சு போன கண்ணாடி எங்கட வீடு புதிசாக்கட்டி குடிபுகுதல் நடக்கேக்கை வைச்சது. இண்டைக்கு உடைஞ்சு போச்சு. கூடாது எண்டு அப்பு பேசிப் போட்டுப் போறார்."*

*அம்மாவுக்கும் கண்ணாடி உடைந்தது கவலைதான். கண்ணாடிப் பொருட்கள் உடையக் கூடாது என்பதனால் தானோ? அவவின் உள் மனக் கொதிப்பு வார்த்தை களை பேசும் போது புரிந்தது.*

*என்னசெய்ய எனக்கு மட்டும் கண்ணாடி உடைந்து போனது உறைக் கவில்லை. இப்போது "கண்ணாடி உடைஞ்சால் கடையில் வாங்கலாம். அன்பு உடைந்தால்.....?" யாரோ எழுதிக் கையெழுத்து இட்டு அனுப் பிய அந்த வார்த்தைகள் நினைவுக்கு வந்தது அப்போது.*


# 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயக மண்ணில் 29 09 1976

தாயக விடிவில் 05 10 1997

## லெப்.சிவப்பிரியன்

(ஜோன் கெற்பீக்கன் ஜெஸ்ரின் ஜெயமதி)
(இம்ரான் பாண்டியன் படையணி)

சம்பவம் :-கரிப்பட்டமுறிப்பு சிறிலங்கா இராணுவ விநியோக மைய முகாம் மீதான தாக்குதலில்)

எம் வாழ்வெனும் சோலையில்பூத்த பூவே!
காலம் சபித்த எம் தேசத்தின் துயர்மீட்க
நீயும் புலியானாய்.அன்றொரு நாளில்
எம் இதயங்களில் இடியினை விழுத்தி
பூவென உதிர்ந்தாய். விழிகளில் நீரோடு...
நீளும் உன் நினைவுடன் எம் காலங்கள் யாவும்...

இச்சமரில் இவருடன் வீரகாவியமான அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பலாலி தெற்கு,
வசாவிளான்.

((சி.10553)

குடும்பத்தினர்.
உற்றார்,உறவினர்கள்.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*அன்பின் பாவலா!*

*மன்னாரில் மதங்களுக்கிடையே கலவரத்தை ஏற்படுத்தும் தீய சக்திகள் எப்போது திருந்துவார்கள்?*

*சத்தியா,*
*மன்னார்.*

மதம் பிடித்தயானையும் மதம் பிடித்த மனிதரும் ஆபத்தானவர்கள். தீயசக்திகள் தாமாக திருந்தபபோவது கிடையாது. எனவே இவர்களை சொல்லால் திருத்த முடியாது.

*பாவலரே வணக்கம்!*

*கருணாவிற்கு அடைக்கலம் கொடுத்தது நிரூபிக்கப்பட்டால், தான் பதவி விலகுவதாக கூறிய இராணுவத்தளபதிபற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

*தினேஷ்குமார்,*
*மாங்குளம்.*

தான் பதவி விலகினால் அதனை விட உயர் பதவியொன்றை m u R நம்பிக்கையுடையவா.

*பாவலா!*

*உமக்கு என்ன நடந்தது.கறையான் அரித்த மாதிரி உன்ர தலை வெட்டும் தலை கீழாக போட்ட மாதிரி காற்சட்டையும் போட்டுக் கொண்டு என்ன சந்தியில நிற்கிறீராம்?*

*கண்ணதாசன்,*
*யாழ்ப்பாணம்.*

உங்களது பார்வையும் அறிவும் இப்படித்தலைகீழாக மாற விடும் என நான் எதிர்பாக்கவேயில்லை. உங்களுக்கு இந்தத்தகவலை சொன்ன உங்கள் நண்பர்களை சந்தியில் கண்டபோதே நான் நினைத்தேன்.... அவர்களின் நிலை இப்படியாகிவிட்டதே....!

*சிவ பூசையில் கரடி போல் என பலர் கூறுகின்றார்களே இதன் உண்மை விளக்கம் என்ன பாவலரே?*

*மாதவன்,*
*முல்லைத்தீவு.*

பாடசாலைக்கு 'கட்' அடித்து விட்டு படம் பார்த்து ரசித்துக்கொண்டிருக்கும் வேளையில் பின் இருக்கையில் அதிபர் இருப்பதைக் கண்டால் எப்படி இருக்கும்? இப்போது விளங்கியிருக்கும் தானே....!

*அன்பின் பாவலரே!*

*நீர் ஏன் முன்பின் தெரியாத நண்பர்களுடன் கூட்டுச் சேர்கின்றீர். நான்பல தடவைகள் பார்த்தேன் சமாதானம் வந்துட்டுது என்ற நினைப்போ?*

*தீபன்,*
*குமுழமுனை.*

முன்பின் தெரிந்தவர்கள் தான் இப்போது ஆபத்தானவர்கள் போலுள்ளது. இந்தப்பக்கம் வரும் போது கைகுலுக்கிறார்கள் அந்தப் பக்கம் போனால் 'தலையாட்டி' விடுகிறார்களே.... சண்டை ஆபத்தானது, சமாதானம் அதைவிட ஆபத்தானதாக இருக்கிறதே...

*பாவலா!*

*தமிழீழ பெண்கள் எழுச்சி நாளில் பெண்களுக்கு தங்களின் அறிவுரை என்ன?*

*சுதர்சன்,*
*கிளிநொச்சி.*

தமிழீழப் பெண்களின் எழுச்சி...... உலகப்பெண்களின் எழுச்சிக்கு வழிகாட்ட வேண்டும்...... அதற்கேற்ப விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

*தாங்கள் ஆஸ்திகனா, நாஸ்திகனா பாவலரே?*

*நிரோஷனா,*
*நுணாவில*

நான் 'ஆஸ்தி' இல்லாதவன்... அவ்வளவுதான்!

*பாவலரே!*

*இன்றைய சமாதான காலம் பற்றி கவிதை ஒன்றை கூறுங்கள்?*

*யசோதா,*
*முள்ளியவளை.*

சமாதானம் குறித்து சமாதானமாக பேசமுடியாத நிலையில் சமாதானப் பேச்சாளர்கள் சண்டையில் இறங்கினர்..

*அன்பின் பாவலா!*

*எமது ஊரில் மாணவன் ஒருவனை,"சிறுவர்கள் உரிமைதினம் எப்போது" எனக்கேட்டு ஆசிரியர் அடித்துள்ளாரே?*

*மதியழகன்,*
*வவுனியா.*

சிறுவர்களின் உரிமை எப்படிபட்டதென ஆசிரியர் இடித்துரைத்துள்ளார்.... அவ்வளவுதான்.

*தாங்கள் உதைபந்தாட்டம் ஆடுவீர்களா?*

*யாழவன்,*
*கண்டாவளை.*

உதைபந்தாக நான் 'வதை' பட விரும்பவில்லை..




''ஒருக்கா சிவபெருமான் பயணம் போனாராம் வழியில தண்ணிவிடாயாம். ஒரு கடையில தண்ணிகேட்டார். அவன் ஒரு தேசிக்காய் எடுத்துப் பிழிஞ்சானாம் பிழிபடவேயில்லை. அப்ப அதில நிண்ட மற்றவையும் வாங்கி பிழிய முயன்று பாத்தினம் ஏலாமப் போச்சு."

நிப்பாட்டுங்கோ பிறகு ஒரு பெடியன் வந்து பிழிஞ்சு போட்டான்... அப்பிடித்தானே. நீர்- அரிச்சந்திரன் நாடகம் பாத்தநீரோ....செத்துப்போன தன்ர பிள்ளைய சனங்கூட இல்லாமத் தானே சுமந்துகொண்டு ஒருதாய் எரிக்கிறதுக்கு சுடலைக்கு கொண்டுவாறாள். சுடலைக் காவல்காரன் மறிச்சு. தனக்குத் தரவேண்டிய ஒரு முழந்துண்டும், வெள்ளிப்பணமும் தந்தாத்தான் எரிக்க விடுவன் எண்டு சொல்லுறான். ஏனெண்டா வரிப்பணம் வாங்குறது அந்த ஆட்சிய இறைமையுடைய ஆட்சியெண்டத நிரூபிக்கிற விடயம். அதோட வரி விதிக்கிற அதிகாரமில்லாட்டி அது நாடில்ல. உந்தப் பெற்றோல்லயிருந்து அரிசி, ரயில்கட்டணம் வற்வரி எண்டு எவளவந்தும் அரச ஊழியற்ற சம்பளம் ஏறேல்ல. முதல் அதுக்கு வாய் திறக்கிறியளே- பிழிஞ்சு போட்டாராம் பிழிஞ்சு....எனக்கு வந்து ஏறிச் செண்டா..... "சரி இப்பவே ஏறித் தானப்பு நிக்கிறாய். இறங்கு-"

* * *

இந்த முறை கந்தசட்டி கார்த்திகையில வருதாம். ஏன் விநாயக சதுர்த்தியே புரட்டாசியிலதானே வந்தது... அதுசரி சாறியள் எடுத்துப் போட்டியே. ''போன வரியம் கட்டினது அப்பிடியே கிடக்கு இப்பவும் எடுக்கப்போக மனிசன் சன்னதமாடும்."

"நான் நாலு சாறி எடுதிட்டன். அக்கா இந்தியாவால வாறா ரெண்டு சாறிக்கு ரெலிபோன் கொடுத்தனான்."

"பிறகென்ன கலக்கல் தான்....ம்...என்ன ராமக்கா யோசிக்கிறாய் நீ கந்தசட்டி பிடிக்கேல்லயே.''

''பிடிக்கத்தான் வேணும். ஆனா- கோவிலுக் கென்னண்டு வாறது எண்டுதான் யோசிக்கிறன்.''

* * *

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–89



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–89

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –88



**ஏ.சோபிதன்,**
**யாழ.பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்**

### பரிசுக்குரிய வரிகள்

*பேரினவாதம் போட்ட பொருளாதார தடையால்*
*நாம் பயணம் போன வாகனம்-நேற்று*
*அம்மையார் அதிகரித்தார் வலுப்பொருள் விலை –எம்மால்*
*முடியும் வாழ என பாட்டன பூட்டினார் வண்டில் இன்று.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*சில்லு வண்டில் பூட்டி சிங்காரித்து போகும் உறவுகளே!*
*நெல்லு 'விலை' என்று நிம்மதி உமக்கில்லை*
*இலாபம் காணும் வியாபாரி இருக்கையிலே*
*வேலும், வில்லும் தான் உமக்கு விடிவு தரும்.*

கா.ஓவியன்,
கிளிநொச்சி.

*இயற்கையின் படைப்பின் கொடையாளிகளும்*
*வயிற்று பசி தீர்க திண்டாடும் மனிதனும்*
*வயது முதிர் எருதின் வாழ்க்கை காலம்*
*உயிர் விடும் வரை சோதனை காலம்.*

க.நந்தன்,
பூநகரி.

*எரிபொருள் தடைபட்டு வாகனங்கள் இல்லாத*
*இருள் சூழ்ந்த அந்நாளில் நோயால் துன்புற்றோருக்கு*
*குண்டு மாமாவும் செய்த....*
*வண்டிச் சேவை காலத்தால் அளியாத வரலாறு.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி..

*எரிபொருள் விலை ஏறிக் கொண்டிருக்கிறது*
*மனித பொருளாதாரம் இறங்கிக்கொண்டிருக்கிறது*
*நாகரிகம் முன்னேற தோல்சுமைகள் பாரத்தை பின்னோக்கு-*
*கின்றன. எங்களது வளங்களும் கைகளுமே எங்கள் சொத்துக்கள்.*

கே.சுசி,
யாழ்ப்பாணம்.

*நவீன மயப்படுத்தப்பட்டு வரும்-இக்*
*காலத்திலும் கொடிய போரினால் நெருக்கப்பட்ட*
*எம் தமிழர் தொன்மைக் காலமக்களின்*
*பண்பாட்டை பின்பற்றுகின்றோம் விரைவில் வெற்றி.*

அ.வள்ளிப்பிள்ளை,
முள்ளியவளை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

# 2ம் லெப் மாலதி நினைவு நாள்

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்

## 10. 10. 2004

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், மகளிர் படையணிகளின் போரியல் வரலாற்றை எடுத்துக் காட்டுகின்ற

- படைக்கலக் கண்காட்சி
- போர்க்கருவிகள் உற்பத்திச்சாலை
- விடியல் படைவீடு
- இராணுவ மருத்துவமனை
- சண்டைக் காட்சிகள்
- சிறப்புக் கலைநிகழ்வுகள்

வென்றிடுவீர் பரிசுகளை

பார்வையாளர்களுக்கான

- துப்பாக்கிச் சூட்டுப்போட்டிகள்
- தனி விளையாட்டுக்கள்

2ம் லெப். மாலதி நினைவுக் கேடயத்துக்கான மகளிர் உதைப்பந்தாட்டப் போட்டிகள்

தமிழீழத்தின் முன்னணி இசைக்கலைஞர்களும் போராளிக் கலைஞர்களும் இணைந்து வழங்குகின்ற இசைநிகழ்வுகள்

**காலம்:- 06.10.2004 - 10.10.2004**
**நேரம்:- காலை 9.00 -இரவு 10.00 மணி**
**இடம்:- கிளிநொச்சி மத்திய மைதானம்.**



அனைவரும் வருக

மகளிர் படையணி
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்

கிளிநொச்சியில் 5 நாட்கள் சிறப்பு நிகழ்வுகள்

---

**FedEx Express®**

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

இப்பொழுது உள்நாட்டிலும் வெளிநாட்டின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிடவும் பெறவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

E.mail:- thirumurugan @ lycosmall.com

## திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
[Opposite All Cylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46,ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
[பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 2227310

(சி-10133)

**WESTERN UNION®**

பணப் பரிமாற்றம்
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் துரிதமாகப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு

---

மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்

## குமரகுரு

உங்கள் இன்றைய தெரிவுக்கு...

புடைவை
அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

**குமரகுரு** புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

(சி-10482)

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

SM Graphics

---

## EXPOAIR

your friend in the skies

## எக்ஸ்போ எயார்

வான்வெளியில் உங்கள் நண்பன்

யாழ்-கொழும்பு பயணத்தின் போது ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891/6297, 0772348888/2349999,
0112372952/953, 0112360290/291.
e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

C-10120

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 08 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.